விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 354 ஐப்பசி 29ஆம் நாள் வியாழக்கிழமை 15 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM



**வடமாகாண**
**மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*

"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."
- மார்ட்டின் லூதர் -
(ஜேர்மனிய புரட்டஸ்தாந்து மதகுரு)

மகிந்தவுக்கு எதிராக

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று 122 எம்.பிக்கள் ஆதரவுடன் நிறைவேற்றம்

## கூட்டமைப்பும் ஜே.வி.பியும் இணைந்தன

கொழும்பு, நவ. 15
பெரும் சர்சைக்கும் பரபரப்புக்கும் மத்தியில் நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது. சபாநாயகரால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. 122 உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதாக சபாநாயகர் அறிவித்தார். >> 23

## மகிந்த இன்று சிறப்புரை

கொழும்பு, நவ. 15
தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் இன்று முக்கிய உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். >> 25



நாடாளுமன்றத்திலிருந்து மகிந்த நேற்று வெளியேறும்போது.

புதிய அரசமைப்பு நிறைவேற்றம் உள்ளிட்ட 6 கோரிக்கைகளுடன்

# ரணிலுக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு நிபந்தனை

## நேற்று ஒன்றரை மணி நேரச் சந்திப்பில் முடிவு எதுவும் இல்லை

கொழும்பு, நவம்பர் 15
பாதி வழியில் நிற்கும் புதிய அரசமைப்பு முயற்சிகளை முழுமையாக்கி அதனை நிறைவேற்று வேண்டும் என்பது உள்ளிட்ட 6 அம்சக் கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சியிடம் முன்வைத்துள்ளது. நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்று நடைபெற்றன. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 12 >> 25

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, நவ. 15
டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி என்றும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள் >> 25

## எந்த அடிப்படையில் மகிந்த உரையாற்றுவார்

ஹர்ச கேள்வி

கொழும்பு, நவ. 15
தலைமை அமைச்சர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ச நீக்கப்பட்டுவிட்டார். நாளை (இன்று) நாடாளுமன்றத்தில் எந்த அடிப்படையில் உரையாற்றுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி >> 25

see more news
newuthayan.com

## சபாநாயகரின் கடிதத்தை மைத்திரி ஏற்க மறுப்பு

கொழும்பு, நவ. 15
நாடாளுமன்றத்தில் மகிந்த அரசு மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அதற்கு ஆதரவாக 122பேர் கையெழுத்திட்ட ஆவணம் அடங்கிய கடிதத்தை அரச தலைவருக்கு அனுப்பி வைத்த >> 25

## பெரும்பான்மையை நிரூபிக்கும் கடும் முயற்சியில் ஐ.தே.கட்சி!

கொழும்பு, நவ. 16
புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்ற >> 24

## மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்த திட்டம்

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 15
விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான மகிந்த சமரசிங்க தெரிவித் >> 25

## ஐந்து பேர் கட்சி தாவினார்கள்

கொழும்பு, நவ. 15
மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மகிந்த அணியிலிருந்து ஐந்து பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார்கள்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப் >> 25

நாடாளுமன்றத்தில்

## தலைமை அமைச்சர் ஆசனம் யாருக்கு?

*இன்று குழப்பம் வரலாம்*

கொழும்பு, நவ. 15
நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடவுள்ள நிலையில், தலைமை அமைச்சர் ஆசனம் யாருக்கு வழங்கப்படும் என்பதில் குழப்பம் எழுந்துள்ளது.
நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது. >> 24

## இனியாவது அரசமைப்பை மைத்திரி பின்பற்றட்டும்

*கூறுகிறார் சம்பந்தன்* விரிவு பக்.02

## ரணில் மற்றும் சக கட்சித் தலைவர்கள் மைத்திரியுடன் நேரில் இன்று சந்திப்பு

கொழும்பு, நவ. 15
தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ள நிலையில், அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று >> 25

## சிவசக்தி ஆனந்தன் கையெழுத்திடவில்லை

கொழும்பு, நவ. 15
தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் விடு >> 25

## கூட்டமைப்புக்கு திரும்ப வியாழேந்திரன் முயற்சி

சம்பந்தன் அடியோடு மறுப்பு

கொழும்பு, நவ. 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வியாழேந்திரன், மகிந்த அணிக்கு கட்சி தாவி பிரதி அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருந்தார். இந்த நிலையில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு மகிந்த அரசு தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைவதற்கு வியாழேந்திரன் நேற்றுக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டபோதும், கட்சித் தலைவர் சம்பந்தன் அதனை அடியோடு நிராகரித்துவிட்டார். நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாவதற்கு >> 24

# மகிந்த பதவி விலகார்

## நாடாளுமன்றத்தின் நேற்றைய முடிவை ஏற்க அடியோடு மறுப்பு

கொழும்பு, நவ. 15
நாடாளுமன்றத்தில் என்ன வாக்கெடுப்பு நடந்தாலும், சபாநாயகர் என்ன தீர்மானம் வழங்கினாலும் மகிந்த ராஜபக்சவே தலைமை அமைச்சர். நாங்களே இந்த நாட்டின் அரசு. இதனை மாற்ற முடி >> 25

## இன்று மாலை பலத்த காற்று வீசக்கூடும்!

யாழ்ப்பாணம் நவ 15
வங்கக் கடலில் உருவாகியுள்ள கஜா புயல் இன்று மாலையில் கரையைக் கடப்பதன் கார >> 25

# இனியாவது அரசமைப்பை மைத்திரி பின்பற்றட்டும்

## கூறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இனியாவது அரசமைப்பை மதித்து அதனைப் பின்பற்றி செயற்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுப் புதன்கிழமைமகிந்தராஜபக்சவுக்கும், அவரது அமைச்சரவைக்கும்எதிராகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், இது குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திபு நாடாளுமன்றக் குழு அறையொன்றில்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம் இந்த நாட்டில் குழப்பகரமான நிலைமை நீடித்து வந்தது. பதவியில் இருந்த தலைமை அமைச்சர்மாற்றப்பட்டார். புதியநபர் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அது நடந்த விதம் அரசமைப்புக்கு முரணானது. புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டுநாடாளுமன்றம்ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் நாடாளுமன்றம்கலைக்கப்பட்டது. இந்தக் கருமங்கள் அனைத்தும் அரசமைப்புக்கு முரணாகவே இருந்தது. கொள்கை அடிப்படையில் இவற்றையெல்லாம் எதிர்ப்பதென எமது கட்சி முடிவெடுத்தது.

அரசமைப்புக்கு முரணான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக நீதி கோரி உயர்நீதி மன்றத்துக்கு எமது கட்சி சென்றது. கட்சிசார்பில்முதல் மனுவைநான்தாக்கல்செய்திருந்தேன். நேற்று (நேற்று முன்தினம்) உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கான அரசிதழ் அறிவித்தலும் ஏனைய விடயங்களும் சட்டத்துக்கும் அரசமைப்புக்கும்முரண்பட்டவையாக இருப்பதனால் அவற்றை இடைநிறுத்தி வைப்பதாக உயர்நீதிமன்றம் முடிவெடுத்தது.

அரசதலைவர்முதலில்நாடாளுமன்றத்தை இந்த மாதம் 16ஆம் திகதிவரை ஒத்திவைத்திருந்தார். பின்னர் அவர்மீதுபிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக நாடாளுமன்றத்தை 14ஆம் திகதி(நேற்று) கூட்ட அரசிதழ் அறிவித்தலையும்வெளியிட்டிருந்தார். அரசிதழ் அறிவித்தலின் அடிப்படையில் நாடாளுமன்றம் கூடியது. 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியில் நின்று புதிய தலைமைஅமைச்சர்மகிந்த ராஜபக்சமீதும், அவருடைய புதிய அமைச்சரவை மீதும் நம்பிக்கையில்லை என்ற முடிவை எடுத்துள்ளார்கள். இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அரசமைப்பை மதிப்பதற்கும் அதனைப் பின்பற்றுவதற்கும் எல்லோரும் முன்வ ரவேண்டும். அது அனைவருடைய கடமை என்றார். (5,10,31)

# பெரும்பான்மையை நிரூபித்துவிட்டோம்

## ரணில் வெற்றிப் பெருமிதம்

கொழும்பு, நவ. 15

நாடாளுமன்றத்தில் நாங்கள் பெரும்பான்மையை நிரூபித்துவிட்டோம். எங்களுக்கு பெரும்பான்மை இல்லைஎன்பவர்கள், நாடாளுமன்றத்தில் அவர்களுடைய பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுமாறு சவால் விடுக்கின்றேன்.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம்திகதிஅரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டார். அன்றிலிருந்து அலரிமாளிகையிலிருந்து ரணில் விக்கிரமசிங்க வெளியே வரவில்லை. நாடாளுமன்ற அமர்வுக்காக நேற்றைய தினம் வெளியேவந்தார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின்னர், நாடாளுமன்றக்குழு அறையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பின் 42ஆவது உறுப்புரையின் கீழ்மகிந்த அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதை உறுதிப்படுத்தினோம். தலைமை அமைச்சர் நீக்கப்பட்டமை, புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட மூன்று அரசிதழ்களும்இதன்மூலம்தோற்கடிக்கப்பட்டுள்ளன. மக்களின் ஆணையை உறுதிப்படுத்த வாக்கெடுப்பும் இடம்பெற்றது.

மக்களின் ஆணைக்கு வெற்றிகிடைத்தது. பெயரளவில் இருக்கும் அமைச்சரவைக்கும் கார்ப்போட் அமைச்சர்களுக்கும் எந்த அதிகாரமும் இல்லை.. இதனை அரச அதிகாரிகளுக்கும்பொலிசுக்கும்ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

அரச அதிகாரிகள் சட்டவிரோதே கட்டளைகளை பின்பற்றவேண்டாம். உயர்நீதிமன்றத்தின்இடைக்காலத்தடைஉத்தரவுமற்றும் நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் இவை அனைத்தும் சட்டத்துக்கு அப்பால் கொண்டுசெல்லும்ஆட்சியாகும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள்கைச்சாத்திட்டபுடிவத்தை சபாநாயகரிடம் கையளித்திருக்கின்றோம். இவ்வாறு எந்தத் தீர்மா னமும் எடுக்கவில்லை என்று யாராவது தெரிவிப்பதாக இருந்தால் அது நாடாளுமன்ற வ்ரப்பிரசாத்துக்கு எதிரானதாகும் - என்றார். (5,10,31)

# மகிந்த! ஐயோ பாவம்!!

## நாடாளுமன்றமும் இல்லை அலரிமாளிகையும் இல்லை

கொழும்பு, நவ. 15

அரசியல்வரலாற்றில்தலைமைஅமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் நாடாளு மன்றத்துக்கும் செல்லாமல், அலரி மாளிகைக்கும் செல்லாமல் பதவி விலகவுள்ள ஒரே தற்காலிக தலைமை அமைச்சராகமகிந்தராஜபக்சவேகாணப்படுகின்றார். இவ்வாறு தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா, ரணில் விக்கிரமசிங்கவை தமது கட்சி ஆதரிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில்நேற்றுச்செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மைத்திரிபாலவின் அரசமைப்புக்கு முரணானசெயற்பாட்டிற்கு உயர்நீதிமன்றம் தக்க பதிலடி கொடுத்துள்ளது. நீதித்துறை மீண்டும் மக்களாட்சியை நிலைநாட்டியுள்ளது. நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியதால் எதுவித தாக்கமும் இல்லைஎன்றுஎதிர்தரப்பினர்கூறுகின்றனர். மைத்திரி வெளியிட்ட அரசிதழ் அரசமைப்புக்குமுரணானதுஎன்றகாரணத்தினாலே உயர்நீதிமன்றம் இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்துள்ளது.


இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு நிச்சயம் நாடாளுமன்றத் தேர்தல் நடக்க வேண்டும். ஆனால்அதுநீதியானமுறையில் இடம்பெற வேண்டும். இரகசியமாக தலைமை அமைச்சரைத் தெரிவு செய்து அவரின் தலைமையில் இடைக்கால அரசை முன்னெடுத்து செல்வதற்காக திருட்டுத்தனமாகஅரசிதழைதேர்தலுக்கு வெளியிட்டு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவுவழங்காது.

**ரணிலுக்கு ஆதரவு இல்லை**

நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் நிரூபிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாத்திரமே மக்கள்விடுதலைமுன்னணிநம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சராக்குவதற்கு அல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார இந்தப்பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது, மகிந்தவும் அவரது கூட்டணியும் வலுக்கட்டாயமாக ஆட்சியைக் கைப்பற்றி சர்வாதிகாரப் போக்கில் செயற்பட ஆரம்பித்ததை அடுத்தே நாம் அனைவரும் நீதிமன்றம் செல்லதீர்மானம்எடுத்தோம். சபாநாயகர் கரு ஜயசூரிய நேர்மையாகத் தனது கடமையைச் செய்தார். அதேபோல் நீதிமன்றமும் நியாயமான தீர்வை வழங்கியது. அதற்கமையவேநாடாளுமன்றம்கூட்டப்பட்டது. அரச தலைவரின் அரசிதழ் அறிவித்தலின்படியேநாடாளுமன்றம்கூட்டப்பட்டது. நாடாளுமன்றக் கூட்டம் சட்டவிரோதம் அல்ல. அதேபோல் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு, நாடாளுமன்றம் கூடியமை மற்றும் நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டமை என்று அனைத்துமேஏற்றுக்கொள்ளப்பட்டவைதான்என்றார். (5,10,61)

## தம்படம் எடுத்து வெற்றியை கொண்டாடிய எம்.பிக்கள்



கொழும்பு, நவ. 15

மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றதை அடுத்து சபையில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் தம்படம் (செல்பி) எடுத்துத் தமது மகிழ்ச்சியைசமூகவலைத்தளங்களில் பதிவேற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், அகில இலங்கை மக்கள்காங்கிரஸ் உறுப்பினர்அமீர அலியுடன் தம்படம் எடுத்தார். ஐக்கியதேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்சுவாமிநாதன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்சிவமோகனுடன்தம்படம்எடுத்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களானவிஜயகலாமகேஸ்வரன், தலதா அத்துகோரள, ஹரின் பெர்னாண்டோ, அஜித்பெரேரா, ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்டவர்கள் கூட்டாக தம்படம் எடுத்துக்கொண்டனர். (5,61)

# முன்னாள் கிரிக்கெட் வீரர் டில்ஷான் மகிந்தவுடன் சந்திப்பு!



கொழும்பு, நவ. 15

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான திலகரட்ண டில்ஷான் மகிந்த ராஜபக்சவை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சந்திப்புக்கு முன்னர் மகிந்த தலைமையிலான பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்டு தமக்கானஉறுப்புரிமையைக்கட்சியின்தலைமையகத்தில் வைத்துப் பெற்றுக்கொண்டார். இந்நிலையில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து அவருக்கு ஆதரவு வழங்குவதாக டில்ஷான் தெரிவித்துள்ளார். (5,61)

# நான் என்றுமே ஐ.தே.க. உறுப்பினர்தான்

## கட்சி தாவிய வசந்த சேனாநாயக்க

கொழும்பு, நவ. 15
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மகிந்த அணிக்கு தாவி அமைச்சுப் பதவி பெற்றுக் கொண்ட வசந்த சேனாநாயக்க, தமது அமைச்சுப்பதவியை துறக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவருடைய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றுள்ளதாக லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், அமைச்சர் பதவியைத் துறக்கவுள்ளேன். நான் எதிர்பார்த்த பெரும்பான்மை கிடைக்கவில்லை. அரச தலைவரிடம் எனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பிப்பேன். நான் என்றுமே ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தான், என்று தெரிவித்துள்ளார். (5)

# நாடாளுமன்றத்துக்கு வெளியே பதற்றம்

கொழும்பு, நவ. 15
நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை நேற்று மகிந்த தரப்பு நிராகரித்துள்ள நிலையில், நாடாளுமன்றத்துக்கு வெளியே பதற்றநிலை ஏற்பட்டது.





மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்து, சபாநாயகர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்துக்கு வெளியே, அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மகிந்த அணி ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் இடையே மோதல் ஏற்படும் நிலமை உருவாகியது. பெருமளவு பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், கண்ணீர் புகைக் குண்டு அடிக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். சுமார் ஒரு மணி நேரம் பதற்றம் நீடித்தது. (5)

# இருப்பிடம் திரும்பிய வடிவேல் சுரேஸ்

கொழும்பு, நவ. 15
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மகிந்த பக்கம் தாவிய வடிவேல் சுரேஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேற்று மீண்டும் சங்கமித்ததுடன், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சுப் பதவியையும் துறந்தார்.



கடந்த 26ஆம் திகதி மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதும் அரசியல் குழப்பம் ஆரம்பமானது. மறுநாள் 27ஆம் திகதி காலை மகிந்த ராஜபக்சவுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்திருந்தார். 28ஆம் திகதி காலையில், அலரிமாளிகைக்குச் சென்ற வடிவேல் சுரேஸ், ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது, முதல்நாள் (கடந்த 27ஆம் திகதி) மகிந்தவைச் சந்தித்தது சம்பிரதாயத்துக்காகவே என்றும், தான் கட்சி தாவப் போவதில்லை என்றும் கூறியிருந்தார். 28ஆம் திகதி மாலை புதிய அமைச்சரவை பதவியேற்றது. இதன்போது வடிவேல் சுரேஸுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று மீண்டும் கட்சி தாவி, தனது இருப்பிடமான ஐக்கிய தேசிய கட்சிக்கே வந்து சேர்ந்தார்.

**நடந்தது என்ன?**

ஐக்கிய தேசியக் கட்சியினதும், அதன் பங்காளிக் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அறைகளை நோக்கிப் படையெடுத்தனர். அவ்வேளையில், ரவி கருணாநாயக்க, ஹரின் பெர்ணான்டோ ஆகியோருக்கு அழைப்பை ஏற்படுத்திய வடிவேல்சுரேஸ், தாம் மீண்டும் ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை அறிவித்தார். இதையடுத்து அவசரமாக இயங்கிய ரவி கருணாநாயக்க, திகாம்பரத்துடன் வடிவேலை தொலைபேசியூடாகப் பேசவைத்தார். மனோ கணேசனுடன் ஹரின் கலந்துரையாடினார். குழு அறைக்கு முன்னால் இவ்வாறு சந்திப்பு நடந்து கொண்டிருக்கையில், மின் உயர்த்திமூலம் அவ்விடத்துக்கு வந்த சுரேஸை ஐ.தே.க. உறுப்பினர்கள் வரவேற்றனர்.


அதன்பின்னர் ஊடகவியலாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்வரிசையில் அமர்ந்திருந்த வடிவேல் சுரேஸை, சஜித் பிரேமதாஸ முன்வரிசைக்கு அழைத்தார். அவ்வேளையில் ரணிலுடன் ஏதோ இரகசியம் பேசினார். ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துவெளியிட்டிருந்தாலும், தனிப்பட்ட ரீதியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுவதை வடிவேல் சுரேஸ் தவிர்த்தார்.

**நெட்டிசன்கள்**

இதேவேளை அடிக்கடி கட்சி தாவும் வடிவேல் சுரேஸை, சமூகவலைத் தளங்களில் பலரும் வறுத்தெடுத்தனர். வடிவேல் சுரேஸின் கட்சி தாவலைக் கிண்டலடிக்கும் வகையில் பல கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. 'எடேய்... உந்த உடம்பை வைச்சுக் கொண்டு அனுமன் கடல் தாண்டின மாதிரி கட்சி தாவுறியே.. கெட்டிக்காரன்தாண்டாப்பா!' என்று ஒருவர் பதிவிட்டிருந்தார். இதைப் போன்று பல பதிவுகள் சமூகவலைத் தளங்களில் நேற்று பரிமாறப்பட்டன. (5)

# பின்பக்கத்தால் ஓடிய மகிந்த

கொழும்பு, நவ. 15
நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில், மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது, மகிந்த அணியினர் கடும் குழப்பங்களை விளைவித்தனர். அதனையும் மீறி வாக்கெடுப்பு இடம்பெற்றது. வாக்கெடுப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே, மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்சவுடன் பின்பக்கமாக வெளியேறினார். (5)



# நாடாளுமன்ற அமர்வை நேரில் பார்வையிட்ட அமெ. தூதுவர்



கொழும்பு, நவ. 15
ஜனநாயகத்தைசெயற்படுத்துவதில் மீண்டும் ஒருமுறை அரசமைப்பு ரீதியான பாத்திரத்தை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றி வருகிறது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தனது கீச்சகப் பக்கத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பமானது. அமெரிக்கத் தூதுவர் அமர்வை நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டார். நாடாளுமன்ற அமர்வை ஒளிப்படம் எடுத்து தனது கீச்சகத்தில் பதிவிட்டி ருந்தார். (5)

# மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும்

கொழும்பு, நவ. 15
நாட்டுமக்களின் ஆணைக்கு மதிப்பளித்தும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கும் செவி சாய்த்து அரச தலைவர் செயற்பட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் கொந்தளிப்புக்கள், குளறுபடிகள் நீங்கி நாட்டில் அமைதியானதும், சமாதானதுமான சூழல் ஏற்படுவதற்கு அரச தலைவர் வழிவகுக்க வேண்டும். சுதந்திரத்துக்குப் பின்னர் பல விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றை எல்லாம் முடிவுக்கு கொண்டு வரும் நோக்கிலேயே, பெரும்பாலான சிறுபான்மை மக்கள் நிம்மதி, சமாதானம் மற்றும் சந்தோசத்தை எதிர்பார்த்தவர்களாக மைத்திரிக்கு ஆதரவளித்து அவரை நாட்டுத் தலைவராக்கினர்.

கடந்த 26 ஆம் திகதி அவரால் இழைக்கப்பட்ட மாபெரும் தவறு, அதன்பின்னர் அடுத்தடுத்து முன்னெடுக்கப்பட்ட பிழையான விடயங்கள் காரணமாக, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கில் நீதிமன்றத்தின் தயவை நாடினோம். ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையிலே தீர்ப்பு வழங்கப்பட்டது.

அவரால் நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவையும் புதிய அமைச்சரவையையும் நிராகரிக்குமாறு 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு, சபாநாயகரிடம் கையளித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு நாங்கள் கையை உயர்த்தி விருப்பம் தெரிவித்துள்ளோம் என்றார். (5)

## நாட்டின் ஜனநாயகத்தை மதித்து அமைச்சு பதவியை கைவிட்டேன்

மனுச நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு.நவ.15
நான் அமைச்சர் பதவியைக் கைவிட்டது நாட்டின் ஜனநாயக நீதிக்காகவே. இந்தப் பாதையில் பயணிக்க மேலும் சில சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் விரும்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
"நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் சட்டவிரோத தலைமை அமைச்சர் உள்ளிட்ட அரசை விரட்ட முடிந்தது. இது ஜனநாயகத்தின் திருப்புமுனை. இன்றும்(நேற்று) சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர் எம்முடன் இணைந்துள்ளனர். இதேபோல் எம்முடன் சிலர் இணையவுள்ளனர்" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)


# வெளியே எதிர்ப்பு, உள்ளே சிரிப்பு






கொழும்பு.நவ.15
நாடாளுமன்ற அமர்வு நேற்றைய தினம் ஆரம்பமாவதற்கு முன்னர், நாடாளுமன்ற வளாகம் முழுவதும் பரபரப்பாகக் காணப்பட்டது. இரண்டு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், நேரத்துடனேயே சபைக்கு வந்தார்கள். கட்சித் தலைவர்கள் கூட்டம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமானதால், பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்கூட் டியே சபைக்குச் சென்றனர்.
கடந்த சிலநாள்களாக கீரியும் பாம்புமாக மோதிக் கொண்டிருக்கும் மகிந்த-மைத்திரி அணி மற்றும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் ஒன்றாகக் கட்டி அணைத்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது.
ஐ.தே.கவின் அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வாவும் கட்டியணைத்துச் சிரித்தபடி உரையாடிக் கொண்டிருந்தனர். அதுபோன்று நாமல் ராஜபக்ச மற்றும் கெஹலிய ரம்புக்வெல ஆகியோருடன், சரத் பொன்சேகா, ரவி கருணாநாயக்க ஆகியோர் சிரித்தபடி அளவளாவிக் கொண்டிருந்தனர். (ஐ)

## நாடாளுமன்ற வளாகத்தில் சூடு பிடித்த வியாபாரம்





நாடாளுமன்ற அமர்வு நேற்யைதினம் கூடப்பட்ட நிலையில் வளாகத்தில் களைகட்டியது ஐஸ்பழ வியாபாரம்

## வாக்கெடுப்புக்குப் பயந்து ஓடுபவர்கள் ஜனநாயகத்துக்கும் பயந்தவர்கள்தான்!

சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு.நவ.15
"நாடாளுமன்றில் வாக்கெடுப்பு ஒன்றை அறிவிக்கும் போது அதற்குப் பயந்து யாராவது வெளியேறுவார்களாயின் அவர்கள் ஜனநாயகத்துக்குப் பயந்தவர்களாகவே அர்த்தப்படுவர்" என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாச தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்றுக் கூடி மகிந்த தலைமையிலான அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.
இதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் எடுத்த அனைத்து முயற்சிக்கும் சபாநாயகர் கரு ஜயசூரிய கூறியது, சபையில் பேசித் தீர்மானிப்போம், வாக்கெடுப்புக்கு விடுவோம், ஜனநாயக ரீதியில் முன்னெடுப்போம் என்றார். ஆனால் பெரும்பான்மை இல்லாதவர்கள் இவை அனைத்தையும் முறியடிக்கும் விதமாகவே செயற்பட்டனர்.
நாடாளுமன்றில் பெரும்பான்மை இருப்பது மக்களின் பெரும்பான்மையை பெற்ற அமைச்சர்களுக்கு. ஆனால் அவர்களுக்குப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது போய்விட்டது.
பெரும்பான்மையை நிரூபிப்பதற்குப் பதிலாக அவர்கள் பலாத்காரத்தின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தனர். ஜனநாயக ஆட்சியை கொண்ட நாட்டில் பலாத்காரத்துக்கு இடமில்லை.
நாடாளுமன்றில் வாக்கெடுப்பு ஒன்றை அறிவிக்கும் போது அதற்கு பயந்து யாராவது வெளியேறுவார்களாயின் அவர்கள் ஜனநாயகத்துக்குப் பயந்தவர்களாகவே அர்த்தப்படுவர்.
தற்காலிகமாகப் பதவியேற்று, ஆட்சி எங்கள் கைகளில் எனக் கூறியவர்களுக்குப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமைப் போனது. இது தான் கசப்பான உண்மை. இது தான் சத்தியம்.
எனது நோக்கம் தலைமை அமைச்சுப் பதவி அல்ல. மாறாக இந் நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றாக திரட்டி நாட்டை அபிவிருத்தியடையச் செய்தலாகும்.
எதிர்வரும் காலங்களில் நாம் அனைத்து செயற்பாடுகளையும் கட்டம் கட்டமாக தீர்மானம் மிக்க தாகவும் மனிதாபிமானத்தோடும் முன்னெடுத்துச் செல்வோம்" - என்றார்.

# மனநோய் பிடித்தவர்களை மருத்துவமனையில் சேர்க்கவேண்டும்

## கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு.நவ.15
தாமே தலைமை அமைச்சர் எனக் கூறும், மன நோய் பிடித்தவர்களை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என புத்தசாசன, சமய அலுவல்கள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் அரசியல் குழப்பநிலைக்கு மத்தியில் அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் மாலை கண்டிக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மக்கள் மத்தியில் சென்றால் பெரியளவில் தண்டனைக் கிடைக்கும் என்று இவர்களுக்கு தெரியும். கடந்த நான்கு வருடங்களில் நாட்டுக்கும், இராணுவத்தினருக்கும். தேசிய சொத்துக்களுக்கும், பொருளாதாரத்துக்கும், வறுமையில் வாழும் மக்களுக்கும் இவர்கள் செய்த துரோகங்களுக்குத் தண்டனைக் கொடுக்க மக்கள் காத்திருக்கின்றனர்.
இதற்கு அஞ்சியே அவர்கள் அழுது நீதிமன்றத்தை நாடியுள்ளனர். நாட்டில் இதுவரை காலமும் உத்தியோக பூர்வமான தலைமை அமைச்சரைத் தவிர, நானே தலைமை அமைச்சர் எனக் கூறிக் கொண்ட சிலர் மனநல மருத்துவமனையிலேயே இருந்தனர். அந்த மனநல மருத்துவமனையின் தடுப்புச்சுவர் உடைந்து விட்டதா? என எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இன்று பல இடங்களில் நான் தான் தலைமை அமைச்சர், எனக் கூறிக்கொண்டு சிலர் அலைகின்றனர். அவர்களை குண மாக்க வேண்டியது, அவர்களது உறவினர்களின் பொறுப்பு. அவர்களின் நோய் அவர்களுக்கு தெரியாது. மற்றையவர்கள் தான் அவர்களை அழைத்துச் சென்று குணமாக்க வேண்டும்.
எமக்கு யாரும் சவாலானவர்கள் இல்லை.. இந்த நாட்டு மக்களின் தேவை அறிந்து அவர்களுடன் இருக்கும் வரையில் யாரும் எங்கிருந்து வந்தாலும் எமக்குச் சவால் இல்லை " - என்றார். (ஐ)

# தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



**கொழும்பு, நவ.15**
**நாடாளுமன்றத் தேர்தலுக்கான செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தி வைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், அரச தலைவரின் அரசிதழ் அறிவிப்புக்கு இடைக்காலத் தடைவிதித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கான செயற்பாடுகளையும், உடனடியாக இடைநிறுத்துமாறும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், உயர் நீதி மன்றத்தின் உத்தரவுக்கு அமைய, தாம் தேர்தல் செயற்பாடுகள் அனைத்தையும் நேற்றுமுன்தினம் மாலையுடன் நிறுத்தி வைத்திருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள் ளார். தேர்தல் செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தி வைக்குமாறு உதவித் தேர்தல் ஆணையாளர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாடு முழுவதும் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு.நவ. 15
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் அரச தலைவரின் உத்தரவுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்ததை யடுத்து, நாடு முழுவதும், பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



சிலதரப்புக்கள் குழப்பங்களை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளதால், பொலிஸாரை விழிப்புடன் கண்காணிக்குமாறும், பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

நேற்றிமுன்தினம் இரவு அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இந்த அவசர உத்தரவு அனுப்பிவைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கட்சிகளின் ஆதரவாளர்கள் குறுகிய நோக்கங்களுக்காக நாசவேலைகளில் ஈடுபடக் கூடும்.

மக்களின் நாளாந்த வாழ்வு இயல்பான நிலையில் இருப்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பொலிஸார் தமது பகுதியில் எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான அறிக்கைகளை இரண்டு நாள்களுக்குள் எமக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# சபாநாயகருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் கிடையாது

## கூறுகின்றார் நாமல்

பக்கச்சார்பாகச் செயற்படும் சபாநாயர் கரு ஜயசூரியவுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த மூன்றரை ஆண்டுகளாக சபாநாயகர் கரு ஜயசூரிய இவ்வாறாகப் பக்கச்சார்பான செயற்பாடுகளை முன்வைத்து வருகின்றார். நிலையியற் கட்டளைகளை மீறிச் செயற்படும் கரு ஜயசூரியவின் அண்மைய செயற்பாடுகள் அரசியல் ரீதியான பக்கச்சார்புத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. ரணில் விக்ரமசிங்கவுக்கு 113 உறுப்பினர்கள் பலம் இருப்பதாக உறுதியானால் ஆவணமொன்றைக் கையொப்பமிட்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறான ஒரு நிலமையில் தலைமைஅமைச்சர் மகிந்தராஜபக்சபதவி விலகுவார். மாறாக இவ்வாறான காரியங்களில் ஈடுபடக்கூடாது. இன்றைய (நேற்று) நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக் குறித்த விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. நிறைவேற்று அதிகார அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் சபாநாயகருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் கிடையாது" -என்றார். (ஐ)

# இலங்கை மீது பன்னாட்டு அழுத்தங்கள் தேவை

## அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.15
இலங்கை மீது பன்னாட்டு அழுத்தங்களை அதிகரிப்பது தற்போது முக்கியம் என்று ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரச தலைவரின் உத்தரவுக்கு, உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தமை தொடர்பில் சமந்தா பவர் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "தான்புதிய தலைமைஅமைச்சராக முன்மொழிந்த - போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகமாகக் குற்றம்சாட்டப்படும், மகிந்த ராஜபக்சவை முன் கொண்டு வருவதற்காக, நாடாளுமன்றத்தைக் கலைத்த அரச தலைவர் மைத்திரியின், முடிவுக்கு உயர் நீதிமன்றம் தடை செய்துள்ளது.

இலங்கையில் உள்ள நிறுவனங்கள் வளைகின்றன. ஆனால் உடையவில்லை. பன்னாட்டு அழுத்தங்களை அதிகரிக்க வேண்டியது முக்கியம்" என்று அவர் கீச்சகத்தில் கூறியுள்ளார். (ஐ)

# சபாநாயகர் முட்டாள்தனமாகச் செயற்பட்டார்

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, நவ.15
சபாநாயாகர் கரு ஜயசூரிய முட்டாள்தனமான செயலைச் செய்துள்ளார் என்று தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க மற்றும் விஜித ஹேரத் ஆகியோரால் முன்வைக் கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பெரும்பான்மை கிடைத்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து நாடாளுமன்றில் ஏற்பட்ட அமளி துமளி ஏற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இன்று காலை 10 மணி வரை நாடாளுமன்றை ஒத்திவைக்கும் ஆலோசனையை முன்வைத்தார்.

லக்ஸ்மன் கிரியெல்லவின் முன்மொழிவுக்கு பெரும்பான்மை கிடைத்தையடுத்து சபாநாயகர் நாடாளுமன்றைத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஊடகவியாலளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகரிடம் நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். உங்களால் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது. நாடாளுமன்றை அவமதித்துள்ளீர்கள் நிலையியற் கட்டளைகள் பின்பற்றபட வேண்டும். வாக்கெடுப்புக்கு அழைப்பதாக இருந்தால் அது இலத்திரனியல் வாக்கெடுப்பாக அமைய வேண்டும் என்றவாறான கோரிக்கைகள் விடுத்தோம். ஒரு சாராரை மாத்திரம் வாக்கெடுப்புக்கு சபாநாயகர் அழைக்க முடியாது.

நாடாளுமன்றை கீழ்ப்படுத்தி அரசமைப்பை அவமதித்துள்ள சபாநாயகர் முட்டாள் தனமான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளதாகவே நான் தெரிவிக்கிறேன் - என்றார்.

# வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தபா

நாடாளுமன்றத்தில் கொண்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலமே தலைமை அமைச்சரைப் பதவியில் இருந்து நீக்க முடியும் என்று கூறி மாட்டிக் கொண்டுள்ளார் அமைச்சர் பைசர் முஸ்தபா.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து, அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் இரவு அவசர செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அதில் நிமல் சிறிபால டி சில்வா, தினேஸ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, சுசில் பிரேம்ஜயந்த, பைசர் முஸ்தபா உள்ளிட்டோர் உரையாற்றினர்.



இங்கு உரையாற்றிய அமைச்சர் பைசர் முஸ்தபா, "நாடாளுமன்றத்தில் கொண்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் மட்டுமே தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவைப் பதவியில் இருந்து நீக்க முடியும்" என்று கூறியிருந்தார். இந்தக் கருத்து, ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கிய அரச தலைவரின் செயலுக்கு முரணானதாகும்.

இதன் மூலம், அமைச்சர் பைசர் முஸ்தபா தமது வழிக்கு வந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தலைமை அமைச்சுப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க பதவிநீக்கப்பட்டது அரசமைப்புக்கு முரணானது என்பதை, அரச தலைவரின் கட்சி ஒப்புக் கொண்டிருக்கிறது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

# இறைச்சிக்கடைவிவகாரத்தால் சாவ. நகர சபையில் காரசாரம்

சாவகச்சேரி, நவ. 15

**சாவகச்சேரி நகர சபையால் அடுத்த வருடத்துக்கான கேள்வி அறிவித்தலில் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவது தொடர்பில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற சபையின் அமர்வில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.**

சாவகச்சேரி நகர சபையில் இறைச்சிக் கடைகள் தொடர்பான விவகாரங்களும், சட்டவிரோத கொல்களங்கள் தொடர்பான விவகாரங்களும்ஏற்கனவேபூதாகரமான நிலையிலேயே உள்ளன. மாடுகள், ஆடுகள் என்பன அனுமதியில்லாத இடத்தில் சட்டவிரோதமாக கொல்களம் அமைத்து வெட்டப்படுகின்றமை சபையின் உறுப்பினர்களால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சபையில் அண்மையில் பெரும் அமளிதுமளி நடைபெற்று நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

நீதிமன்றில் வழக்கு முடியும் வரை அடுத்த வருடக் கேள்வி அறிவித்தல் மூலம் மாட்டிறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவது தற்காலிகமாக நிறுத்தப்படல் வேண்டுமெனசபைஉறுப்பினர்சு.நிதிகேசன்கடந்த அமர்வில் தெரிவித்தார்.

மாட்டிறைச்சிக் கடைக்கான கேள்வி அறிவித்தலை இடைநிறுத்துவதால் சபைக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுமெனவும் இதனால் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாதெனத் தவிசாளர் கூறினார்.

மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு விட வேண்டாமெனஒருசாராரும், குத்தகைக்கு விடவேண்டுமெனஒருசாராரும்கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தென்மராட்சியில் மாட்டிறைச்சி உண்போரின் எண்ணிக்கை அதிகம் உள்ளதால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சபை ஈடுபடக்கூடாது என்று உறுப்பினர் க. சிவராசா கருத்துத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் நீண்ட நேரம் வாதிக்கப்பட்டது.

இதையடுத்துசிறப்புஅமர்வைநடத்திஇந்த விடயம் தொடர்பில் முடிவுசெய்வது என்று தீர்மானிக்கப்பட்டது என்று தவிசாளர் திருமதி சிவமங்கைதெரிவித்தார். (ம-9,159)




## விபத்து

சாவகச்சேரி, நவ. 15

கொடிகாமம் தொடருந்து நிலையத்துக்கு அருகில் இரண்டு டிப்பர் வாகனங்கள்நேருக்குநேர்மோதிக்கொண்டதில்ஒருடிப்பர்குடை சாய்ந்ததில்சாரதி காயமடைந்தார்.

குடைசாய்ந்த டிப்பரின் சாரதியான கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். (ம-9)

## பரிசளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தவிழாவில்பருத்தித்துறை பிரதேசசபைத் தவிசாளர் அ.சா.அரியகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

***


வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத்தவிசாளர்அ.சா.அரியகுமார்கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி சி.திரவியராசா கலந்து கொள்ளவுள்ளார்.

***

கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பும் ஒளிவிழாவும் இன்று வியாழக்கிழமைகாலை 9.30மணிக்குப்பாடசாலைமண்டபத்தில்ஆசிரியர்பி.ஜெயரட்ணராஜாவின்தலைமையில் நடைபெறவுள்ளன. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்நிர்வாகச்செயலாளர்எவ்.எக்ஸ். குலநாயகம்நிகழ்வில்முதன்மைவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-173,17)



கொடிகாமம்திருநாவுக்கரசுமத்தியகல்லூரியின்ஒளிவிழா கடந்த திங்கட்கிழமை நண்பகல் 11 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்ட பத்தில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ம)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வடமாராட்சி கிழக்கு அம்பன்கொட்டோடை கிராமத்தில் 6 ஆயிரம் பனைவிதைகள் அண்மையில்நடப்பட்டன. தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் ஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-160)

## பாதுகாப்பற்ற பயணத்தால் மூவர் காயம்

சாவகச்சேரி, நவ. 15

சாலை வளைவில் உந்துருளிச் சில் சறுக்கியதில் தலைக்கவசமின்றி பயணித்த மூவர் காயமடைந்தனர். இந்தச்சம்பவம்கடந்தஞாயிற்றுக்கிழமை மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

17 வயதுடைய சிறுவனும், 19 வயதுடைய இளைஞர்கள் இருவருமே அவ்வாறுகாயமடைந்தனர். காயமடைந்த மூவரும்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

17வயதுடையசிறுவன்யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்குமாற்றப்பட்டார். (ம-9)

## நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களைத் தூய்மைப்படுத்துக

### சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் கோரிக்கை

சாவகச்சேரி, நவ. 15

சாவகச்சேரிநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுப்பதற்காக குடியிருப்பாளர்கள் இயலுமான வரைக்கும் ஒத்துழைக்க வேண்டும் என்று நகர சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.



அண்மையில் பெய்த மழையால் டெங்கு பரவக்கூடிய ஏதுநிலைகள் உருவாகியுள்ள காரணத்தாலேயே குடியிருப்பாளர்கள், தமது காணிகள், குடியிருப்புகள், சாலையோரங்கள் ஆகியவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய செடிகள், பற்றைகள், மரக்கிளைகள்மற்றும்பாவனைக்குதவாத பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்டநீர்ஏந்துபொருள்கள்காணப்படின் அவற்றினை அப்புறப்படுத்துமாறுநகரசபையின்தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ம-9)



அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் ஆண்டுவிழாவும் பரிசளிப்புவிழாவும்கடந்த9ஆம்திகதி வெள்ளிக்கிழமைபிற்பகல் ஒருமணிக்கு பாடசாலையின் டானியல்பூவர் அரங்கில் நடைபெற்றன. (ம-9)

## விபத்துக்களில் இருவர் சாவு

சாவகச்சேரி, நவ. 15

தென்மராட்சியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றஇருவேறுவாகன விபத்துக்களில்இருவர்உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் சந்தையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு நடந்து சென்ற காந்தரூபன் கார்த்திகா (வயது -32) என்ற குடும்பப் பெண் ஏ-9 சாலையில் வந்த கப் ரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குமாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரியிலிருந்துநாவற்குளிநோக்கிச் சென்றஉந்துருளிநுணாவில்மேற்கில் சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்களை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் சாலையின் மறுபக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்துடன் மோதியதில் அதில் பயணித்த தச்சன்தோப்பைச் சேர்ந்த கஜேந்திரன் சுஜேந்திரன் (26 வயது), கோவிலாக்கண்டியைச் சேர்ந்த யோகராசா வசீகரன் (வயது 30) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குஅனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களில் கஜேந்திரன் சுஜேந்திரன்சிகிச்சைபயனளிக்காமல் உயிரிழந்தார். (ம-9,159)

# சூரன்போர் நிகழ்வுகள்

## நாவற்குழி சித்திரவேலாயுதர்

நாவற்குழி சித்திரவேலாயுதர் கோவில் சூரசம்ஹாரம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



## மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார்

கந்த சஷ்டி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் திருமுருகன் கருமாரி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சூரசம்ஹாரம் இடம்பெற்றது. தொடர்ந்து முருகப் பெருமானுக்கு பஞ்சா ராத்தி காண்பிக்கப்படுவதையும் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்




## தம்பசிட்டி மாயக்கைப்பிள்ளையார்

வடமராட்சி தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சூரசம்ஹார நிகழ்வு நடைபெற்றது.



## ஞானப்பழனி முருகன் ஆலயம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



## மாலைசந்தை சிறி பிள்ளையார்

வடமராட்சி மாலைசந்தை சிறி பிள்ளையார் ஆலயத்தில் கந்தசஷ்டி சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.



## மன்னார் பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

மன்னார் பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய கந்த சஷ்டி உற்சவ சூரன் போர் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றது.



## மல்லாவி திருநகர் முருகன் ஆலயம்



மல்லாவி திருநகர் முருகன் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

## அளவட்டி சித்தி விநாயகர்

அளவட்டி பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

(ம-7,8,9,159,222,56,422,17)



### பன்னாட்டுச் சந்தையில்

# டொலரின் பெறுமதி அதிகரிப்பால் உ.கிழங்கின் விலையும் எகிறியது!

**யாழ்ப்பாணம், நவ. 15**

**டொலருடைய பெறுமதி அதிகரித்ததால் பன்னாட்டுச் சந்தையில் விதை உருளைக் கிழங்கின் விலை அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் 2 ஆயிரத்து 200 ரூபா உயர்ந்துள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்காக 224 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் இந்த விதை உருளைக் கிழங்குகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. கடந்த வருடம் 50 கிலோ



விதை உருளைக் கிழங்குப் பொதி 14 ஆயிரமாக இருந்தது. இந்த வருடம் 16 ஆயிரத்து 200 ரூபாவாக அதிகரித்துள்ளது. பன்னாட்டுச் சந்தையில் அமெரிக்க டொலருக்கு ஏற்பட்ட விலை அதிகரிப்பே விதை உருளைக் கிழங்கின் அதிகரித்த விலைக்குக் காரணம் என்று தெரியவருகிறது. இந்த விதை உருளைக் கிழங்குகள் 50 வீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஹெரோயினை வைத்திருந்த குற்றச்சாட்டில் நாவற்குழியில் பெண்ணொருவர் கைதானார்

## அவரை விளக்கமறியலில் வைத்தது மன்று

சாவகச்சேரி, நவ. 16

போதைப் பொருளான ஹெரோயினை வைத்திருந்த குற்றச்சாட்டில் நாவற்குழிப் பகுதியில் பெண்ணொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 190 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குழிப் பகுதியில் போதைப் பொருள்கள் பரிமாறப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து சாவகச்சேரி பொலிஸார் சிவில் உடையில் அந்தப் பகுதியில் நடமாடியுள்ளனர். இதன்போது நாவற்குழி ஐயனார் கோவிலடிப் பகுதியில் போதைப் பொருளைக் கைமாறச் சென்ற வேளையில் சிவில் உடையில் நின்ற பொலிஸார் பெண்ணைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 190 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண்ணுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் 23ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

இதேபோன்று, நுணாவில் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபரைச் சோதனையிட்டபோது அவரிடம் கஞ்சா வைக்கப்பட்டிருந்த சுருட்டுகள் இருந்தமையைக் கண்டு அவரையும் கைது செய்த பொலிஸார், சந்தேக நபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது அவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ம-9)

## உந்துருளிகள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்

சாவகச்சேரி, நவ.15

சாவகச்சேரியில் இரண்டு உந்துருளிகள் நேருக்குநேர் மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளி எதிர்த் திசையில் வந்த உந்துருளியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

உவைஸ் முகமட் றக்ஸான் (வயது- 23), யோகராசா கொலின் (வயது -21) ஆகியோரே அவ்வாறு காயமடைந்தவர்களாவர். (ம-9)

## கலாசாரப் பெருவிழா பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ. 15

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகத்தால் இன்று நடத்தப்படவிருந்த கலாசாரப் பெருவிழா பிற்போடப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாரப் பெருவிழாவொன்றை நடத்தவிருந்தது. இந்தப் பெருவிழா நாட்டில் அசாதாரண காலநிலை எதிர்வுகூறப்பட்டுள்ள காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஓவியத் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், நவ. 15

ஈழத்தின் மூத்த எழுத்தாளரான காலஞ்சென்ற இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் திருவுருவ ஓவியத்திரைநீக்கம் நாளை இடம்பெறவுள்ளது.

மருதனார்மடத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை நண்பகல் 11 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம)



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய சமைத்த உணவில் முறைகேடு

## மாவட்டச் செயலரால் விசாரணை முன்னெடுப்பு

**கிளிநொச்சி, நவ.15**

**கிளிநொச்சியில் பெய்த கடும் மழை காரணமாகப் பொது நோக்கு மண்டபங்களில் தங்கியிருந்த மக்களுக்கு சமைத்த உணவு விநியோகிக்கப்பட்டது. அதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.**

பொது நோக்கு மண்டபங்களில் தங்கியிருந்தவர்களுக்கு உடனடியாகச் சமைத்த உணவுகளை இராணுவத்தினரும், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ரஜனிகாந்தும் வழங்கியிருந்தனர்.

தொடர்ந்து மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவுகளை வழங்குவதற்கு, ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 300 ரூபா வீதம் நிதி ஒதுக்கியது. கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவு அமைப்பிடம் விநியோகப்பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கூட்டுறவு அமைப்பானது ஒதுக்கப்பட்ட நிதிக்கு அமைவாக உணவை வழங்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட பொது மக்களும், பிரதேச அமைப்புகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

இரவு உணவாக அரை இறாத்தல் பாண், பருப்புக்கறி வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 40 ரூபா.

மறுநாள் காலை உணவாக, இடியப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 60 ரூபா. அன்றையதினம் ஒவ்வொருவருக்கும் அரைப்பார்சல் பொதி செய்யப்பட்ட மதிய உணவை வழங்கியுள்ளனர்.



இது தொடர்பில் சங்கத்தின் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது:

மேலதிகாரிகளால் அவ்வாறு வழங்குமாறு பணிக்கப்பட்டதாகவும் அதற்கமைவாகவே வழங்கியுள்ளோம் எனவும் பதிலளித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

200 ரூபாவுக்குச் சாதாரணமாக அரைப் பார்சல் வழங்கியுள்ளனர் என்றும், மக்களுக்கான நிதியை இவ்வாறு முறைகேடு செய்வது கவலையளிக்கிறது என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளதோடு, மாவட்டச் செயலருக்கு இது தொடர்பில் தங்களின் மக்கள் அமைப்புக்கள் மூலம் முறையிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டபோது இது தொடர்பான விசாரணை ஒன்றை அமைத்து உடனடியாக விசாரணை செய்யப்படவுள்ளது என்று குறிப்பிட்டார். (35)

---

### தென்னைச் செய்கையாளர்களுக்கான மானியக் காசோலை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.15

கிளிநொச்சி மாவட்டத்தில் 225 தென்னை செய்கையார்களுக்கான, மானியக் காசோலை நாளை 16 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்தியத் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் பனாளிகளுக்குப் பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறன. சேதனப் பசளையிடல், தொலமைற் பசளையிடல், நீர்ப்பாசனம் போன்ற பல்வேறு பயிர்ச் செய்கை முறைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு வருடத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 225 பயனாளிகள் உள்ளனர். அவர்களுக்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளன. 1.2 மில்லியன் ரூபா மானியத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்டச் செயலர் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (7)








### வள்ளிபுனம் பகுதியில் பாரஊர்தி விபத்து

முல்லைத்தீவு, நவ.15

முல்லைத்தீவு. புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விறகு கொண்டு சென்ற பாரஊர்தி ஒன்று வள்ளிபுனம் பகுதியில் ரயர் வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

கடந்த 12 ஆம் திகதி மாலை புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து, யாழ்ப்பாணத்துக்கு விறகு கொண்டுசெல்லும் பார ஊர்தி வள்ளிபுனம் பகுதியில் சென்றபோது, ரயர் வெடித்து, வீதியின் அருகில் உள்ள மரம் ஒன்றில் மோதி விபத்துக்கு உள்ளாகி நொருங்கியுள்ளது. பயணித்த சாரதி தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளதுடன் வீதியால் பயணித்தவர்களுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ரி3)

### பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

புதுக்குடியிருப்பு,நவ.15

விசுவமடு மத்தி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் 13 ஆம் திகதி 10.30 மணிக்கு இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை சமூகசேவை உத்தியோகத்தர் விக்ரர் ஜெயசிங்கம் கலந்து கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வில் தலைவராக இ. காந்தன், உபதலைவர் த. சிவசந்திரமூர்த்தி செயலர், ஞா.சஜுபன், உபசெயலர் கா.மதிவண்ணன், பொருளாளர் திருமதி ந.கேதினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், உறுப்பினர்களாக க.குலசிங்கம், சு.துஸ்யந்தன், திருமதி தி.றயூலா, மா. றமேஸ், வை.சசிதரன், ஆ.செல்லத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (222)

### கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையினரால் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பு

முல்லைத்தீவு,நவ.15

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில், நேற்று முன்தினம் தொடக்கம் கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

முதன்மை வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் அதிகரிப்பால், விபத்துக்கள் பல ஏற்பட்டுள்ளன.

முள்ளியவளை- ஒட்டுசுட்டான் முதன்மை வீதி மற்றும் தண்ணீரூற்று- நெடுங்கேணி வீதி, தண்ணீரூற்றுச் சந்தி- சிலாவத்தை வீதி உள்ளிட்ட முதன்மை வீதிகளில் நிற்கும் கட்டாக்காலி கால்நடைகளை, தொடர்ச்சியாக இரவு வேளைகளில் பிடிக்கும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாகவும், நேற்று முன்தினம் இரவு 18 மாடுகள் பிரதேச சபையினால் பிடித்து கட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரி3)

## வவுனியா நகரசபையால் கட்டாக்காலிகள் பிடிப்பு



வவுனியா, நவ.15

வவுனியா நகரசபை எல்லைக்குள் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் அனைத்தும் தொடர்ச்சியாகப் பிடிக்கப்படவுள்ளதாக வவுனியா நகரசபையால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் எல்லைக்குள் சுற்றித்திரியும் கட்டாக்காலி மாடுகளால், போக்குவரத்துப் பாதிக்கப்படுவதுடன், அடிக்கடி விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பாகச் சபை அமர்வுகளில் உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

அதற்கமைவாகக் கட்டாகாலி மாடுகள் பகுதியளவில் பிடிக்கப்பட்டுவந்தது.

எனினும் "நகரசபைக் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255 க்கு அமைவாக" நேற்று முதல் தொடர்ச்சியாகக் கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்படும் என்று நகரசபை அறிவித்துள்ளது.

பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளை அதன் உரிமையாளர்கள் மூன்று நாள்களுக்குள் தண்டப்பணத்தைச் செலுத்தி மீளபெற்றுக் கொள்ளமுடியும். மூன்று நாள்களுக்குப் பின்னர் பிடிக்கப்பட்ட மாடுகள் ஏலத்தில்விடப்படும் எனவும் வவுனியா நகரசபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வட்டாரரீதியாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகிறது. (110)

## வாய்க்கால்கள் சீரமைப்பு



வவுனியா, நவ.15
வவுனியா நகரசபையின் பத்தாம் வட்டாரமான கோவில்குளம் பகுதியிலுள்ள வீதிகளில் நீர் வடிந்தோட முடியாத நிலைமை காணப்பட்டது. வட்டாரத்தின் நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கத்தின் கவனத்துக்கு இந்த விடயம் பொதுமக்களால் கொண்டுவரப்பட்டதுடன், அவரது முயற்சியின் பயனாக வவுனியா நகரசபையால் வடிகால்கள் சீரமைக்கப்பட்டன. (110)

## வவுனியா பொது மலசலகூடத்தில் துர்நாற்றம் வீசுவதாக முறைப்பாடு

### உப தவிசாளர் நேரில் பார்வை

**வவுனியா, நவ.15**
**மழையுடனான நிலையின்போது மலசல கூடத்திலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. பொது மலசல கூடம் சுத்தமின்றிக்காணப்படுகின்றது. மலசலகூடத்தின் கழிவுகள் வாய்க்காலினூடாக வெளியேறுகின்றன.**

இவ்வாறு வவுனியா நகரசபையின் உபத்விசாளருக்கு முறையிடப்பட்டது. அதனை அவர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் வவுனியா பழைய பேருந்து நிலைய வர்த்தக நிலைய உரிமையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக, பொது மலசலகூடத்தின் நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், நகரசபைப் பொதுச் சுகாதாரப்பரிசோதகரை மலசலகூடப்பகுதிக்கு அழைத்து அங்கு காணப்பட்ட குறைபாடுகள், சீர் செய்யவேண்டிய பணிகளை அடையாளப்படுத்தி நிவர்த்தி செய்து கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.



மலசலகூடத்தின் இன்றைய கழிவுகளை மறுதினத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், பொது மலசலகூடத்தைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், பொதுமக்களுக்கு சிறந்த சேவையை மேற்கொள்ளுமாறு பொது மலசலகூடத்தின் நிர்வாகிக்குப் பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

பொது மலசலகூடத்தில் துர்நாற்றம் வீசுவது குறித்தும் அந்தப் பகுதியிலிருந்து மதுபானங்கள் அருந்துவதாக வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நகர சபைத் தவிசாளின்கவனத்துக்குக்கொண்டு சென்ற நிலையிலும், இன்றுவரையிலும் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.



முழங்காவில்

## மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப்பணிகள் ஆரம்பம்

முழங்காவில், நவ.15
முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கடந்த 12 ஆம் திகதி காலை துப்புரவுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் துப்புரவுப்பணியில், மாவீரர்களது பெற்றோர், உறவுகள், மக்கள், மாவீரர் துயிலுமில்லச் செயற்பாட்டுக் குழுவினர், அரசியல் கட்சிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

எதிர்வரும் 18ஆம் திகதி பெரிய அளவில் துப்புரவ்ப்பணி முன்னெடுக்கப்படவுள்ளமையால், முழங்காவில் மாவீரர் துயிலு மில்லத்துக்கு உரித்துடைய உறவுகளைக் கலந்து கொள்ளுமாறு முழங்காவில் மாவீரர் பணிக்குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.




## ஈருருளி வழங்கல்

புதுக்குடியிருப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளுக்கு ஈருருளி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி ஸ்ருட்காட்டில் இயங்கும் உறவுகளுக்குக் கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினரான தவேஸ்கரன் பத்மாவின் மகன் சுமனின் 30 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தாயகத்தில் நடந்த போரால், மாவீரர்களாக மூன்று சகோதரர்களையும் இழந்து, கணவனையும் இழந்து, இரண்டு பெண் பிள்ளைகளுடன் மிகவும் கஸ்ரப்பட்டு வாழ்ந்து வரும் குடும்பத்துக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. (222)

## சாதனையாளர் மதிப்பளிப்பு

கிளிநொச்சி, நவ.15
கனகராயன்குளம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கனகராயன்குளம் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் சாதனை படைத்த, சாதனையாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.



பாடசாலையின் கணேசன் மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவரும், தென்கிழக்குப்பல்கலைக்கழக மாணவனுமான யோ.மிதுர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கின் நெடுங்கேணிக்கோட்டத்தின் முன்னாள் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.விநாயகமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்தச் சாதனையாளர் மதிப்பளிப்பில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற எட்டு மாணவர்களும், நூற்றுஐம்பது புள்ளிகளுக்கு மேல் பெற்ற நான்கு மாணவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (110)



## "உதவும் இதயங்கள்" மகளிர் ஒன்றியம் ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ.15
தொட்டியடி விசுவமடுக் கிராமத்தில் நான்காவது குழுவாக "உதவும் இதயங்கள் கிராமிய முன்னேற்ற மகளிர் ஒன்றியம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி பூபாலன் ஜனகௌரி தல்லமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் வடமாகாண உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் திருமதி கே.நந்தகுமார், உதவும் இதயங்கள் நிறுவனம் சார்பாக கிசோபன், திருமதி சி.பத்மா, மற்றும் உதவும் இதயங்கள் வள்ளிபுனம் மகளிர் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மயில்வாகனம் கனகம்மா இணையரின் 62 ஆவது திருமணநாள் நினைவாக 50 ஆயிரம் ரூபா மாங்குளம் நீதிபுரம் நீதிபுரா கிராமத்துக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாகத் தொட்டியடி விசுவமடு "உதவும் இதயங்கள் கிராமிய முன்னேற்ற மகளிர் ஒன்றியம்" இந்த நிதியில் இருந்து சுழற்சி முறைக் கடன் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. (222)



## இரண்டு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

வவுனியா, நவ.15
மண் ஏற்றி வந்த இரண்டு டிப்பர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் கடந்த 9 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இருந்து செட்டிக்குளம் பெரிய கட்டு ஊடாக மணல் ஏற்றிவந்த இரண்டு டிப்பர்களில் முன்னால் சென்ற டிப்பர், மாடு குறுக்காக ஓடிய நிலையில் திடீரென நிறுத்தப்பட்டதால், பின்னால் வந்த மற்றைய டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சாரதிகளுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்ட நிலையில், விபத்துக் குறித்து செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (222)

## வவுனியாவில் பனிமூட்டம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வவுனியா, நவ.15
சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், மக்களது இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலையில் இருந்து காலை 8 மணிவரை வவுனியாவில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக வவுனியாவில் கடும் மழை பெய்து வந்த நிலையில், தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக ஏ-9 வீதியும் பனிமூட்டமாகக் காணப்பட்டது. வீதி வழியாகப் பயணம் மேற்கொண்ட வாகனங்களின் சாரதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். (222)



# கஜா புயலிலிருந்து மக்களைப் பாதுகாக்க சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவும்

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் உத்தரவு

**யாழ்ப்பாணம், நவ. 15**

**கஜா புயலில் இருந்து மக்களைப் பாதுகாக்க தேவையான முன் ஆயத்தங்களை உடனே மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே உத்தரவிட்டுள்ளார். கஜா புயல் பற்றிய முன் எச்சரிக்கை ஏற்பாட்டுக் கூட்டம் அரச அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அமைப்புக்களின் தலைவர்களுக்கு நேற்று இடம்பெற்றது.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஆளுநர் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

கஜா புயல் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு வழங்க வேண்டும். பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்குத் தகவல் வழங்கப்பட வேண்டும். கிராம அலுவலர் ஊடாகப் பொது அமைப்புகள் மற்றும் பாடசாலைகள், மீனவர்கள் எனஅனைவருக்கும் தகவல் சென்றடைய வேண்டும். மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு முறை வானிலை அவதானிப்பு அறிக்கை வெளியிடப்படுகிறது. அவை பிரதேச செயலகங்களின் ஊடாகக் கிராம அலுவலர்களுக்குச்சென்றடையவேண்டும். இடர் ஏற்படும்போது மக்களைத் தங்க வைக்கும் பாதுகாப்பு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பொலிஸார், ராணுவத்தினர், கடற் படையினர் உதவி புரிவதற்குத் தயார் நிலையில் உள்ளனர். மின்சார சபையினர், மரக் கூட்டுத் தாபனத்தினர், உலர் உணவு வழங்குவோரும், கூட்டுறவுச் சங்கம், நோயாளர் காவு வண்டிகள் அனைத்தும் 24 மணித்தியாலமும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் அவரசமாகத் தேவை என்றால் தனியாரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் அந்த விவரங்களைத் தயார் செய்ய வேண்டும் - என்று ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநரின் கேள்விகளுக்குத் துறை சார்ந்த அலுவலகத் தலைவர்கள் தெரிவித்ததாவது,

24 மணித்தியாலமும் மின்சார சபையினர் சேவையில் ஈடுபடத் தயார் நிலையில் உள்ளனர்.

**பாடசாலைகளில் தங்க ஏற்பாடு**

பாடசாலைகளில் மக்களைத் தங்க வைப்பதற்கு அதிபர் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராம அலுவலர்கள் ஊடாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகளில் நோயாளர் காவு வண்டிகள் தயார் நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்ததாவது,

கஜா சூறாவளி வலுவடைந்து வடகிழக்காக காங்கேசன் துறையில் இருந்து 700 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் சூறாவளியாக வலுவடைந்து, தென் மேற்குத் திசையில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தாக்கம் காரணமாக பொத்துவிலிலிருந்து திருகோணமலை, காங்கேசன் துறை ஊடாக மன்னார் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற் பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்கும். கடல் கடும் கொந்தளிப்பாகக் காணப்படும். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

முல்லைத் தீவிலிருந்து காங்கேசன் துறை வரையிலான பகுதியில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளது.

**கடும் காற்று**

வடக்கு மற்றும் கிழக்கு கடற் பரப்புகளில் காற்றின் வேகம் 70-80 கிலோமீற்றர் ஆகக் காணப்படும். தென் தமிழ் நாட்டுக்கு நகர்ந்து செல்லும் இந்தப் புயலால் எமக்கும் பாதிப்பு ஏற்படலாம். ஆகவே பலத்த மழையும் கடும் காற்றும் காணப்படும். இடி மின்னல் தாக்கமும் அதிகமாகக் காணப்படலாம்.

**தொலைபேசி தொலைக்காட்சி பார்க்காதீர்கள்**

மிக முக்கியமாக தொலை பேசிகள் பயன்படுத்துவதும் மற்றும் கேபிள் ஊடாக தொலைக்காட்சி பார்ப்பதும் முற்றாக தவிர்த்து கொள்ளப்பட.வேண்டும்.

இடர்கள் ஏற்பட்டால் **117** என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும் என்றனர்.

மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் அண்மைய காலத்தில் பெய்த மழையால் நீர் தேங்கும் இடங்களில் தண்ணீரின் மட்டம் அதிகூடிய புள்ளியிலிருந்து ஒரு அடி குறைவாக நிரம்பியுள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்தால் மாத்திரம் இவை நிரம்பும். தண்ணீர் தேக்கங்களுக்குச் செல்ல வாகன வசதிகள் எம்மிடம் இல்லை. மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

**தடுப்பணைகளை அகற்ற வேண்டாம்**

பொதுமக்களிடம் நாம் கேட்பது, வெள்ளம் அதிகரித்து விட்டது என்பதற்காக உவர் நீர் மற்றும் வெள்ளத் தடுப்பணைகளை அகற்ற வேண்டாம் என்பதே எங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள். நாம் வந்து வெள்ளம் வெளியேற்றும் கதவுகளைத் திறந்து கடலுக்குத் தண்ணீரை வெளியேற்றுவோம். நீங்கள் தடுப்பணைகளை அகற்றுவதால் சூறாவளி நேரத்தில் கடல் நீர் மட்டம் அதிகரித்து காணப்படும். அவை உள்ளே வந்து எமது நன்னீர் நிலைகளும் பாதிக்கும். ஆகவே தடுப்பணைகளை அகற்ற வேண்டாம் - என்றனர். (4,7)

---

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## மழை காரணமாக 15 குளங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ. 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் 15 குளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கமநல சேவைகள் திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக 5 குளங்கள் பெருமளவில் உடைப்பெடுத்துள்ளன. 10 குளங்கள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள பாண்டியன்குளம் பிரதேசத்தில் உள்ள பெரிய குளம், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கோடாலிக்கல்லு குளம், சின்னச்சாளம்பன் குளம், ஒலுமடு பிரதேசத்தில் உள்ள கிழவன் குளம், குமுழமுனைப் பிரதேசத்தில் உள்ள நித்தகைக் குளம் ஆகியன உடைப்பெடுத்துள்ளன.

பனிக்கைமுறிப்புகுளம், அம்பலவன் பற்றுக் குளம், சின்னஇத்திமடுக்குளம், கணக்கனார்குளம், வன்னிவிளாங்குளம், அலகைரைபோட்ட கல்லுகுளம், வாணிமோட்டைக் குளம், புலிமைச்சிநாதகுளம், நெடுங்கேணிக்குளம், பாலப்பணிகுளம் உள்ளிட்ட குளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கையில் படையினர் மற்றும் கமநலசேவைத் திணைக்களத்தினர் விவசாயிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,ரி3)

---

## கஜா புயலின் தாக்கம் முல்லையில் தீவிரமாகும்

கஜா புயலின் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அதற்கமைய முன்னாயத்த ஏற்படுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று இது பற்றி ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்கள் பெய்த மழையால் 427 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்தி 155 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முழுமையாக 90 வீடுகளும் பகுதியாக 18 வீடுகளும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த மக்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுகின்றன. உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கையில் இடர் முகாமைத்துவ நிலையத்தினர் ஈடுபட்டுள்ளனர் - என்று தெரிவித்தார். (4,ரி3)

---

*யாழ்ப்பாண*

## பேருந்து நிலையத்தில் கத்திக் குத்து

யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தரை இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார். காயமடைந்த அவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமதியம் இடம்பெற்றது.

புலோலியைச் சேர்ந்த சுரேஸ் என்பவரே காயமடைந்தார். இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டபோது சந்தேகநபர், தனது சட்டைப் பைக்குள் இருந்த கத்தியால் பாதுகாப்பு உத்தியோகத்தரின் வயிற்றில் குத்தி, கையிலும் வெட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. பேருந்து நிலையத்தில் நின்றவர்கள் சந்தேகநபரைப் பிடித்தனர். அவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (4,106)

---

பாடசாலைக்கு வழங்கப்பட்ட

## ரின்மீனில் ஊழல் இடம்பெற்றதா? பாடசாலை முன்பாகப் பரபரப்பு

### அப்படி எதுவுமில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்

வவுனியா, நவ. 15

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு உலக உணவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட தகரத்தில்அடைக்கப்பட்ட மீன் உணவு விநியோகத்தில் ஊழல் நடைபெற்றிருப்பதாகப் பாடசாலை முன்பாக நேற்றுக்காலை ஒன்று கூடிய சிலர் தெரிவித்தனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

அவர்கள் கருத்துத்தெரிவிக்கும் போது:

கடந்த செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் உலக உணவுத் திட்டத்தால் தகரத்தில் அடைக்கப்பட்ட மூவாயிரம் ரின்கள் வழங்கப்பட்டன.

இன்றுவரை அந்த உணவுகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. சமையலுக்குப் பொறுப்பானவர்களிடம் வினவியபோது சமைப்பதற்காகத் தமக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கின்றனர். அதில் ஊழல் நடைபெற்றுள்ளது. அதன் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று எமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அவை வேறு நிகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக வலயக் கல்வி அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம் என்று அவர்கள் கூறினர்.

வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலைக்குச் சென்று நிலமையை ஆராய்ந்த அவர்,

"கொடுக்கபட்ட மீன் உணவை மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பாகப் பாடசாலை நிர்வாகத்தினருக்குப் போதிய விளக்கம் இல்லை. அதனாலேயே அது வழங்கப்படவில்லை. கையாடல்களோ அல்லது பாடசாலையை விட்டு வெளியிலோ குறித்த உணவுப் பொருள்கள் கொண்டுசெல்லப்படவில்லை என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. களஞ்சிய அறையில் 3 ஆயிரத்து 180 மீன்ரின்கள் உள்ளன.

ஒரு மாணவனுக்கு ஒருநாளைக்கு இருபது கிராம் வீதம் வாரத்தில் இரண்டுநாள்கள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். இனிமேல் முறையாக நடக்கும். அதில் கையாடல்கள் நடைபெறவில்லை" - என்றார்.

"எமது பாடலையில் இந்து மாணவர்கள், இந்து ஆசிரியர்கள் உள்ளனர். தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உணவு இந்துக்களின் விரத காலங்களிலேயே பாடசாலைக்கு வழங்கப்பட்டன.

விரதகாலம் முடிவடைந்துள்ளதால் தற்போது மீன் உணவு சமைத்து வழங்கப்படுகிறது" - என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். (4,110)

# கிளிநொச்சியில் இளைஞன் கடத்தல்: ரூ.5 லட்சம் கப்பம் பெற்று விடுவிப்பு!

## கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் ராணுவச் சிப்பாய் உட்பட மூவர் கைது

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி பொன்னகரைச் சேர்ந்த இளைஞன் கடத்தப்பட்டு பொலனறுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஐந்து லட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டுள்ளது. உறவினர்கள் பணத்தை வழங்கிய பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடத்தலுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டில் ராணுவச் சிப்பாய் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு திருமுறிகண்டியிலுள்ள ராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாயின் உதவியுடன் இந்தக் கடத்தல், கப்பம் கோரல் இடம்பெற்றது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடத்தப்பட்ட இளைஞர் தீபாவளித் தினத்தன்று அறிவியல் நகர் பல்கலைக்கழக சந்தியிலுள்ள உணவகத்துக்குச் செல்வதாக கூறிச் சென்றுள்ளார். வீடு திரும்பவில்லை.

இளைஞனின் குடும்பத்தினருக்கு அலைபேசியில் அழைப்பு ஏற்படுத்திய கடத்தல்காரர்கள், இளைஞனைக் கடத்தியுள்ளோம். 5 லட்சம் ரூபா பணம் தந்தால் அவரை உயிருடன் விடுவிக்கலாம் என்று கூறியுள்ளனர். பொலநறுவையைச் சேர்ந்தவர்களால் இளைஞன் வாகனத்தில் கடத்தப்பட்டுள்ளமை அதன்போது தெரியவந்தது.

இளைஞனைக் காப்பாற்ற ஐந்து லட்சம் ரூபா பணம் கடத்தல்காரர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்து இளைஞனின் பெற்றோர், உறவினர்கள் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்தி சந்தேகத்தில் இருவரைக் கைது செய்தனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக வாகனம் ஒன்றையும் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றில் நீதிபதி மா.கணேசராஜாவிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இளைஞனைக் கடத்துவதற்கான முக்கிய சூத்திரதாரி முல்லைத்தீவு திருமுறிகண்டி இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய் என்று விசாரணையில் பொலிஸார் இனங்கண்டனர் என்றும் அதன்படி அவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4.214)



கிழக்கு மாகாணத்தின் வாகரைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க உலர் உணவுப் பொருள்கள் 3 நாள்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களிடம் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களையே மக்கள் நலன் காப்பக அமைப்பின் உறுப்பினர்களிடம் ஒப்படைத்தனர். (7)

# ஒற்றுமையாக இருந்தால் உதவிகள் பல பெறலாம்

## மன்னாரில் சிறப்புத் தேவையுடையோருக்கு மேலதிக மாவட்டச் செயலர் அறிவுறுத்து

மன்னார், நவ. 15

மன்னார் மாவட்ட சிறப்புத் தேவையுடையவர்கள் ஒரு அமைப்பின் கீழ் ஒற்றுமையுடன் செயற்பட்டால் முன்னேற்றம் காண்பார்கள் என்று மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட சிறப்புத் தேவையுடையவர்களுக்கான சுய உதவியும் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடலும் அமைப்பின் ஆரம்பக் கூட்டமும் மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் குணபாலன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அமைப்பு சிறந்த முறையில் செயற்படுமானால் சமூகத்தில் நீங்கள் மதிப்புடையவர்களாகக் கணிக்கப்படுவீர்கள். பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றம் காண்பீர்கள். இதற்கு உங்களுக்கிடையில் ஒற்றுமை அவசியம்.

உங்களுக்கென பல திட்டங்களும் பணமும் இருக்கின்றன. ஆனால் உங்களுக்குள் ஒரு சரியான அமைப்பு இல்லாததால் உதவித் திட்டங்களைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையிலும் உதவிகளைப் பெறமுடியாத நிலையிலும் இருந்து வருகின்றீர்கள்.

உங்கள் அமைப்பு சரியான முறையில் இயங்கினால் நாம் அரசிடமிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் உதவிகளைப் பெற்று உங்களை மேன்மைப்படுத்த முடியும்.

வறுமையின் கீழ் இருப்பவர்கள் செய்யக்கூடிய தொழில் சம்பந்தமான விவரங்களைத் தயார் நிலையில் வைத்திருந்தால் திட்டங்கள் கிடைக்கும் பட்சத்தில் வழங்கக் கூடியதாக இருக்கும்.

துணுக்காயில் சிறப்புத் தேவையுடையவர்கள் தான் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைத் தயாரித்து சந்தைப்படுத்தி வருமானத்தைப் பெற்று வருகின்றனர் - என்றார்.

நிகழ்வில் உதவி மாவட்ட செயலர் எஸ்.யசீர்தன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜே. லியோன் உட்பட சிறப்புத் தேவையுடைய பலர் கலந்துகொண்டனர். (4.60)

# கொள்ளை முயற்சி கூக்குரலால் தடுப்பு!

## செம்மணியில் சம்பவம்

சாவகச்சேரி, நவ. 15

கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அரச அலுவலரான பெண்ணைப் பின்தொடர்ந்த கொள்ளையர்கள் சங்கிலி அறுக்க முற்பட்டு அது பயனளிக்காததால் தப்பியோடியுள்ளனர். செம்மணி நல்லூர் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சங்கிலி அபகரிக்க முயன்ற வேளை பெண் சத்தமிட்டதால் வயலில் நின்றவர்கள் ஓடிவரவே கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர்.

கொள்ளை முயற்சியின்போது உந்துருளியிலிருந்து வீழ்ந்ததால் பெண்ணுக்கு உராய்வுக் காயங்கள் ஏற்பட்டன தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அலுவலகத்தில் பணியாற்றும் அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.9)



# பசுக்களைக் கொல்லாது பாதுகாக்கும் சபைகளுக்குப் பாராட்டு

கொடிகாமம், நவ. 15

பசுக்களைக் கொல்லாது பாதுகாக்கும் பிரதேச சபைகளைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

பசுக்களைப் பாதுகாத்துப் பயன்பெறுவோம் எனும் தொனிப்பொருளில் ஆவினப் பாதுகாப்புச் சபை இந்த நிகழ்வை நடத்தியது.

சின்மையாமிசன் சிதாகானந்த சுவாமிகள், சாவகச்சேரி சிவாச்சார்யமணி சிவசிறி வி.பாலகுமாரக் குருக்கள், செல்வச் சந்நிதி வணக்கத்துக்குரிய சிவசண்முகம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

நல்லூர், வேலணை, காரைநகர், மத்துகம, வவுனியா வடக்கு, நெடுங்கேணி ஆகிய பிரதேச சபைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் பொன்னாடை, மலர்மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் மாடுகள் வெட்டுவதைத் தடைசெய்ய வேண்டும் என்ற தீர்மான வரைவை அந்தச் சபையின் உறுப்பினர் வை.ஜெகதாஸ் சபையில் சமர்ப்பித்திருந்தார். அதற்காக அவரும் மதிப்பளிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

# வடக்கு மாகாண சபையை விக்கி வீணடித்துவிட்டார்!

## முன்னாள் முதலமைச்சர் வரதர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 15

கடந்த ஐந்து வருடங்களாக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் தலைமையில் அமைந்த வடக்கு மாகாண சபை ஆட்சி, வடக்கு மாகாண மக்களுக்கு எந்தவிதக் கடமையையும் செய்யாமல் காலத்தை வீணடித்து விட்டது.

இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் அமைப்புச் செயலாளரும் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜா பெருமாள் தெரிவித்தார்.

**விக்னேஸ்வரனின் தலைமையிலான வடக்கு மாகாண ஆட்சி** காலத்தை வீணாக்கியது மட்டுமல்ல, எதிர்காலத்தில் மக்களால் தெரிவு செய்யப்படும் வடக்கு மாகாண சபைக்குப் பல தவறான சம்பிரதாயங்களையும் பிழையான முன்னுதாரணங்களையும் விட்டுச் சென்றிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகள் கலைக்கப்பட்ட பின்னர், ஆளுநரின் தலைமையின் கீழ் மாகாண ஆட்சி நடைபெறுகிறது. **இது மாகாண ஆட்சிமுறை குலைந்து போனதாக** அர்த்தமாகாது.

மாகாண சபைகள் ஆளுநர் ஆட்சியின் கீழ் உள்ளபோது மாகாண சபைக்குரிய சட்டவாக்க அதிகாரங்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்குக் கையளிக்கப்படும். இந்தக் காலகட்டத்தில் மாகாண ஆட்சிக்குரிய எந்தவொரு நிறைவேற்றதிகாரத்தையும் கொழும்பு அரசின் அமைச்சர் எவரும் தமது கையில் எடுத்துக் கொள்ள முற்படுவது மாகாண ஆட்சி முறையைச் சீர்குலைக்கும் முயற்சியே. முக்கியமான பல விடயங்களில் 13 ஆவது **அரசமைப்புத் திருத்தம் மூலம் மாகாண ஆட்சிகளுக்கு வழங்கப்**பட்ட அதிகாரங்கள் கொழும்பு அரசை மெதுமெதுவாகச் சென்றடைய நேரிட்டன. அந்த நிலைமை மீண்டும் தொடரக் கூடாது.

மாகாண ஆட்சியின் நிறைவேற்று அதிகாரங்களை கொழும்பு அரசின் அமைச்சர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கவர்ந்து கொள்வதற்கு ஆளுநர் இடமளிக்கக் கூடாது.

ஆளுநர் அரசதலைவரைச் சார்ந்தவரா, தலைமை அமைச்சரைச் சார்ந்தவரா என்பது இங்கு முக்கியமானதல்ல - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## குழப்பம் இன்னும் தீர்ந்துவிடவில்லை

நாடாளுமன்றைத்தைக்கலைத்துபொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுத்த அரச தலைவரின் அரசிதழ் அறிவிப்பு மீது நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்ததை அடுத்துஇலங்கையின்அரசியல்குழப்பம்விறுவிறுப்பான திரைப்படம்ஒன்றின்காட்சிகளைப்போன்றுபரபரப்பாக முன்னேறி வருகின்றது. நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையைத் தொடர்ந்து, அரச தலைவரின் முன்னையை அரசிதழ் அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத்தை நேற்று உடனடியாகக் கூட்டினார் சபாநாயகர். இதையடுத்து மகிந்த அரசு மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. பரபரப்பானஇந்தக்காட்சிகளுடன்இந்தப்பிரச்சினைநிறைவுக்கு வந்துவிடாது என்பதுதான் இங்குள்ள சிக்கலே!

நேற்றையநம்பிக்கையில்லாத்தீர்மானத்தைஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று மகிந்த தரப்பினர் அறிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பு முறைப்படியானது அல்ல என்பது அவர்களது வாதம். 122 நாடாளுமன்ற உறுப்பினர்களினது ஆதரவுடன்நம்பிக்கையில்லாத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகரே அறிவித்துள்ளார். ஆனால், அந்த அறிவிப்பைநாடாளுமன்றத்தின்செயலாளரேஉறுதிப்படுத்த வேண்டும்.வாக்கெடுப்புநடத்தப்பட்ட முறைமைநாடாளுமன்றநிலையியல்கட்டளைகளுக்குஏற்பநடத்தப்பட்டதா?என்கிறசந்தேகம்இருக்கும்நிலையில்அறிவிப்பில் கையெழுத்திடச் செயலாளர் மறுத்து வருகின்றார் என்று சொல்லப்படுகின்றது. இதனால் சபாநாயகரின் அறிவிப்பை உத்தியோகபூர்வ அறிவிப்பாக ஏற்றுக்கொண்டு தமதுதலைமைஅமைச்சர்பதவிமற்றும்அமைச்சர்பதவிகளில்இருந்துமகிந்ததரப்பினர்வெளியேறிச்செல்லமாட்டார்கள்என்றுதெரிகின்றது.மைத்திரியின்அறிவிப்பினை ஏற்காது எப்படி ரணில் விக்கிரமசிங்க விடாப்பிடியாகத் தானேதலைமை அமைச்சர் என்று தெரிவித்து வந்தாரோ அதேபோன்றதொருநிலைதான்மகிந்ததரப்பிலும்தொடரப் போகின்றது.

இந்த நிலமையை முடிவுக்குக் கொண்டு வந்து இயல்பு நிலையைமீட்டக்கூடியவர்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனமட்டுமே. அவரோ, ரணில்தலைமைஅமைச்சர் பதவிக்கு மீண்டும் வராமல் விட்டால் மட்டுமே ஐக்கிய தேசியக்கட்சிஅரசைஏற்றுக்கொள்வேன்என்றுஒற்றைக் காலில் நிற்கிறார். அப்படி அவர் பிடிவாதமாக நிற்கும் வரையில் பதவியை விட்டுக்கொடுப்பதற்கு ரணிலும் தயாராக இருக்கிறார் போன்று தெரியவில்லை.

இந்தநிலையில்நேற்றுஅறிவிக்கப்பட்டபடிஇன்றுநாடாளுமன்றம்கூடினால்அரசதலைவர்மீதுகுற்றவிசாரணைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அவரைப் பதவி விலக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கும். அத்தகைய நடவடிக்கையில் இருந்து தப்புப் வதற்காக, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரையில் நாடாளுமன்றத்தை மீண்டும் ஒத்தி வைக்கும் அறிவிப்பை நள்ளிரவில் அரசதலைவர்விடுக்கலாம்என்கிறஎதிர்பார்ப்புப்பலமாகஇருந்தது. அப்படி நடந்தால் நாடு மேலும் குழப்பத்துக்குள் சிக்கிக் கொள்ளும். பதவி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இரண்டுஆட்சிகளில் எது சொல்வதைக் கேட்பது என்று குழம்பியேவைத்தியசாலைக்கட்டில்களில்படுக்கவேண்டிய நிலமை அரச உயர் அதிகாரிகளுக்கு வந்துவிடும்.

இத்தனைகுழப்பங்களுக்கும்காரணமாகிநாட்டைக்குட்டிச்சுவராக்கியதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, இனியாவது மக்களாட்சியை மதித்து, தனது தனிப்பட்டவிருப்பு,வெறுப்புகளைப்புறந்தள்ளிவைத்து விட்டுநாட்டை முன்னோக்கிநகர்த்த அரசதலைவர்முன் வரவேண்டும் அல்லது பதவியிலிருந்து அவர் நீங்கிச் செல்லவேண்டும்.

# இது தீர்ப்பல்ல!

## உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு

■ ஏரம்பு சுப்பையா

2015ஆம் ஆண்டிலிருந்து தலைமை அமைச்சர் பதவியிலிருந்து வந்த ரணில் விக்கிரமசிங்கவை ஒக்ரோபர் மாதத்தின் பிற்பகுதியில் பதவியிலிருந்து நீக்கிவிட்டுப் புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேன நியமித்ததிலிருந்து இரண்டு வாரங்களாக இலங்கை அரசியல் மிகவும் குழப்பம் மிக்கதாகக் காணப்படுகின்றது. அதன் உச்சமாக அரச தலைவருக்கு நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகரம் இல்லை எனத் தனிநபர்கள், கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினராலும் தொடுக்கபட்ட மனித உரிமை மீறல் வழங்குகள் 13வரையில் உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழங்குகள் இந்த மாதம் 12, 13ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. 3 நீதிபதிகள் அடங்கிய குழாம் இவற்றைப் பரிசீலித்தது. டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை அரச தலைவரின் இந்த வர்த்தமாணி அறிவிப்பு (நாடாளுமன்று கலைக்கப்பட்டதான அரசிதழ் அறிவிப்பு) இடைநிறுத்தப்பட்டிருக்கிறது என்ற அறிவித்தலை நவம்பர் 13ஆம் திகதியன்று மாலை உயர்நீதி மன்றம் விடுத்தது.

**இடைக்காலத் தடை உத்தரவுக்கு உற்சாக வரவேற்பு**

உயர் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட இந்த இடைக்காலத் தடை உத்தரவை ஐக்கிய தேசியக் கட்சி - வெடி கொழுத்தி மகிழ்ந்ததுடன், இடைக்காலத் தடை உத்தரவைத் தமக்குக் கிடைத்த வெற்றி என்றிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க - மக்களின் இறைமைக்குக் கிடைத்த வெற்றி என்றிருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவரான இரா. சம்பந்தன் நீதிபதிகள் குழாம் நடுநிலையாகச் செயற்பட்டுப் பாடம் புகட்டியுள்ளது என்றிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் இலங்கையின் 200 வருட நீதித் துறைக்குக் கிடைத்த உன்னதமான, உயரிய வெற்றி என்றிருக்கிறார். மங்கள சமரவீர இலங்கையின் ஜனநாயகம் சர்வாதிகாரத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்படுள்ளது என்றிருக்கிறார். ரவூப் ஹக்கீம் சட்டத்தையும் ஜனநாகத்தையும்நிலைநாட்டு வதற்கான முதல் சமிக்ஞை இது என்றிருக்கிறார். றிசாத் பதியுதீன் ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்றிருக்கிறார். சுனில் ஹந்துநெத்தி (ஜே.வி.பி.) ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை இது காட்டுகிறது என்றிருக்கிறார்.

**இது பிற்போடப்பட்ட உத்தரவே தவிர தீர்ப்பல்ல**

இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால் அரச தலைவரால், நாடாளுமன்றைக் கலைப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சரியானதா? பிழையானதா? என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை அறிவிப்பதற்காகவே டிசம்பர் 7ஆம் திகதிவரை மேற்படி விடயம், பிற்போடப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் அறிவிப்பே தற்போது நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டுள்ளது. தவிர, அதற்கான தீர்ப்பு வழங்கப்படவில்லை. இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றத் தீர்ப்பின் சிறப்பையும், நடுநிலையான செயற்பாட்டையும் மெய்ச்சியுள்ளது. அதே வேளை டிசெம்பர் 7ஆம் திகதியன்று வழங்கப்படவுள்ள தீர்ப்பு இந்த வழக்கைத் தொடுத்தவர்களுக்குப் பாதகமாக அமையும் பட்சத்தில், இப்போது கூறிய தற்கு மறுதலையாக இலங்கையின் நீதிமன்றில் எமக்கு நம்பிக்கை இல்லை என்று கூறுவதற்குத் தயாராக வேண்டும் கூட்டமைப்பு.

**“ கூட்டமைப்பின் இந்தப் புகழாரத்தின் மூலம் இறுதிப்போர் விவகார விடயங்களைப் பக்கச் சார்பற்ற முறையில் விசாரிப்பதற்கு இலங்கை அரசின் நீதித் துறை பொருத்தமற்றது எனக் கூறிவதற்கும் இதற்கும் இடையில் முரண் இருப்பது தெரிகிறது. இலங்கையின் 200வருடகால நீதித்துறை வரலாற்றில் மிக உயரிய தீர்ப்பு இது என இடைக் காலத் தடை உத்தரவைப் புகழ்ந்து கூறியிருப்பது பெரிய முரண் பாட்டைக் காட்டி நிற்கிறது.**



**உள்நாட்டு நீதித் துறையை மெய்ச்சியது முரணானது**

இதுவரைகாலமும் இலங்கையிலுள்ள நீதித் துறை தமிழர் விடயத்தில் பாரபட்சமாக நடக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியே, இறுதிப் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காகப் பன்னாட்டு நீதிபதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரி வருகிறது. இறுதிப் போர் விடயங்களை விசாரணை செய்வதற்கு இலங்கையின் நீதித் துறை பலவீனமானதும் பக்கச் சார்பானதா

கவும் காணப்படுவதாலேயே பன்னாட்டு நீதிபதிகளைக் கோரியதாகப் பல தடவைகள் அறிக்கையும் விட்டுள்ளது.

அரச தலைவரின் வர்த்தமானி அறிவிப்பு விடயத்தில் மட்டும் இலங்கையின் நீதித் துறை நடுநிலையாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்கின்றது என்று கூறிவிட முடியாது.

இறுதிப்போர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை எந்த வழக்கையும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

பன்னாட்டு நீதிமன்றின் உதவியை நாடுவதற்குக் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் இலங்கை நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டு, அதில் பாரபட்சமான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்தத் தீர்ப்பை அடிப்படையாக வைத்துப் பன்னாட்டு நீதி மன்றத்தில் விசாரணையைக் கோர முடியும். எடுத்த எடுப்பில் பன்னாட்டு நீதி விசாரணை ஒன்றைப் பெற முடியாது.

கூட்டமைப்பின் தற்போதைய நீதித்துறைப் புகழாரத்தின் மூலம் இறுதிப்போர் விவகார விடயங்க ளைப் பக்கச் சார்பற்ற முறையில் விசாரிப்பதற்கு இலங்கை அரசின் நீதித்துறை பொருத்தமற்றது எனக் கூறி வருவதற்கும் இதற்கும் இடையில் முரண் இருப்பது தெரிகிறது.

இலங்கையின் 200வருடகால நீதித்துறை வரலாற்றில் மிக உயரிய தீர்ப்பு இது என இடைக்காலத் தடை உத்தரவைப் புகழ்ந்து கூறியிருப்பது பெரிய முரண்பாட்டைக் காட்டி நிற்கிறது.

### தீர்ப்புக்குக் காலம் இருக்கிறது

3வார காலத்துக்குள் அரச தலைவர் நாடாளுமன்றைக் கலைத்தது குறித்து வழக்குத் தாக்கல் செய்த தரப்புக்களின் நியா யங்களை எழுத்து மூலம் கையளிக்குமாறு கேட்டிருக்கிறது உயர் நீதிமன்றம். அதன் அடிப்படையில் டிசெம்பர் 4, 5, 6ஆகிய முன்று நாள்களும் அவற்றை விவாதித்த பின்னர் 7ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது.

ஏற்கனவே சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை மன்றில் வெளிப்படுத்தும்போது அரச தலைவருக்கு அரசமைப்பின் மூலம் நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் உண்டு எனவும் அதற்கு எதிராகப் போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுமாறும் மன்றில் அறிவித்திருந்தார்.

இதனால், அரசமைப்புச் சார்ந்தும், அதன் விதிகள் சார்ந்தும் அணுகும்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு வழக்குத் தொடர்ந்தவர்களுக்குப் பாதகமாக அமைவதற்கும் சாத்தியங்கள் இருக்கலாம்.





### ஓய்வூதியம் குறித்தே வழக்குகள்

நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற 13வழக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒன்று முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு ஐந்து வருட காலப்பகுதி நிறைவடையாததால் அவர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதாகவே இருக்கிறது.

நான்கரை வருடங்கள் வரையில் நாடாளுமன்றைக் கலைக்க முடியாது என்று அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதும், ஐந்து வருடங்கள் கடமையாற்றினால் தான் ஓய்வூதியம் என்றிருப்பதும் அடிப்படையில் முரணானவையாகவே இருக்கின்றன. பொது மக்களால், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஓய்வூதியம் வழங்காது விட்டால் அது ஒரு சட்டத்தை மீறிய செயல் எனக் குற்றம் சாட்டப்பட்டாலும் அதற்கான சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அவர்களுக்கான ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுக்க முடியும்.

3வார காலத்துக்குள் அரச தலைவர் நாடாளுமன்றைக் கலைத்தது குறித்து வழக்குத் தாக்கல்செய்த தரப்புக்களின் நியாயங்களை எழுத்து மூலம் கையளிக்குமாறு கேட்டிருக்கிறது உயர் நீதிமன்றம். அதன் அடிப்படையில் டிசம்பர் 4, 5, 6ஆகிய முன்று நாள் களும் அவற்றை விவாதித்த பின்னர் 7ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது.

நிலமை இப்படியிருக்க, டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் இடைக்கால உத்தரவு வந்திருக்கின்ற சூழலில் நீதிமன்றத் தீர்ப்பு மிகவும் சரியாக உள்ளது எனத் தமிழர் தரப்பு சிபாரிசு செய்வது என்பது 7ஆம் திகதி வழங்கப்போகும் தீர்ப்பை மறுதலிக்க முடியாமலும் அதேவேளை, பன்னாட்டு நீதிபதிகளின் தலையீடு இறுதிப் போர் விவகாரத்தில் தேவைப்படாது என்பதை ஏற்றுக் கொள்வதாகவுமே அமையும்.

### சிறுபான்மையினர் மிகுந்த விளிப்பாக இருக்க வேண்டும்

சாதாரண்பொதுமக்கள் இதுவிடயத்தில் மிகத் தெளிவாக இருக்க வேண்டியது அவசியமானது. சிங்கள மக்களுக்குச் சிறந்த அதிகாரம் மிக்க தலைவர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு என்று ஓர் அரசு உண்டு. அவர்களுக்கு என்று அரசமைப்பு உண்டு. (மகா நாயக்கர்களுக்கு விளங்கும் வகையில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சரத்துக்களே சரியானதும், முடிவானதும் என வரையறை செய்யப்பட்டுள்ளது) எனவே இலங்கையில் ஏற்படப்போகும் எந்தப் பிரச்சினையும் சிங்களப் பெரும்பான்மை மக்களுக்குப் பாதகமாக இருக்கப் போவதில்லை என்பதைச் சிறுபான்மை இனங்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குத் தவறக் கூடாது.



## ஆசிரியருக்கான கடிதம்

# மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்...!

13.11.2018 அன்று கந்த சஷ்டி விரதம் முடிந்து சூரன் போர் நடைபெற்றது. மறுநாள் 14.11.2018 அன்று சகல பாடசாலைகளிலும் 3ஆம் தவணைப் பரீட்சைகள் ஆரம்பமாகின.

அநேகமாக எல்லா இந்துக் கோவில்களிலும் சூரன் போர் அன்று இரவு 11மணி வரை ஒலிபெருக்கியில் பாடல்களும், மந்திரங்களும் பெருமெடுப்பில் ஒலித்தவாறு இருந்தன. இவ்வாறாக இந்து மதம் பெயருக்கும், புகழுக்கும் மட்டும் என்ற நிலை உருவாகிவிட்டது. புறச்சூழல் பற்றிய அறிவில்லாது களியாட்டமாகத் திருவிழாக்கள், விரதங்களைக் கடைப்பிடிப்பது அவசியமானதுதானா?

இந்தக் கோவில்களில் பூட்டப்பட்டு, எட்டுத் திக்கும் ஓங்கி ஒலிக்கின்ற இந்த ஒலிபெருக்கிகளை யாரெல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள் என்று ஆராய்ந்தால், வெளிநாடுகளில் வாழ்பவர்கள் தமது பெயர் நிலைக்கவும், அந்த ஊர் மக்களால் தாம் பேசப்படுவதற்காகவுமே ஒலிபெருக்கியில் தமது பெயரைப் பொறித்துக் கொடுத்துள்ளனர். இதைவிடக் கொடுமை என்னவென்றால், பதவியிலிருந்த வடமாகாண சபை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களின் அபிவிருத்திக்கென அரசால் ஒதுக்கப்பட்ட அபிவிருத்திக்கான நிதியில் ஒலிபெருக்கிகளை வாங்கியும் கோவில்களுக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

அபிவிருத்தி நிதியில் அபிவிருத்திக்குப் பின்னடைவான ஒரு பொருளான ஒலிபெருக்கியை வாங்கிக் கொடுத்த புகழுக்கு உரித்தானவர்கள் நமது தமிழ் அரசியல் வாதிகளாகத்தான் இருக்க முடியும்.

இவ்வாறான அபிவிருத்தி நிதிகளைப் பிழையான வகையில் (சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு) பயன்படுத்தக்கூடாது என நீதியரசர் விக்னேஸ்வரனோ, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனோ கட்டுப்படுத்தவில்லை.


இந்துக் கோயில்களைச் சுற்றி இருப்பது இந்துக் குடும்பத்தி னரே. அந்தக் குடும்பங்களில் உள்ள கல்வி கற்கின்ற பிள்ளைகள் இவ்வகை ஒலிபெருக்கிகள் காரணமாகத் தமது கல்வியை இழக்கின்றனர். அதைவிட இந்து மதக் குருக்கள் மற்றும் பூசாரிகளுக்கு மந்திரங்களை மனணம் பண்ணுவதால் மாத்திரமே மந்திரங்களுக்குச் சக்தியுண்டு என்பது தெரிந்திருப்பதில்லை. மந்திரங்களைத் சத்தமாக ஓதுவதே பிழையானது. அவற்றை ஒலிபெருக்கியில் ஓதுவது அதைவிடப் பிழையானது.

கல்வியில் இந்துக்களுக்கு ஏற்படுகின்ற பின்னடைவு அரசியல் வாதிகளுக்கும், உள்ளூர்ப் பிரமுகர்க ளுக்கும் வாய்ப்பானது. இப்படியாக அளவுக்கு மீறிச் சத்தம் எழுப்பிவிட்டு, எல்லாக் கொடுமைகளையும் முடித்து இறுதியாக, மகுட வாசகமாக "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்று கூறுவதுதான் இங்கு வேடிக்கையானது. இதுதான் 'சைவநீதி' என்றால் யார்தான் முரண்படமாட்டார்கள். அருகிலுள்ள மனிதனுக்கு இடையூறு கொடுக்காது வாழ்வது ஜனநாயகப் பண்பு. மாறாக இந்த இடையூறு நிலை நீடித்தால் இந்து மதத்தில் ஒருபோதும் ஜனநாயகப் பண்பு ஏற்படப் போவதில்லை

**மு.சாம்பசிவம் – சுன்னாகம்**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! ஆனால், மேற்குறித்த விட யங்களைத் தவ றாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# காபூலில் பாடசாலைக்கு அருகே குண்டுவெடிப்பு

## சம்பவ இடத்தில் 6பேர் சாவு!

காபூல், நவ. 15

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள பாடசாலை ஒன்றின் அருகே தலிபான் ஆயுத தாரிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 6 பேர் உடல் சிதறிச் சாவடைந்திருக்கின்றனர்.



ஆப்கானிஸ்தான் நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களான ஹஸ்ரா பழங்குடியின மக்களுக்கு எதிராக நாளுக்கு நாள் போர் அதிகரித்து வருகிறது.

தலிபான் ஆயுததாரிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறிய அரசைக் கண்டித்தும், பாதிப்பு அதிகமாக உள்ள பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு வலியுறுத்தியும் நேற்றிரவில் இருந்து மாணவர்களும், பொதுமக்களும் காபூல் நகரில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், போராட்டக்காரர்கள் அதிகம் குவிந்திருந்த இஸ்திக்லால் பாடசாலைக்கு அருகே தலிபான்களின் தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்திருக்கிறது. இதில் 6 பேர் உடல் சிதறிச் சாவடைந்திருக்கின்றனர். இருபதுக்கும் அதிகமானவர்கள் பலத்த காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை, தாலிபான்களுக்கு எதிரான போராட்டம் என்பதால் தாலிபான்கள்தான் தாக்குதல் நடத்தியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.





# எஜமானுக்காக, எண்பது நாள்காளாக, நடுவீதி

பீஜிங்.நவ.15

சீனாவில் 80 நாள்களாக தனது உரிமையாளருக்காக வீதியில் காத்திருக்கின்றது விசுவாசமிக்க நாய் ஒன்று. தனது உரிமையாளருக்காக நடு வீதியில் காத்திருக்கும் அந்த நாயின் எஜமான் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி சாவடைந்திருக்கிறார்.

அன்றிலிருந்து அந்த நாய் அவ்விடத்தில் காத்துக்கிடக்கிறது. சிலர் அந்த நாய்க்கு உணவு வழங்க முன்வந் னர். ஆனால் அந்த நாய் ஓடி விடுகிறது இந்த நாய் வீதியில் காத்திருக்கு காணொலி நவம்பர் மாதம் 10ஆம் தி தியன்று சீனாவில் பயன்படுத்தப்படு சமூக வலைத்தளமான சின வெய்பே வில் (கீச்சகம், முகப்புத்தகத்துக்குப் ப லாகச் சீனாவில் பயன்பாட்டிலுள்ளது பதிவிடப்பட்டுள்ளது. அதில் நாயின் விசுவாசத்தைக் கண்டு அனைவரும்

# கலிபோர்னிய

# வரலாறு காணாத

## தீ பரவுகிறது – சாவு எண்ணிக்கை

நியூயோர்க்.நவ.15

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் அண் ஏற்பட்டிருந்த காட்டுத்தீ வரலாறு காணாத அளவில் பரவி வருகிறது. இந்தக் காட்டுத் தீயில் சிக்கிச் சா தவர்களின் எண்னிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்கே உள்ள பேரடைஸ் உள்ளிட்ட நகரங்களில் காட்டுத் தீ கடந்த வாரம் ஏற்பட்டது. அது வரலாறு காணாத வகையில் பரவி வருகின்றது. இந்தத் தீயில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 50 ஆக அதிகரித்துள்ளது. தீயில் கருகிய உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. 200க்கும் மேற்பட்டவர்கள் காணாமல்போய் உள்ளனர். அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தீ க்கு இரையாகி உள்ளன. இந்தக் காட்டுத் தீ குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில், "கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயை நான் பெரும் பேரிடர் இழப்பாக அறிவித்திருக்கிறேன். நான் உங்களுடன் எப்போதும் இருப்பேன். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இறைவன் துணை இருப்பார் என்று வேண்டிக் கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார். இந்த நிலையில் காட்டுத் தீ பருவ நிலை மாற்றம் காரணமாக இத்தகைய கடும் விளைவை ஏற்படுத்தியுள்ளதாக விஞ்ஞானிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**கலிபோர்னியா காட்டுத் தீ பருவநிலை மாற்றம் காரணமானது**






கலிபோர்னியாவில் பரவிவருகின்ற காட்டுத்தீயின் பாதிப்புக்கள் தொடர்கின்றன. காட்டுத்தீ தொடர்ந்து பரவி வருகிறது. இந்தக் காட்டுத்தீயினால் இதுவரை

# செய்தியாளருக்குத் தடைவிதித்த விவகாரம் ட்ரம்ப் மீது சி.என்.என். செய்திச்சேவை வழக்கு


வோஷிங்டன்.நவ.15

வெள்ளை மாளிகைக் குள் நுழைவதற்கு சி.என்.என் செய்திச் சேவையின் செய்தி சேகரிப்பாளர் அகோஸ்டாவுக்குத் தடை விதித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிபர் ட்ரம்ப் மீது சி.என்.என். செய்தி நிறுவனம் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த விடயம் குறித்து சி.என்.என். செய்தி நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், இந்த வழக்கில் அகோஸ்டா மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு அவர் விரைவில் வெள்ளை மாளிகையின் தலைமைச் செய்தியாளராக முறைப்படி மீண்டும் திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





செய்தியாளர் ட்ரம் மோதல் விவகாரம்



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த 7ஆம் திகதி வோஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது சி.என்.என். செய்தி நிறுவனத்தின் செய்தி சேகரிப்பாளர் அகோஸ்டா, அவரிடம் அமெரிக்காவுக்குள் நுழையும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார். பின்னர் 2016ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலின்போது ரஷ்யாவின் தலையீடு குறித்துக் கூறப்படும் குற்றச்சாட்டுப் பற்றிக் கேள்விஎழுப்ப முயன்றார். அப்போது ட்ரம்ப் கோபம் அடைந்து போதும்...போதும்... என்று கூறியதுடன் அவரிடம் இருந்து ஒலிவாங்கியைப் பறிப்பதற்கு உத்தரவிட்டார். அதைப் பறிக்க முயன்ற பெண் ஊழியரிடம் அதைக் கொடுப்பதற்குத் தயங்கிய செய்தியாளர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாகக் கையசைத்துக்கொண்டார். இதனால், அவர் அத்துமீறி நடந்து கொண்டதாக முறைப்பாடு கூறப்பட்டது.

மேலும் மறு அறிவிப்பு வரும் வரை அவர் வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்குத் தடை விதிப்பதாகவும் ட்ரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ட்ரம்புக்குப் பன்னாட்டு அளவில் கண்டனங்கள் எழுந்தன. இதற்கிடையே வெள்ளை மாளிகைக்குள் நிருபர் அகோஸ்டா நுழையத் தடை விதித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிபர் டிரம்ப் மீது சி.என்.என். நிர்வாகம் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.



## வீதியில் காத்திருக்கும் நாய்!

ன்வந்த
டுகிறது.
ருக்கும்
ஆம் திக
தப்படும்
வய்போ
க்குப் பதி
ள்ளது)
நாயின்
ாவரும்

மனம் நெகிழ்ந்து வருகின்றனர்.
1920களில் ஜப்பானில் ஹசிகோ என்ற நாய் ஒன்று தனது உரிமையாளருக்காகத் தினமும் ரயில் நிலையத்தில் வந்து காத்திருக்கும்.
9 ஆண்டுகளாக அந்த நாய் அவருக்காக ரயில் நிலையத்தில் காத்திருந்தது. ஹசிகோவுக்கு ஜப்பானில் சிலை ஒன்றும் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# யாவில்
# காட்டுத் தீ
## கை அதிகரிக்கிறது

அண்மையில்
ளவில் அங்கு
கிச் சாவடைந்










7ஆயிரம் கட்டடங்கள் எரிந்து நாசமாகி உள்ளன. தீ தொடர்ந்து பரவினால், 15ஆயிரத்து 500 கட்டடங்கள் பாதிப்படையக்கூடிய நிலையில் உள்ளன. 1933ஆம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் ஏற்பட்ட கிரிவ்பித்ஸ் பார்க் தீ விபத்தைவிட இது மோசமான்து என்று குறிப்பிடப்படுகிறது. கலிபோர்னியாவில் காட்டுத் தீ ஏற்படுவது வழமையானது. பொதுவாகக் கோடை காலத்தில் தொடங்கி இலையுதிர் கலாம் வரை இது நீடிக்கும். ஆனால், இப்போது ஆண்டு முழுவதும் காட்டுத் தீயினால் ஆபத்து இருப்பதாகக் கூறப்படுகிறது. பருவநிலை மாற்றம் மற்றும் வானிலை ஆகியவை தான் இந்தக் காட்டுத்தீ பரவுவதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக அதிக அளவிலான வெப்பம் பதிவாகிறது. மழைவீழ்ச்சியின் அளவும் குறைந்துள்ளது. அதிகரித்திருக்கும் வெப்பமே இதற்குக் காரணம். இந்த வெப்ப அதிகரிப்புக்கு அத்திபாரமிட்டது மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளே. ஆனால், இதிலிருந்து விலங்குகளும், ஏனைய காட்டு வாழ் உயிரினங்களும் தப்பவில்லை.

# தந்தையால் வன்புணரப்பட்ட பெண்ணுக்குச் சிறை!



சன்சல்வோடர்.நவ.15

எல்சால்வேடர் நாட்டில் வளர்ப்புத் தந்தையால் வன்புணரப்பட்டதாகக் கூறுகின்ற பெண் ஒருவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வன்புணரப்பட்ட பெண் தனது கர்ப்பத்தைச் சட்டவிரோதமாகக் கலைப்பதற்கு முற்பட்டமையே இந்தச் சிறைத்தண்டனை விதிப்பு எதிர்பார்க்கப்படுவதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. எல்சால்வேடரைச் சேர்ந்த கோர்டெஸ், 12 வயது முதல் தனது வளர்ப்புத் தந்தையால் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறார். இந்த நிலையில் அவர் கர்ப்பம் அடைந்திருக்கிறார். கர்ப்பம் அடைந்ததை அறியாத அவர் கடுமையான குருதிப்போக்கு மற்றும் வேதனையுடன் துடித்தவேளையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் கருக்கலைப்புக்கு முயன்றிருப்பதாகச் சந்தேகம் அடைந்து பொலிசாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனால், கொலை முயற்சியில் ஈடுபட்டதாக கோர்டெஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை பெற்ற அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது பொலிஸ். தற்போது இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது. அப்போது வளர்ப்புத் தந்தையால் தான் தொடர்ந்து வன்புணரப்பட்டு வந்ததாகக் கூறியிருக்கிறார். கோர்டெஸ் கூறியவை அனைத்தும் பொய் என வளர்ப்புத் தந்தையின் தரப்பால் நீதிமன்றில் மறுக்கப்பட்டது. ஆனால் மருத்துவ பரிசோதனையில் வளர்ப்புத் தந்தை குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் தனது கருவைக் கலைக்க முயன்றதாக கோர்டெஸ் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

# பத்திரிகையாளரான ஜமாலின் உடலுக்கு என்ன நடந்தது...?

அங்கார நவ. 15

கொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜமாலின் உடலுக்கு என்ன நடந்தது என்ற ஊகங்கள் தொடார்ந்து வெளிவந்துள்ள நிலையில், ஜமாலின் உடல் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு ஏதொ ஓர் வகை அமிலத்தில் கரைக்கப்பட்டுத் துருக்கியிலுள்ள சவூதித் தூதரக வாய்க்காலில் ஊற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்த வாய்க்காலில் கிடைத்த திரவப்பொருள்களின் மாதிரிகளைப் பரிசோதித்தபோது அவற்றில் அமிலம் கலந்துள்ளமை தெரிய வந்துள்ளது எனத் துருக்கியின் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.




ஜமால் இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி இஸத்தான்புல்லில் உள்ள சவூதி தூதரகத்துக்கு அவருடைய திருமணம் சம்பந்தமான ஆவணங்களைப் பெற்றுக்கௌ வதற்காகச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் காணாமல் போயுள்ளார். அவர் தூதரகத்தில் வைத்து சவூதி அரசால் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் துருக்கி அரசும் அவர் தூதரகத்தை விட்டு வெளியேறிவிட்டார் எனச் சவூதி அரசும் மாறி மாறிக் கூறிவந்தன. ஜமால் கஷோகி ஆரம்ப காலங்களில் சவூதி அரசகுடும்பத்துடன் நெருங்கிய உறவைப் பேணி வந்தபோதிலும், பின்னர் சவூதியிலிருந்து வெளியேறிச் சவூதி அரசுக்கும் சவூதி இளவரசருக்கும் எதிரான கருத்துக்களை எழுதத்தொடங்கியிருந்தார். இதுவே அவரின் உயிருக்கும் எமனாக அமைந்தது. சவூதித் தூதரகத்துக்குள் சென்றபோது, ஏற்கனவே சரியாகத் திட்டமிட்டபடி அவர் மிகக்கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சவூதி இளவரசருக்கு மிக நெருங்கய வரான மகர் அப்துல் அசீஸ் முட்ராப் என்பவரின் த்லைமையில் 15பேர் கொண்ட குழு கொலை நடந்த ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி காலையில் 2 விமானங்களில் சவூதியின் தலைநகர் ரியாத்திலிருந்து இஸ்லமாபாத்துக்குப் புறப்பட்டுள்ளது. அவர்கள் கொண்டுசென்ற பொதிகளில் கத்தரிக்கோல்கள், ஊசிகள் 'ஸ்ட்டேப்ளர்' 10 அலைபேசிகள் 5 'வாக்கி டோக்கிகள்' அழுத்திப்பிடிக்கும் ஒரு கருவி போன்ற பல இருந்ததாகக் கூறப்படுகிறது:. இதில் ஈவிரக்கமற்ற மிலேச்சத்தனமான செயல் என்னவென்றால் இந்தக் குழுவின் தலைவனான மகர் அப்துல் அசீஸ் ஜமாலின் விரல்களை ஒவ்வொன்றாக வெட்டும்போது இசையை இரசித்துக்கொண்டே இது போன்ற வேலைகளைச் செய்வது தனக்குப் பிடித்தமான விடயம் எனக்கூறித் தன்னுடை சகாக்களையும் பாடலை இரசிக்கும்படி கூறியுள்ளான். ஜமாலின் சாவு ஓலம் தூதரகம் எங்கும் ஒலித்துள்ளது. ஜமாலின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டுக் கருப்புப் பைகளில் போடப்பட்டு கருப்புக் கண்ணாடியால் மூடப்பட்ட ஒரு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதாக ஒரு தகவலும், துண்டு துண்டாக வெட்டப்பட்ட அவரது உடல் துருக்கியில் உள்ள சவூதிக்கான தூதுவரின் வாசஸ்த்தலத்தின் கிணற்றில் போடப்பட்டுள்ளதாக ஒரு தகவலும் உள்ள நிலையில் அவரது உடல் சவூதித் தூதரகத்தின் உள்ளேயே வைத்து அமிலத்தில் கரைக்கப்பட்டுள்ளதாகக் கடைசியாக வெளியாகியுள்ளது இந்தத் தகவல். இது இப்படி இருக்கையில் ஜமாலின் மகன்மார் தங்கள் தந்தையின் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக அவரது உடலைத் தரும்படி சவூதி அரசிடம் வேண்டுகேள் விடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் ட்ரம்ப் தோல்வி அடைவார் கருத்துக் கணிப்பொன்றிபடி ஆரூடம் கூறப்பட்டிருக்கிறது

வோஷிங்டன்.நவ.15

2020ஆம் ஆண்டில் நடக்கவிருக்கின்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் மிச்சேல் ஒபாமா, எலிசபெத் வாரன் ஆகிய பெண் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால், ட்ரம்ப் தோல்வி அடைவார் என்கின்ற விடயம் கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பதவி ஏற்றார். *அவர் பதவி ஏற்று 2 ஆண்டுகள்* முடிய உள்ளது. அமெரிக்க அதிபரின் பதவிக் காலம் 4 ஆண்டுகள் ஆகும். இதனால் 2020ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் நடக்க இருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்த வரை அதிபர் தேர்தல் பணிகள் ஒரு ஆண்டுக்கு முன்பே தொடங்கிவிடும். அமெரிக்காவில் அதிபராக இருக்கும் ஒருவர் 2முறை தேர்தலில் போட்டியிடலாம், அதன்படி குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ட்ரம்ப் அடுத்த தேர்தலிலும் போட்டியிடுவார். ஜனநாயகக் கட்சியில் இருந்து டிரம்புக்கு எதிராக வேட்பாளர் நிறுத்தப்படுவார். அமெரிக்க அதிபர் தேர்தல் விதிகளின்படி ஒருவரை வேட்பாளராகத் தெரிவு செய்வதற்காகக் கட்சிக்குள்ளே தனித்தனியாக தேர்தல் நடைபெறும். உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள். இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள்தான் வேட்பாளராகப் போட்டியிட முடியும். 2020ஆம் ஆண்டில் நடக்கவிருக்கின்ற தேர்தலுக்காக ஜனநாயகக் கட்சி சார்பில் 25இக்கும் மேற்பட்டவர்கள் தயாராகி வருகிறார்கள். இந்த நிலையில் இதையொட்டிக் கருத்து கணிப்பு ஒன்று *நடத்தப்பட்டது. ட்ரம்பை எதிர்த்து* ஜனநாயகக் கட்சியின் சார்பில் மிச்சேல் ஒபாமா, எலிசபெத் வாரன் ஆகிய பெண் வேட்பாளர் நிறுத்தப்பட்டால் ட்ரம்ப் தோல்வி அடைவார் என்று அந்தக் கருத்து கணிப்பில் தெரிய வந்துள்ளது.



# நிதானமாக செயற்படும் திரிஷா



திரிஷா13 ஆண்டுகளாககதாநாயகியாகநடித்துவருகிறார். 50படங்களைதாண்டிவிட்டதிரிஷாகடந்த சில ஆண்டுகளாக பின்னடைவைச் சந்தித்தார். விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்த '96' படம் அவருக்குப் பெரிய வெற்றியை தந்துள்ளது. அதனுடன் தனது நீண்ட நாள் கனவான ரஜினியுடனும் 'பேட்ட' படத்தில் நடித்து வருகிறார்.

தற்போது கிடைத்திருக்கும் முன்னணி நடிகை அந்தஸ்தைக் காப்பாற்ற கதை கேட்கும்போது இனி வரும் காலத்தில் தீவிர கவனம் செலுத்த முடிவு செய்துள்ளார். அவர்தன்னைதேடிவரும்அனைத்துவாய்ப்புகளையும் ஏற்பது இல்லை.

மாறாக தான் இதுவரை நடித்திராத கதாபாத்திரங்களாகப் பார்த்துத் தேர்வு செய்கிறார். அவசரப்படாமல் நிதானமாக படங்களைத்தேர்வுசெய்துநடித்துரசிகர்களிடம்வாங்கிய நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறார்.









அறிவுரையினால் புரிந்து கொள்பவரை விட, அனுபவத்திலிருந்து தெரிந்து கொள்பவரே அறிவாலும் மனதாலும் பலசாலியாகிறான்!



## இன்றைய இநாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். இனிதாக வாழ்க்கை நடத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**இடபம்:** சிலர் உங்களை சுயநலத்துடன் அணுகுவர். அவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிவீர்கள்.

**மிதுனம்:** நிதானமாகச் செயல்படுவது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. இலாபம் ஓரளவுக்கு வரும்.

**கடகம்:** சேவை மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். துவங்குகிற பணி முழு அளவில் வெற்றியைத் தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும்.

**சிங்கம்:** செயலில் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். அலைச்சல் தந்த வேலை இலாபம் தருவதாக மாறும்.தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** சிலரது பேச்சு சங்கடம் உருவாக்கும். கூடுதல் வேலைப்பளு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

**துலாம்:** எண்ணம், பேச்சில் கட்டுப்பாடு அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவுக்கு இருக்கும். நிர்வாகத்தில் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனதில் இரக்க குணம் மேலோங்கும். நற்செயல் புரிந்து சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமமான சூழ்நிலையை தாமதமின்றி சரி செய்யவும். இலாபம் இருக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான வாய்ப்பு உங்களைத் தேடி வரும். மனதில் கவலை நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணி மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** சிறிய பணி கூட, சுமை போல தோன்றும். தொழில், வியாபாரம் சிறக்க கூடுதல் பணிபுரிவது அவசியம். இலாபம் சீராக இருக்கும்.

**மீனம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

இந்தக் கொசுவுக்கு வயிறு முட்ட எவ்வளவு குருதி தேவைன்னு தெரிஞ்சா முன்னாடியே ஒரு டம்ளர் எடுத்து வச்சிடலாம், மூதேவி இரவு முழுக்கக் கடிக்குது.









| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | 1 | |
| | | 6 | 9 | | 4 | | | 7 |
| 7 | | | | | | 4 | 3 | |
| 4 | | 7 | | | | | | |
| 5 | | 2 | 7 | | 8 | 9 | | 4 |
| | | | | | | 7 | | 8 |
| | 4 | 5 | | | | | | 2 |
| 2 | | | 8 | | 6 | 5 | | |
| | 7 | | 2 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 4 | 3 | 8 | 6 | 5 | 7 | 2 |
| 5 | 2 | 8 | 7 | 4 | 1 | 6 | 9 | 3 |
| 7 | 3 | 6 | 9 | 5 | 2 | 4 | 1 | 8 |
| 6 | 5 | 9 | 1 | 2 | 3 | 8 | 4 | 7 |
| 2 | 8 | 1 | 4 | 6 | 7 | 9 | 3 | 5 |
| 4 | 7 | 3 | 8 | 9 | 5 | 2 | 6 | 1 |
| 8 | 6 | 7 | 5 | 1 | 9 | 3 | 2 | 4 |
| 3 | 4 | 2 | 6 | 7 | 8 | 1 | 5 | 9 |
| 9 | 1 | 5 | 2 | 3 | 4 | 7 | 8 | 6 |

## சுடோக்கு

எண் விளையாட்டு

# மாறியது நெஞ்சம்




ஒரு காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் சாதுவான மிருகங்களும், மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மிருகங்களும் இருந்தன.
இவைகளுடன் ஒரு சிறுத்தையும் இருந்தது. சிறுத்தை எப்போதும் மற்றமிருகங்களைத்துன்புறுத்தும், விளையாட்டாகப்பாயும், கடித்துக் காயப்படுத்தும். சில வேளைகளில் விளையாட்டு வினையாவது போன்று கொன்றுவிடும். இவ்வாறுசெய்து மற்றஉயிர்கள்வேதனை அடைவதைக் கண்டு மகிழ்ச்சியடையும்.
இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு மரத்தின் இரு கிளைகளுக்கு நடுவில்பதுங்கியிருந்தமுயலைக்கண்டுஅதன்மீதுபாய்ந்ததுசிறுத்தை. ஆனால் முயலோ வேகமாகப் பாய்ந்து தப்பித்துக் கொள்ள, சிறுத்தையோ அந்த இரு மரக்கிளைகளுக்கிடையில் மாட்டிக் கொண்டு தவித்தது.
"ஐயோயாராவது எனக்கு உதவுங்கள்! யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்! ஐயோ நான் செத்தேன்" என்று ஓலமிட்டது.
சிறுத்தையின் நிலையைப் பார்க்கப் பார்க்க முயலுக்கு அதன் மேல் இரக்கம் உண்டானது. அது அங்கு நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த மானிடம் சென்று சிறுத்தையைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டது.
"மானோஎன்னஉன்னைத்தானேசற்றுமுன்புஅதுகொன்றுதின்னப் பார்த்தது. அதற்குள் மறந்து விட்டாயே? நான் காப்பாற்றினால் அது என்னையும் கொன்றுவிடும். போசாமல் வா நாங்கள் இங்கிருந்து போய்விடுவோம்" என்றது மான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுத்தை மீண்டும் எனக்கு உதவுங்கள்! உதவுங்கள்! என்று பரிதாபமாகக் குரல் எழுப்பியது. இப்போது மானுக்கும் சிறுத்தை மேல் இரக்கம் ஏற்பட்டது. சிறுத்தையை மரக்கிளையில் தொங்கியபடி விட்டுச் செல்ல அதற்கு மனம் வரவில்லை.
உடனே அது தனது அழகிய கொம்புகளை மரக்கிளையின் இடையே செலுத்திசிறுத்தையைமரக்கிளையின்இடையேஇருந்துவிடுவித்தது. ஆனால்பாரமானசிறுத்தையின்உடலைமானின்கொம்புகள்தாங்க முடியாததால்அவைமுறிந்துவிட்டன. ஆனாலும்சிறுத்தயைமீட்டதில் மானுக்கும்முயலுக்கும்மிக்கமகிழ்ச்சி. சிறுத்தை மரத்திலிருந்து விடுவிக்கப்பட்டதும்மானுக்குமிகுந்தநன்றிகூறியது. தன்னால்மானின் அழகிய கொம்புகள் முறிந்தமைக்காக மிகவும் வருத்தப்பட்டது. இப்போது மூன்று மிருகங்களும் நண்பர்களாயின. காட்டு விலங்குகள் எல்லாம் இவர்களின் நட்பைக் கொண்டாடி மகிழ்ந்தன. எமக்குத் துன்பம் செய்தவர்களுக்கு நாம் தீங்கு செய்யாதிருப்பதே உண்மையான நட்பாகும்.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்துவிடல் - குறள் 314**

**பொருள் :** எமக்கு ஒருவர் துன்பம் செய்தால் பதிலுக்கு நாமும் அவருக்குத் துன்பம் செய்யாது, மாறாக நன்மையே செய்து விடல் வேண்டும். இதுவே துன்பம் செய்தவரைத் திருத்தும் வழி

## வழிகாட்டுவோம்




## தெரிந்து கொள்வோம்

உயிரினங்களில் யானையால் மட்டுமே துள்ளிக் குதிக்க முடியாது.

தண்ணீர் இருப்பதை அண்ணளவாக 5 கிலோ மீற்றர் தூரத்திலிருந்தே தெரிந்துகொள்ளும்.

யானையின் பற்கள் அண்ணளவாக 5 கிலோ எடைவரை இருக்கும்.

ஆறு முறை பற்கள் விழுந்து முளைக்கும். ஆறாவது தடவை முளைத்த பற்கள் விழுந்து விட்டால் யானையால் சாப்பிட முடியாது. விரைவில் மரணமடைந்துவிடும்.

தும்பிக்கையின் மூலம் 7.5 லீற்றர் தண்ணீரை எடுத்துக் குடிக்கும் திறனுடையது.

ஆரோக்கியமான யானை ஒரு நாளைக்கு அண்ணளவாக 270 லீற்றர் தண்ணீரைக் குடிக்கும்.


ஆப்பிரிக்க யானைகள் வெப்பத்தில் இருந்து காத்துக் கொள்வதற்கு, சகதியைப் பூசிக்கொள்ளும். இப்படிச் செய்வதன் மூலம் பூச்சிகடியிலிருந்தும் தப்பிவிடும்.

யானையின் தும்பிக்கை அண்ணளவாக 1,50,000 தசைகளால் ஆனது.

தும்பிக்கை மூலம் ஒரு நாணயத்தையும் எடுத்துவிடும். ஒரு மரத்தையும் சாய்த்துவிடும்.


அண்ணளவாக எழுபது ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

## நேரத்தின் பெறுமதி




நேரம்என்பதுஓர்அபூர்வமானபொருள். அதைப்பலரும்கண்ணெதிரிலேயே வீணாகக் கரைக்கிறார்கள். சிலர் அதை அலட்சியப்படுத்துகிறார்கள். நேரம்கழிந்துபோனபின்பு "ஐயோகாலத்தைவீணடித்துவிட்டோமே எனக் கலங்குகிறார்கள். ஏனெனில் கடந்து போன நேரங்கள் எமக்கு திரும்பவும் கிடைக்காதவை.
நேரத்தின் பெறுமதியை அறிய முடியாதவர்கள் அதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமானால் இது விடயத்தில் நிதர்சனமாக அனுபவம்பெற்றவர்களைச் சந்தித்துப் பேசிப்பார்க்கவேண்டும்.

- ஓர் ஆண்டின் அருமையை உணர வேண்டுமானால் 5 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றுத் தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைச் சந்தித்துக் கேட்க வேண்டும். ஒரு சிறிய கவனக் குறைவால் படித்த பாடங்களையே மீண்டும் ஆண்டு முழுக்கப் படிப்பதென்பது எவ்வளவு சிரமம் என்பதை அவர் கூறுவார்.
- ஒரு மாதத்தின் அருமையை உணர வேண்டுமாயின் குறைப்பிரவசமாககுழந்தைபெற்றதாய்மாரைக்கேட்கவேண்டும். குறைப் பிரசவக் குழந்தையைக் காப்பாற்றுவதில் எத்தனை இடர்பாடுகள். இடர்பாடுகள்பட்டாலும் இறுதியில்குழந்தையின்உயிருக்கு உத்தரவாதம்உண்டென்றால்அதுவும்இல்லை. ஓரிருமாதங்கள் தள்ளிப் பிறந்திருந்தால் வாழ்க்கை எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும் என்பார்கள்.
- ஒரு வாரத்தின் அருமையை அறிய ஒரு வாரப்பத்திரிகை ஆசிரியரைச் சந்தித்துப் பேசலாம்.
- ஒருநாளின் அருமையைத்தினக்கூலிபெற்றுப்பிழைக்கும்ஒரு தொழிலாளியிடம் கேட்டு அறியலாம்.
- ஒரு மணிநேரத்தின் அருமையை ஒரு மருத்துவரிடம் கேட்டு உணர முடியும். விபத்தில் சிக்கிய ஒருவரை சில மணிநேரம் தாமதமாக மருத்துவரிடம் அழைத்து வந்து அவர் உயிர் பிழைக்காது போயின் மருத்துவர் "ஒரு மணி நேரம் முன்பாக இவரைக் கொண்டு வந்திருந்தால் என்னால் காப்பாற்றியிருக்க முடியும்" என வருத்தத்துடன் கூறுவார்.
- ஒருநிமிடத்தின்அருமையைஉணர்வதற்குத்தான்செல்லவேண்டிய தொடருந்தைத் தவறவிட்டவரிடம் கேட்டறியலாம்.
- ஒரு விநாடியின் அருமையை உணர வேண்டுமாயின் வீதி விபத்தொன்றில்மயிரிழையில்உயிர்தப்பிய ஒருவரைக்கேட்கவேண்டும்.




# பென்குயின்கள்!



பறக்க இயலாத பறவைகளில் ஒன்று பென்குயின். தென் துருவப் பகுதிகளில் பென்குயின்கள் அதிகமாக வசிக்கின்றன. வட துருவத்தில் பென்குயின்கள் இல்லை.
அந்தாட்டிகாவில் வாழும் பேரரச பென்குயின்கள் உயரமானவை.
அழகானவை. 4 அடி உயரமும் 45 கிலோ எடையும் கொண்டவை.
பறக்க முடியாவிட்டாலும் பென்குயின்களால் வேகமாக நீந்த முடியும். ஒருமுறை தண்ணீருக்குள் சென்றால், 20 நிமிடங்களுக்குப் பிறகு வெளியே வருகின்றன.
பென்குயின்களின் இறக்கைகள் துடுப்புபோல் நீந்துவதற்கு உதவுகின்றன. பாதி நேரம் கடலிலும், பாதி நேரம் நிலத்திலும் பென்குயின்கள் வாழ்கின்றன.
பென்குயின்களால் நன்றாக நடக்கவும் முடியும். சக்தியைச் சேமிப்பதற்காகவும், வேகமாக நகர்வதற்காகவும் பனிக்கட்டி மீது வயிற்றை வைத்து வழுக்கிச் செல்கின்றன.
கடுங் குளிர் நிலவும் அந்தார்டிக்காவில் குளிரைத் தாங்கும் விதத்தில் பென்குயின்களின் உடல் அடர்த்தியான முடிகளால் மூடப்பட்டுள்ளன.
உடலில் இருந்து எண்ணெய் சுரப்பதால், குளிரோ தண்ணீரோ உடலை எளிதில் தாக்காது. குளிரிலிருந்து தப்பிக்க பென்குயின்கள் கூட்டமாகவும் வசிக்கின்றன.
பென்குயின்களில் பல வகைகள் இருக்கின்றன. ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, பெரு, நியூசிலாந்து, கலப்பகோஸ் தீவுகளிலும் வாழ்கின்றன.

# மனதில் உறுதி வேண்டும்!

ப.கலையரசி




மனிதர்கள் ஒவ்வொருவரும் எதையாவது நினைத்துக் கொண்டே இருப்பார்கள். பேசிக் கொண்டிருந்தாலும், எந்தச் செயலைச்செய்துகொண்டிருந்தாலும்மனித மனம்எதைப்பற்றியாவதுஓயாதுசிந்தித்துக் கொண்டே இருக்கும். இது இயல்பானது. மனம் ஒரு நிலையில் நில்லது அலைபாய்ந்து கொண்டே இருக்கும். அதனால்தான்மனதைக்குரங்கிற்குஒப்பிட்டுப்பெரியோர்கள் கூறினர்.

இந்த மனித மனம் எப்போதும் ஏதாவதொன்றைநினைத்துக்கொண்டேஇருக்கும் மனம் நினைப்பதை நடத்திக் காட்ட வேண்டும் என்றும் நினைக்கும், தாம் நினைக்கும் அனைத்துச் செயல்களும் உடனேநிகழவேண்டும்என்றுஒவ்வொருவரும் நினைக்கின்றனர். மனிதன் கொண்டுள்ள இத்தகைய பண்பியல் கூறை பழமொழிகள் பலவும் எமக்கு எடுத்துரைத்து நிற்கின்றன.

**நினைதலும் நடத்தலும் சிந்தனையின் பரிணாமங்கள்**

மனிதன் நினைப்பது அனைத்தும் நடப்பது என்பது அரிது. அவ்வாறு நடந்துவிட்டால் எந்த ஒரு மனிதனும் தரையில் நடக்க மாட்டான். வானத்தில் பறந்து கொண்டே இருப்பான். இங்கு நினைப்பு என்பது மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது. சிலர் நல்லனவற்றை நினைப்பர். வேறுசிலர்எப்போது பார்த்தாலும்தீயனவற்றையேநினைத்துக்கொண்டிருப்பர். நன்மைநடந்தால்மனிதன்மகிழ்கிறான். தீயவைநடந்தால்வருந்துகிறான், நல்லனவற்றை நினைப்பவரை 'நேர்மறை'ச் சிந்தனையாளர் என்று அழைப்பர், எப்போதும் தீயனவற்றையே நினைத்துக் கொண்டு பேசுபவர்களை 'எதிர்மறை'ச் சிந்தனையாளர்என்றுஅழைப்பர். 'எதிர் மறை'ச் சிந்தனையாளர்கள் குறித்து நாம் சிறிது எச்சரிக்கையாகவே இருக்க வேண் டும். ஏனெனில் அவர்களும் விரக்திஅடைந்து, சுற்றியிருப்பவர்களையும்அத்தகையமனநிலைக்குக்கொண்டு வந்து விடுவர்.



நாம்இந்தச்செயல்இப்படித்தான்நடக்கும் என்று கருதிச் செய்தல் கூடாது. செயல் நம்முடையதாக இருப்பினும் அதன் முடிவுஇறைவனதுகைகளில்தான் உள்ளது. நல்லதில்போய்முடியும்என்றுநாம் நினைத்து ஒன்றைச் செய்தால், அது தீயதில் போய் முடியும். அப்போது என்ன இப்படிச் செய்துவிட்டாயே என்று பிறர் நம்மைப் பார்த்துக் கேட்கின்ற போது, "இப்படிநடக்குமென்றுநான்எதிர்பார்க்கவில்லை. நல்லது நடக்கும் என்றுதான் நினைத்தேன். ஆனாலும் இப்படித் தவறாகமுடிந்துவிட்டது."என்றுகூறுவோம். இதை, 'நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று!' என்ற பழமொழி எடுத்துரைக்கின்றது.

**மகாபாரதம் தரும் அறிவுரை!**

மகாபாரதத்தில் ஒரு காட்சி வருகின்றது. வியாச பகவான், தருமனும் அவன் தம்பிகளும் இருக்கின்ற இந்திரபிரஸ்தத்திற்கு வருகின்றார். பாண்டவர்கள் அனைவரும்சென்றுஅவரைவணங்கி வரவேற்று, அவரை உயர்ந்த ஆசனத்தில்அமருமாறு கூறுகின்றனர். அவரும் அவர்களது அன்பினில் மனதைப் பறிகொடுத்தவராக அவர்கள் கூறியபடியே உயர்ந்த ஆசனத்தில அமர்ந்துகொண்டார்.

இப்போது வியாச முனிவரைப் வணங்கிப் பணிந்த தருமர், "முக்காலமும் உணர்ந்தமுனிவரே!எங்களுக்குநல்லனவற்றை உபதேசித்து அருள வேண்டும்; இனி என்ன நிகழப்போகிறது என்பதைக் கூறி நாங்கள் அதற்கேற்ப எப்படி நடந்துகொள்ளவேண்டும்என்பதையும் எங்களுக்குத் தேவரீர் எடுத்துரைக்க வேண்டும்" என்று வேண்டினான்.

அதற்கு உடனேயே பதில் கூறாத வியாச முனிவர்கண்களைமூடித்தியானம்செய்தார். பின்புதருமனைப்விழித்து, "தருமா! உன்னால் இந்தக் குலம் அழியக்கூடிய செயல் தொடங்கப் போகிறது. அதற்கு நீயே காரணமாக இருக்கப் போகிறாய். ஆதலால் நீங்கள் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்" என்று கூறி அவர்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு பணித்து அவ்விடம் இருந்து நீங்கினார்.

அவரைவழியனுப்பிவைத்தபண்டவர்கள் மனம் கலங்கினர். நடைபெறப்போகும் விபரீதம் குறித்துச் சிந்தித்தனர். இந்தச் சந்தர்ப்பத்திலே தம்பியரை அழைத்த தருமன், "நம் குலநாசத்திற்கு காரணமாகநானேஇருக்கப்போகிறேன் என்று வியாச பகவான் கூறிவிட்டாரே! நான் என் செய்வேன்?" என்று கூறிக் கவலையுற்றான்.

தம்பியர்கள் சமாதனம் கூறியும் அவனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீண்ட நேர யோசனைக்குப் பின்னர் தருமபுத்திரன் ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தன் தம்பியரையும், அவையினரையும்அழைத்தான். அவர்களைப்பார்த்து, "இனிமேல் யார் எதைச் செய்யச்சொன்னாலும்அதைஅப்படியே செய்வேன். மறுத்து எதுவும் கூற மாட்டேன். இதுசத்தியம்!இவ்வாறுசெய்தால் என்னால்எதுவும்பிரச்சனைகள்ஏற்பட்டு அதன் காரணமாக எமது குலம் அழியாதல்லவா? அதனால்தான் இவ்வாறு செய்கிறேன்." என்று சபதம் எடுத்தான். அதைக் கேட்ட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். "என்ன தருமபுத்திரர் இவ்வாறு விநோதமாகச் சபதம் செய்கின்றாரே?" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

தருமன், மற்றவர்கள்சொல்வதற்குமறுப்பேதும் கூறாது அதற்குச் சம்மதித்து விட்டால்எந்தச்சிக்கலும்வராது. அனைத்தும் நல்லதாகவே முடியும் என்று நினைத்தான். ஆனால் அவ்வாறு நடந்ததா? எனில் இல்லை என்றே கூறலாம். துரியோதனன் புதிய மண்டபத்தைப்பார்க்கஅழைப்புவிடுத்ததும் அதைத் தருமன் ஏற்றுக் கொண்டான். புதியசபாமண்டபத்தைப்பார்த்தவுடன் அவனைச்சூதினுக்குத்துரியோதனனும், சகுனியும் அழைக்க, எங்கே மறுத்தால் பிரச்சினை வந்துவிடுமோ என்று கருதி தருமன் சம்மதித்துச் சூதாடி அனைத்தையும் இழந்தான். தம்பி, மனைவி என்று எவற்றை இழக்கக் கூடாதோ அவற்றையும்இழந்து காட்டுக்குச் சென்று துன்புற்றான். இறுதியில் குலம் முழுவதும் அழிவதற்கும் காரணமாகிவிட்டான்.

உண்மையில் அவன் நினைத்தது ஒன்று. ஆனால்நடந்ததுஒன்று. இதுதருமபுத்திரனின்வாழ்க்கையில்மட்டுமல்ல. சாதாரண மனிதர்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் நடக்கும். இதுவே உலக நியதி. ஒருவனும் ஒருத்தியும் விரும்புகின்றனர். இருவரும் மனதளவில்ஆசையைவளர்க்கின்றனர். மணம் செய்து கொள்ளலாம் என நினைக்கின்றனர். ஆனால் இருவரும் வேறுவேறு நபரை மணந்து கொள்கின்றனர். அவர்கள் நினைத்ததோ ஒன்று. ஆனால் நடந்ததோவேறு. இதைத்தான், "பால்வரைத் தெய்வம் கூட்டுவிப்ப" என்று உரையாசிரியர்கள் கூறினர் போலும்.

**நாம் நினைப்பதும் தெய்வம் நினைப்பதும்**

நாம் நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதென்றால் தெய்வத்தை யாரும் நினைக்கவோ, பொருட்படுத்தவோ மாட்டார்கள். அதனால்தான் கண்ணதாசன், 'நினைப்பதெல்லாம்நடந்துவிட்டால் தெய்வம்ஏதுமில்லை!' என்றுபாடினார். மனிதர்கள்எப்போதும்தாம் நிலைத்த வாழ்வையே வாழப் போகிறோம்என்றுகருதுகிறார்கள். ஆனாலும் மனிதன் அவனது பருவங்களை ஒவ்வொன்றாக இழந்து முடிவில் அவன் நினைப்பது நடக்காது போய்விடுகின்றது. மனிதன் நினைப்பது ஒன்றாகவும், தெய்வம்நினைப்பதுவேறொன்றாகவும் முடிகின்றது. இது உலக இயல்வு. இதை உணராது மனிதன் வாழ்கின்றான். இதை உணர்ந்து கொண்டு மனிதன்திருந்திவாழவேண்டும். எல்லாவற்றுக்கும் இறைவனே காரணமாக இருக்கிறான், அதுவே உண்மை என்பதை ஏற்றுக்கொண்டு பண்பட்ட வாழ்வை வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.

**நல்லனவற்றையே நினைப்போம்! நல்லனவற்றையே செய்வோம்!**

நாம் என்ன நினைக்கின்றோமோ அதுவே நடக்கும். அது உலக இயற்கை. அதனால் நல்லனவற்றையே நாம் நினைக்க வேண்டும். ஏனெனில் எண்ணங்களுக்கு அதிகமான வலிமை உண்டு. நல்ல எண்ணங்களை நாம் நினைக்கநினைக்கஅவைஅனைத்தும் செம்மையாக நடைபெறும். தீயனவற்றை நாம் நினைத்தால் தீமையே விளையும். இதை, 'நல்லதே நினை நல்லதே நடக்கும்!" என்ற பழமொழி எடுத்துரைக்கின்றது.

ஆம், 'நீங்கள் என்னவாக ஆக விரும்புகிறீர்களோஅதுவாகவேஆகிவிடுவீர்கள்' என்றபொன்மொழியையும், 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர், திண்ணிய ராகப் பெறின்!' என்ற திருக்குறளையும் உட்பொதிந்த பழமொழியாக இந்தப்பழமொழிஅமைந்திருப்பதுநோக்கத்தக்கது.

ஆகவே, நல்லனவற்றையே நினைத்து நல்லனவற்றையேசெய்வோம். பிறருக்கும் நல்லதை நினைப்போம். அனைவருக்கும்நல்லதுநடக்கவேண்டும்என்று நினைப்போம். நாம்மட்டுமல்ல உலகில் உள்ளஅனைவரும்மனமகிழ்ச்சியுடன் வாழ்வோம். வாழ்க்கையில் என்றும் வசந்தம் வீசும்.

> நாம் நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதென்றால் தெய்வத்தை யாரும் நினைக்கவோ, பொருட்படுத்தவோ மாட்டார்கள். அதனால்தான் கண்ணதாசன், "நினைப்ப தெல் லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை!" என்று பாடினார். மனிதர்கள் எப்போதும் தாம் நிலைத்த வாழ்வையே வாழப்போகி றோம் என்று கருதுகிறார்கள். ஆனாலும் மனிதன் அவனது பருவங்களை ஒவ்வொன்றாக இழந்து முடிவில் அவன் நினைப்பது நடக்காது போய்விடுகின்றது. மனிதன் நினைப்பது ஒன்றாகவும், தெய்வம் நினைப்பது வேறொன்றாகவும் முடிகின்றது. இது உலக இயல்வு. இதை உணராது மனிதன் வாழ் கின்றான். இதை உணர்ந்து கொண்டு மனிதன் திருந்தி வாழ வேண்டும்.

## கேள்வி அறிவித்தல்

யாழ் ஒளி மின்நிலையம். இலங்கை மின்சாரசபை. சுன்னாகம்.

ஒப்பந்த அடிப்படையில் வாகனத்தைப் பெற்றுக் கொள்ளல்

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக, ஆகக் குறைந்த 26 ஆசனங்களைக் கொண்ட பயணிகள் பஸ் ஒன்று 01 வருட ஒப்பந்த அடிப்படையில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரங்களை 15.11.2018 இலிருந்து 06.12.2018 பி.ப 15.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திர பெறுமதி - ரூபா 3.000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு - ரூபா 30.000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின் நிலையம்.
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 07.12.2018 பி.ப 2.00 மணிக்கு பிரதான பொறியியலாளர். யாழ் ஒளி மின்நிலையம். இலங்கை மின்சாரசபை. சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

(C 8352) (14.17)

## அறிவித்தல்

**அரியாலை மாட்டிறைச்சிக்கடை**

மேற்குறித்த மாட்டிறைச்சிக் கடையை 01.01.2019 - 31.12.2019 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 02.11.2018 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டது. எனினும் அரியாலை நீா நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகா் தேவஸ்தானம் நிா்வாகத்தினரால் மாட்டிறைச்சிக் கடையை அகற்றுவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இக் கடையை குத்தகைக்கு வழங்காமல் இருப்பது தொடா்பாக ஆட்சேபனை தெரிவிப்பவா்கள் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இ.ஆனோல்ட்,**
முதல்வா்,
யாழ்.மாநகரசபை, யாழ்ப்பாணம்.
15.11.2018 (c8367)

## மரணஅறிவித்தல்கள்

### வையிரவி சுப்பிரமணியம்

*(ஓய்வு பெற்ற எழுதுவினைஞா் - CC. வலி தெற்கு பிரதேசசபை)*



சங்கானையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வையிரவி சுப்பிரமணியம் 13.11.2018 செவ்வாய்க்கிழமை காலமானாா்.

அன்னாா் காலஞ்சென்றவா்களான வையிரவி - லட்சுமி தம்பதியாின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற காந்தரூபியின் (அாியமலா்) அன்புக்கணவரும் சுரேஷ் குமாா் (சணி), சுகந்தி (வினோ), வசந்தி (வின்டோ), சுதா்சன் (குமரன்) ஆகியோாின் பாசமிகு தந்தையும் ஆவாா்.

அன்னாாின் இறுதிக்கிாியைகள் இன்று (15.11.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிாியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றாா், உறவினா், நண்பா்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் கோயிலடி,**
**உடுவில், சுன்னாகம்.** (CS 21201) (14)

**தகவல்:**
**குடும்பத்தினா்.**

**071 226 9862**

## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில்
## திருநெல்வேலிச்சந்தைக் கடைத்தொகுதியில் உள்ள கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

திருநெல்வேலிச் சந்தைக் கடைத்தொகுதியில் உள்ள கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேசசபையால் கோரப்படுகின்றது.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக்கூடியது | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | கீழ் மாடி - கடை இல 03 | 1,140,000.00 | 21,000.00 | 1,000.00 |
| 02 | மேல்மாடி - கடை இல 05 | 396,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 03 | மேல்மாடி - கடை இல 07 | 600,000.00 | 12,000.00 | 1,000.00 |
| 04 | மேல்மாடி - கடை இல 10 | 480,000.00 | 9,600.00 | 1,000.00 |
| 05 | மேல்மாடி - கடை இல 15 | 480,000.00 | 9,600.00 | 1,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 29.11.2018 ஆம் திகதி 14.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 30.11.2018 ம் திகதி 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 30.11.2018 ம் திகதி பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம். தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர். நல்லூர் பிரதேச சபை. 14/5.கருவப்புலம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரர் தமது கேள்வித் தொகையினை ஒரே தடவையில் 07.12.2018 ஆம் திகதி செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
7. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையையும் மற்றும் 15 % பெறுமதி சேர் வரி (VAT). 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
8. மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும் தவறின் கட்டுப் பணத்தின் 10% தண்டப்பணமாக மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
9. முற்குறிப்பிட்ட 7, 8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச்செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
10. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. சித்திகரக் குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
13. சித்திகரக் குத்தகைதாரர் நல்லூர் பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி.**
**15.11.2018**

(IN 8365)(14.17)



### ரவீந்திரன் பிரதீசன்

கலட்டியம்மன் கோவில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் பிரதீசன் நேற்று (14.11.2018) புதன் கிழமை காலமானார்.


அன்னார் ரவீந்திரன் (ரொபி) - பத்மாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் பிரியதர்சன் (விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்), மகின்ஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 224 0621**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**பிறப்பு**
**04 . 11 . 1931**



**இறப்பு**
**13 . 11 . 2018**

### கந்தையா சின்னத்தங்கம்

தாவளை இயற்றாலை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தங்கம் நேற்று முன்தினம் (13.11.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மலரகம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக "நெணியன் நேரியதூ" இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"மலரகம்"**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.** (CS 21200) (14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 622 3162**

Fast, Simple, and Quick Courior Delivery Service

# P.P.T
## INTERNATIONAL PARCEL SERVICE

- 12 Hours Parcel Service Jaffna to Colombo
- அனைத்து நாடுகளுக்குமான பொதிகள் சேவை




புறப்படும் நேரங்கள்
8:00 ,9:00,10:00

வாடிக்கையாளர்கள் நன்மை கருதி சொகுசு (A/C) பேரூந்துக் கட்டணங்கள் ரூ. 1200 ஆக விலை குறைக்கப்பட்டுள்ளது

தொடர்புகளுக்கு: யாழ்ப்பாணம் 077 5731318, 0764408947
கொழும்பு 077 5755175, 0764408951

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 . 01 . 1952

உதிர்வு 27 . 10 . 2017

### திருமதி இராஜேஸ்வரி கமலநாதன்

திதி : வளர்பிறை அட்டமி (15.11.2018)



ஆண்டொன்று ஆனாலும்
விழிகளில் தினம் விழிநீர் - தாயே நீ
சென்ற வழி பார்த்து
நித்திய புன்னகை இன்றும்
மறக்கமுடியவில்லை
நித்தம் உம் நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போம்.

இனுவில் மேற்கு,
வட்டுவினி.

குடும்பத்தினர்.

(CS 21111) (14.17)

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### திருமதி சாந்தி கனகரெட்ணம்

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

பதுளையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை முன்னைய வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் வசித்துக் கொண்டிருந்தவருமாகிய திருமதி சாந்தி கனக ரெட்ணம் 13.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசிவம் - இந்திராணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்ற பரமநாதன் மற்றும் பார்வதி தம்பதிகளின் (ஹற்றன்) அன்பு மருமகளும் கனகரெட் ணத்தின் அன்பு மனைவியும் சுகிதர், பூர்ணிமா ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ரமணி நித்தியானந்தன், திரு.செல்வராஜா, திருமதி ஜெயந்தி ரவீந்திரன்(பிரான்ஸ்), திரு மதி ஜானகி(மஞ்சு) - தியாகராஜா (லண்டன்), திரு.இந்திரகுமார்(ISHANI JEWELCASTING) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக்கிழமை மு.ப 11.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 ம்ணிக்கு கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

தகவல்:
கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம். (CS 21202) (14,17) குடும்பத்தினர்.

ராஜா - 077 6041720 / குமார் - 077 7245965
சுகிதர் - 076 669 8085




## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

01.01.2019 முதல் 31.12.2019 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சியஅறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2019

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 15.11.2018 - 28.11.2018 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 29.11.2018 மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 29.11.2018 மு.ப 10.30 மணி

**மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 10,048,200.00 | 100,500.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,422,800.00 | 14,000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 878,700.00 | 8,800.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,198,400.00 | 12,000.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 74,300.00 | 700.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 63,800.00 | 600.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 34,600.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 33,000.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 11,300.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 15,700.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 15,700.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 15,700.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 107,500.00 | 1,100.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,400.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 179,200.00 | 1,800.00 | 750.00 |
| 16 | கைதடிப் பொதுச்சந்தை | 17,100.00 | 500.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 17 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 306,900.00 | 3,100.00 | 750.00 |
| 18 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 58,200.00 | 600.00 | 750.00 |
| 19 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,800.00 | 500.00 | 750.00 |
| 20 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,800.00 | 500.00 | 750.00 |
| 21 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 5,100.00 | 500.00 | 750.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | | |
| 22 | நாவற்குழி பொதுச்சந்தை | 3,100.00 | 500.00 | 750.00 |
| 23 | நாவற்குழி மீன்சந்தை | 3,100.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 15.11.2018 தொடக்கம் 28.11.2018 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித் தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம். அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை. படிவக் கட்டணம். என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 29.11.2018 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை. கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**15.11.2018**

(IN 8366)(14.17)


### வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல்யமான வியாபார நிலையத்திற்கு (O/L, Sale Rep) தேவை.

தொடர்பு - 075 6328 578

### விற்பனைக்கு

NP PR XXXX இலக்கமுடைய MAXMO MAHINDRA BUTTA நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

077 583 3045

(CS 21205) (14.17)

### வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் வேலை செய்வதற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை. (புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள நிறுவனத்திற்கு)

- ✓ முகாமையாளர்
- ✓ குழுத்தலைவர்
- ✓ பணியாளர்

071 014 4400

(CS 21199) (14.17)

ES Printers

பனர் பிரிண்ட் (Banner), 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1979, 3இல் சூரி. செவ். புதன். கி.பா. 8, அரச தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. விவரங்கள், படத்துடன் Viberக்கு அனுப்பவும்.

Viber - 076 702 1622, T.P.: 076 707 4576


## கர்த்தருக்குள் ஓராண்டில் ரெபேக்கா

அன்னை மடியில் 02 . 09 . 2004

ஆண்டவர் மடியில் 15 . 11 . 2017



### செல்வி சிவனேஸ்வரன் ரெபேக்கா

எமக்குள்ளே தொலைந்த மனங்களை ஆத்துமாவா
- திரும்ப வைத்தாய்
நித்தியத்தின் சத்தியத்தை இயேசு என்றுணர்ந்து ருசிக்க
- வைத்தாய்
நிலையான வல்லமை ஜெபமென்று நம்மை முழுந்தாழிட
- வைத்தாய்
வாய் திறந்த வார்த்தைகளை வல்லமையின் வாக்குத் தத்தமாக்கி
- தந்தாய்
ஏனென்று தெரியாமல் ஏந்திய கைகளில் வேதம் தந்து
- வழிகாட்டினீர்
இதோ! நாமெல்லாம் நீர் அடைந்த பரலோக இராட்சியத்தில்
வாழ்வுக்காக மனம் திரும்பி இரட்சிப்பில் வளர்ந்து வாழ்கின்றோம்.

நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் ஆலயமாக இருக்கின்றீர்கள்
ஆமென்.
(2 கொரிந்தியர் 6 : 16)

"பிரகாஸ் பதி"
மாலாவத்தை, புலோலி வடமேற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

# கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம் நவ 15

வவுனியாவில் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுக் காலை நடைபவனி ஒன்றை முன்னெடுத்த துடன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐ.நா அலுவலகத்தில் மனு ஒன்றையும் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபடடவர்கள் அமெரிக்க அரச தலைவரே தமிழர்களை சிங்களவர்களின் இனப்படு கொலையிலிருந்து காப்பற்றுங்கள் என்று எழுதப்பட்ட பாதகையுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் இறுதியில் வவுனியா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நல்லூரில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் 631 நாட்களாக போராடடத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இந் நிலையில் இனியாவது அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகள் எமது பிரச்சனைக்கு நேரடியாக களமிறங்கி தீர்வினைப் பெற்றுத்தரவேண்டும் என வலியுறுத்தினர். (8)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையில்
சிரேஷ்ட ஆசிரியையாக கடமைபுரியும்
**திருமதி சர்மினி குகச்சந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**இராசையா மார்க்கண்டு**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/ ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை**

ஓம் ஸ்ரீ சாயிராம்

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 08 . 1949



உதிர்வு 15 . 11 . 2006

## திருமதி நேசமலர் சின்னத்துரை

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்டவர்.

*அன்புக்கு அணிகலனாய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*பொறுமையின் பொக்கிஷமாய்*
*சுமை தாங்கியாய் வாழ்ந்து*
*எமது இதயத்தில்*
*என்றும் அணையாத் தீபமாய்*
*சுடர் வீசும் எங்கள் அன்பு அம்மாவின்*

திதி: பூர்வபட்ச ஏகாதசி


ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதிவிநாயகப் பெருமானையும், ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

**மானிப்பாய் வீதி,**
**ஆனைக்கோட்டை.**
(cs.21194) (15.17)

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**
**021 221 3058**

## மரண அறிவித்தல்கள்

# கதிரிப்பிள்ளை அழகராஜா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை அழகராஜா நேற்று (14.11.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும் நாரந்தனையைப் பிறப்பிடமாக கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தையா - நேசமணிதம்பதிகளின் அன்புமருமகனும் ஷர்மினி(கனடா), காயத்திரி, காலஞ்சென்ற தாரணி மற்றும் தவஷாந்த், தயானந்த் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலரூபன் (கனடா), றஜீவன், மிதுர்லா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, நடராஜா, அன்னராஜா மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஞ்சலாதேவி, அசோகன், ரஞ்சிதகுமாரி, காண்டீபன், கருணன், உதயசூரியன் ஆகியோரின் மைத்துனரும் லைஷா, றித்திக், நிலாஷா, ஆருக்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் டிப்போ ஒழுங்கை, மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (15.11.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அள்வெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டிப்போ ஒழுங்கை,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# சண்முகம் கைலைநாதர்



தோற்றம் 30.03.1943 — மறைவு 14.11.2018

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கைலைநாதர் நேற்று 14.11.2018 காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் பார்வதியின் பாசமிகு கணவரும் திருமதி சிவகாமியின் அன்புச் சகோதரனும் சுமதி, மாலதி, தயாரூபன் (ஊழியர் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநாயகம், தனபாலசிங்கம், பாமினி ஆகியோரின் மாமனாரும் கஜந்தன் (ஊழியர் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), புவிந்தன், திலக்சன், விஜய்ஷங்கர், மயூரதி, திருக்குமரன், சண்முகேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஒல்லை வைரவர் கோவிலடி,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*



# வல்லிபுரம் சீவரத்தினம்

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், மில் ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் வல்லிபுரம் சீவரத்தினம் நேற்று (14.11.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற வீரவாகு விசாலாட்சி தம்பதியரின் அன்புமருமகனும் பொன்னம்மாவின் (பூமணி) அன்புக்கணவரும் காலஞ்சென்ற பால சுந்தரம், பரமேஸ்வரி, தியாகராசா, தில்லைநாதன், தர்மகுலசிங்கம் மற்றும் விஜய ரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சொக்கலிங்கம், சின்னமணி ஆகியோரின் அன்புமைத்துனரும் ஜனாத்தனி, ஜீவந்தினி, ஜீவதாசன், கிரிதாசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகுணதாசன், ஸ்ரீகிஸ்ணமூர்த்தி, றாதிகா, தாரணி ஆகியோரின் அன்பு மாமனும் விஸ்னுசாந்தினி, கிஸ்னதாசன், குகதாசன், திருசாந்தினி, கிருஷாந்தினி, பிரசாந்தினி, வஜிகரன், தேனுஜன், குகப்பிரியன், டிசானா, சாரமுதன், திருமகள் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மில் ஒழுங்கை, மல்லாகம்.**
**077 169 7425**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## நம்பிக்கையில்லாத்.....

பக்ச தலைமையிலான அரசு தோல்வியடைந்தாக பிரகடனப்படுத்தினார்.

**கூட்டம்**

மைத்திரிபால கடந்த மாதம் 26ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவைத் தடாலடியாகப் பதவி நீக்கம் செய்தார். மகிந்தவை புதிய தலைமை அமைச்சராக நியமித்தார். சட்டரீதியான தலைமை அமைச்சர் தானே என்று ரணில் கூறியதால் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இதற்கிடையில் கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றத்தை மைத்திரி கலைத்தார். இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 17 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. உயர் நீதிமன்றத்தினால் இடைக்காலக் கட்டளை நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்றம் அரச தலைவரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியான 14இல் கூடியது.

**கட்சி தலைவர் கூட்டம்**

நாடாளுமன்றக் கூட்டம் 10 மணிக்கு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கு முன்னதாக காலை 8.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. மகிந்த அணிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர். நாடாளுமன்றத்துக்கான நிகழ்ச்சிப் பத்திரம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய மகிந்த அணிக் கட்சித் தலைவர்கள். மகிந்தவுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி சமர்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறினர். மகிந்த அணிக் கட்சித் தலைவர்களின் முடிவை ஏனையோர் ஏற்கவில்லை.

**சபை ஆரம்பம்**

நாடாளுமன்றம் கூடுவதற்கான அரச தலைவரின் அரசிதழ் அறிவிப்பை வாசித்துக் காட்டிய பின் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகின. நாடாளுமன்றம் அரச தலைவரால் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது, சபாநாயகரின் ஆசனத்திலிருந்து அரச தலைவர். கொள்கை விளக்க உரை நிகழ்த்துவார். ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தரவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப்போன்று மகிந்தவுக்கு தலைமை அமைச்சர் ஆசனம் வழங்கப்பட்டிருந்தது.

**ரணில் - மகிந்த**

நாடாளுமன்றத்தில் நேற்று ஆசனங்கள் மாற்றியமைக்கப்பட்டதால் அவற்றைத் தேடிப் பிடிப்பதில் உறுப்பினர்கள் திணறினர். நாடாளுமன்ற உதவியாளர்கள் அதனைத் தேடிப்பிடித்துக் கொடுத்து உதவினார்கள். நாடாளுமன்றத்தைத் தொடக்குவதற்கான மணி ஒலிக்கத் தொடங்கியது. அரச தரப்பின் வாசல் பக்கத்தால் மகிந்த சபைக்குள் பிரவேசித்தார். ஆளும் கட்சியினர் மேசையில் தட்டி ஆர்ப்பரித்தனர். எதிர்கட்சி உறுப்பினர்கள் வரும் வாசலால் ரணில் விக்கிரமசிங்க உள்ளே வந்தார். ஐக்கிய தேசியக் கட்சியினர் மேசையில் தட்டி வரவேற்றனர்.

**வெறுமையான எதிர்க்கட்சித் தலைவர் ஆசனம்**

தலைமை அமைச்சருக்கான ஆசனத்தில் மகிந்த அமர்ந்தார். ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமரவில்லை. எதிர்க்கட்சித் தரப்பில் நான்காவது வரிசையில், ரணிலும், சம்பந்தனும் அமர்ந்து கொண்டனர்.

**கறுப்புப் பட்டி**

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், 'ஜனநாயகத்துக்காக' என்று எழுதப்பட்ட கறுப்புச் சால்வைகளை கழுத்தில் அணிந்திருந்தனர். அதில் ஒவ்வொரு இலக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. மகிந்த சபைக்குள் வந்தபோதே எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கூச்சல்களும் கேலிகளும் எழுப்பட்டன.

**ஒழுங்குப் பிரச்சினை**

நாடாளுமன்ற செயலர் நாயகத்தினால் நாடாளுமன்றம் தொடர்பிலும், புதிய தலைமை அமைச்சர் நியமனம் தொடர்பிலும் விடுக்கப்பட்ட அறிவிப்புகள் வாசிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பில் சபைக்கு அறிவிக்கப்பட்டது. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நாடாளுமன்றம் கூடுவதற்கான ஒழுங்குப் பத்திரத்தில் தளர்வு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததுடன், அதற்கான வாக்கெடுப்பையும் கோரினார். ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய சபை முதல்வரும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன, நாடாளுமன்றம் இன்று (நேற்று) கூடுவதற்கான அறிவிப்பில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது, அரச தலைவரின் அறிவிப்பு, நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது ஆகிய விடயங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளதனால் அதனைவிட வேறு விடயங்களுக்கு இடமளிக்க முடியாது என்றார்.

இதனைக் கணக்கில் எடுக்காது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார, மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனை அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வழிமொழிந்தார்.

**சபை நடுவே வந்த மகிந்த அணி**

இதனையடுத்து சபாநாயகரைப் பார்த்துக் கூச்சலிட்டவாறு மகிந்த அணியினர் சபைக்கு நடுவே இறங்கிச் சபாபீடம் முன்பாக வந்து நின்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்கள் சபைக்கு நடுவே இறங்குவதை அவதானித்த படைக்கல சேவிதர்கள் உடனடியாக செங்கோலைச் சுற்றிநின்று பாதுகாப்பு வழங்கினர். அரசதரப்பினர் செங்கோலைத் தூக்குவதன் மூலம் சபையைச் செயலிழக்கவைக்க முயற்சித்ததால் படைக்கல சேவிதர்கள் செங்கோலைத் தூக்கி சபாபீடத்திற்குள் வைத்து பாதுகாத்தனர். செங்கோல் இல்லாது சபையை நடத்த வேண்டாம் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். சபை நடத்தலாம், செங்கோல் என்னிடம் தான் உள்ளது ஆகவே இது அங்கீகாரம் பெற்றுள்ளது என்று சபாநாயகர் கூறினார்.

கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்புக்கான மணியை ஒலிக்கவிட்டதுடன், அரச தரப்பினரை அவர்களின் ஆசனத்தில் அமர்ந்து ஆதரவா?, எதிர்ப்பா? என்று பதிவுசெய்யுமாறு பலமுறை கூறினார். எனினும் அவர்கள் அதனை நிராகரிக்கவே குரல் பதிவின் மூலம் வாக்கெடுப்பை நடத்துவதாக அறிவித்த சபாநாயகர் அரசதரப்பினரை பார்த்து ஆதரிக்கின்றீர்களா? எதிர்க்கின்றீர்களா? என்று வினவியபோது அவர்கள் அதனை பொருட்படுத்தாது சபைக்கு நடுவே நின்று கூச்சலிட்டுக்கொண்டிருந்த நிலையில், எதிர்தரப்பை பார்த்து சுமந்திரனின் முன்மொழிவை ஆதரின்கின்றீர்களா? எதிர்க்கின்றீர்களா? என்று கேட்டபோது கைகளை உயர்த்தி ஆதரிக்கின்றோமென கூறினார்கள். இதனையடுத்து பெரும்பான்மை வாக்குகளால் சுமந்திரனின் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறிவித்தார்.

**நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

மக்கள் விடுதலை முன்னணி முன்மொழிந்த மகிந்தவுக்கு எதிராகன நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை நடத்தப்போவதாக சபாநாயகர் அறிவித்த போது அரச தரப்பினரின் எதிர்ப்பு உக்கிரமடைந்தது. சபாநாயகர் ஆசனத்திற்கு முன்பாக நின்று பைத்தியகாரன், பைத்தியகாரன் என்று கூச்சலிட்டதுடன், சில உறுப்பினர்கள் சபாநாயகரை பார்த்து மோசமான கீழ்த்தரமான சைகைகளையும் காட்டினர். அவர்களை ஆசனத்தில் அமர்ந்திருந்து வாக்களிக்குமாறு பலமுறை சபாநாயகர் வலியுறுத்திய போதும், அவர்கள் அதனைக் கேட்காததால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான வாக்கெடுப்பையும் சபாநாயகர் குரல் பதிவினூடாக நடத்தியதுடன் அதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரவளித்ததனால் தலைமை அமைச்சரும் அவரது அமைச்சரவையும் பெரும்பான்மையை இழப்பதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். இதனை அடுத்து சபையில் ஆளும் கட்சியினர் கடும் கூச்சலிட்டு தகாத வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்து சபாநாயகர் மற்றும் ரணில் விக்ரமசிங்க, மங்கள சமரவீர, சுமந்திரன் ஆகியோரை விமர்சித்தனர்.

**வெற்றிக்கொண்டாட்டம்**

சபாநாயகரின் இந்த அறிவிப்பையடுத்து சபைக்கு நடுவே இறங்கிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பெரும் வெற்றிக் கொண்டாட்டத்தில் இறங்கினர். கள்ளத் தலைமை அமைச்சர் பெரும்பான்மையை இழந்தாரென அவர்கள் கூச்சலிட்டவாறும், குதூகலித்தவாறே சபை நடுவே ஆட்டம்போட்டனர். மறுபக்கத்தில் சபாநாயகரின் அறிவிப்பு வெளிவந்த உடனேயே அரசதரப்பினர் சபையைவிட்டுச் வெளியேறி சென்றனர்.

**சபை ஒத்திவைப்பு**

குழப்பங்களை அடுத்து சபையை எதிர்வரும் 21ஆம் திகதிவரை ஒத்திவைக்க சபையின் அனுமதியை சபாநாயகர் கோரிய போது சபை நாளை (இன்று) காலை 10 மணிக்கு கூட்டப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியதையடுத்து சபை நாளை (இன்று) காலை 10 மணிவரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது. (5.10.31)













## மரண அறிவித்தல்

# திருமதி கமலாம்பிகை மயில்வாகனம்



சிற்பனை, 6ஆம் வட்டாரம், வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கெனடி வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை மயில்வாகனம் நேற்று (14.11.2018) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி (முன்னாள் ஊழியர் - வேலணை ப. நோ. கூ. சங்கம், J.P.), ஞானேஸ்வரி, ஞானேஸ்வரன் (ஜேர்மனி), உமாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சத்தியபாலன் (பிரான்ஸ்), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் துளசிதாசன் - சாயிதர்மினி, பிரசன்னா - கௌரி (வவிற்றா), கிருபாகரன் - சுசானா, ரஜனி ரமேஸ், சுதாசினி - பரமேஸ்வரன் (கனடா), தாரணி - ஜெகன், ஸ்ரீகரன் - லக் ஷாயினி (ஜேர்மனி), விஜயகரன், திலீப், ரொபின்சன் சுகிர்தா (ஜேர்மனி), ஜோன்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் துவாரகன், வைஸ்ணவி, ஸ்ருதிகா, தனுசியா, குமரன், தமிழினி, விதுஷா (கனடா), விதுர்ஷன் (கனடா), அபிஷன் (கனடா), கனிஸ்கா, சுவிக்ஷன், சுகிர்தன், ஹர்னிகா, ஹரிபிரசாத், சோபியா, ஜோஸ்வான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப.3.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பா. லோகேஸ்வரி - 077 647 6884,**
**பா. துளசிதாசன் - 076 3785867,**
**ச. பிரசன்னா - 077 482 1969**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



# விஸ்வநாதர் தியாகராசா

துணுக்காய் பரப்புக்காலைப் பிறப்பிடமாகவும், இல.573A, வளநகர் யோகபுரம் மேற்கு, மல்லாவியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் தியாகராசா கடந்த (13.11.2018) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதர் சாந்தநாயகி தம்பதியரின் சிரேஸ்டபுத்திரனும் பொன்னம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மங்கையற்கரசி மற்றும் யோகம்மா (லண்டன்), கமலாம்பிகை (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெகராசா (லண்டன்), தேவராசா (லண்டன்), சதேஸ்னா (ஜெனிதா, இலங்கை), தனராசா (பிரான்ஸ்), விஜயராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கெங்கா (லண்டன்), குமாரி (லண்டன்), லலிதா (லண்டன்), லோகேஸ்வரன் (ஆசிரியர், யோகபுரம் ம.வி), கமனி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோசலன், கோபிசன், மகிஸ், அகிஸ், கயூரி, கிசான், மிதுஸ், நிதுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2018) வியாழக் கிழமை இல. 573A, வளநகர் யோகபுரம் மேற்கு, மல்லாவியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் ஆலங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**077 808 4195** **(மல்லாவி மத்திய கல்லூரி அருகில்)**



# ‘அகத்தி’

> “ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும், தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்!”

## ஆரோக்கியம் தரும் மூலிகைத் தாவரம்

கி.கீர்த்திகன்

‘செஸ்பானியா கிறண்டிபுளோரா’ என்ற தாவரவியற்பெயர் கொண்டும் அழைக்கப்படும் அகத்தி நிறைவான மருத்துவ குணங்களை உடைய மூலிகைத் தாவரமாகத் திகழ்கிறது. இதை ‘அகத்தி’ என்ற பொதுப் பெயர் கொண்டே அழைக்கின்றனர்.

**மருத்துவப் பயன்**

- கண்ணுக்கும், பீனிச நோய்களுக்கும் ஏற்றது.
- வயிற்றில் உள்ள புழுக்களை இல்லாது ஒழிக்கும்.
- உடலில் உள்ள நச்சுக்களை அகற்றும்.
- மலச்சிக்கலைத் தடுக்கும்.
- மயிர் வளர்ச்சிக்கு உதவும்.
- புற்று நோய் ஏற்படுவதைத் தடுப்பதோடு புற்று நோயைக் கட்டுப்படுத்தவும் உதவும்.
- இரும்புச்சத்தை நிறைவாகக் கொண்டது.

**இனங்கள்**

- வெள்ளைப் பூ அகத்தி.
- சிவப்பு பூ அகத்தி.
- ஆரிதாகப் பூக்கும் வர்க்கம்.

**வளர்ச்சிக்கு ஏற்ற காலநிலை**

உலர் வலயப் பிரதேசங்களில் அகத்தியை வெற்றிகரமாகப் பயிரிடலாம். ஏனெனில் அகத்திக்கு வெப்பமான காலநிலை சாலச் சிறந்தது.

**நடுகை**

- நாற்றுக்களை அவற்றின் வேர்கள் பாதிக்கப்படாத வகையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்கள் மிகவும் பொருத்தமானவை.
- நடுகைக் குழியை ‘45 X 45’ சென்ரி மீற்றர் அளவுடையதாகத் தயார் செய்தல் வேண்டும்.
- கூட்டெரு அல்லது சாணம், மேல் மண் என்பன கலந்து நடுகைக்குழியை மூடிவிட வேண்டும்.
- கன்றுகளை நாட்டிய பின்னர் சில நாள்களுக்கு நிழல் வழங்குதல் வேண்டும்.
- நடுகைக்கு ஒளியற்ற நிழலான இடங்களை தெரிவு செய்வதை தவிர்க்கவும்.

**பசளை இடல்**

5 தொடக்கம் 6 மாதங்களுக்கு ஒரு தடவை மாட்டெரு, கூட்டெரு மற்றும் கோழி எரு போன்ற இயற்கைப் பசளைகளை அகத்திக் கன்றின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குரிய ஊட்டமாக இடலாம்.

**அறுவடை**

- அகத்தி நாற்றுகளை நடுகை செய்து 8 மாத காலத்தின் பின்னர் இலைகளையும்,ஒரு வருட காலப்பகுதியில் பூக்களையும் விளைச்சலாகப் பெறமுடியும்.
- இலைகள் மாத்திரமே தேவைக்கு அவசியமாயின் பூ அரும்புகள் தோன்றும் போதே அவற்றை அகற்றிவிட வேண்டும்.
- காலத்துக்குக் காலம் கத்தரிப்பதன் மூலம் அதிக இலைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கத்தரித்தல்!**

- அகத்தி மரம் ஒரு மீற்றர் உயரம் வரை வளர்ச்சியடைந்ததும் நுனி அரும்பை வெட்டிவிட வேண்டும்.
- பல திசைகளில் கண்டு வளரக்கூடியவாறு 3 தொடக்கம் 4 பக்கக் கிளைகளை மாத்திரம் கத்தரிக்காது விட்டு ஏனையவற்றைக் கத்தரித்துக் கொள்ளவும்.
- பக்கக் கிளைகள் 1 தொடக்கம் 1.5 மீற்றர் வரை வளர்ச்சியடைந்ததும், , மீண்டும் அவற்றின் நுனியைக் கத்தரிக்கும் செயற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

# ‘கொய்யா’ சுவையுறு பயன்தருவி!

லக முழுமையும் பிரசித்தமுடைய பயன்தரு பயிராகக் ‘கொய்யா’ விளங்குகிறது. இது ‘மேற்றேசிய’ குடும்பத்தைச் சார்ந்தது.

**நோய் நீக்கி**

இதைப் பழமாகவும்,ஜாம்,ஜெலி மற்றும் பழப்பான மாகவும் ஊட்டம் செய்கின்றனர். கொய்யாவின் சதைப் பகுதியை மாப்போன்று உலர்த்தி,அதை மூலப்பொருளாகக் கொண்டு ஐஸ்கீறிம்,பழச்சாறு,இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கின்றனர். சுவையூட்டியாகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

கொய்யா நிறைவான மருத்துவ குணங்களை கொண்டுள்ளது.குறிப்பாக, ‘வயிற்றுப் போக்கை’ குணப்படுத்த கொய்யாவின் வேர்,தோல்,இலை போன்றனவும், அதன் இளம்காய்களும் பயனுறுதியாக்கப்படுகின்றன. இலையில் இருந்து பெறப்படும் சாற்றைப் பல் தொடர்பான நோய் நீக்கியாகவும், கொலரா நோயாளிகளுக்கு ஏற்படும் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுத்துகின்றனர்.

**பயிரிடல்**

வீட்டுத்தோட்டங்களில், விதைகள் மூலம் கொய்யாப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.நன்கு பழுத்த கொய்யாப் பழங்களில் இருக்கும் சதைப்பகுதியைக் அகற்றி, அதனுள் உட்பொதிந்துள்ள விதைகளைப் நன்கு கழுவி சுத்தம் செய்து அவற்றை நடுகைக்குப் பயன்படுத்தலாம்.

மணல் நாற்றுமேடை அமைத்து அல்லது பொலித்தீன் பைகளில் விதைகளைப் பதியிடல் செய்து கொய்யா நாற்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நாற்றுமேடையில் வளர்ச்சியுறும் நாற்றுக்கள், ‘4 சதம மீற்றர்’ உயரத்தை அடைந்ததும், அதை பொலித்தீன் பைகளுக்கு மாற்றிக் கொள்ளவும். பின்னர் நாற்றுக்கள் 25 தொடக்கம் 30 சதம மீற்றர் உயரத்தை அடைந்ததும், வெளிக்களத்தில் அவற்றை ‘6 X 6’ மீற்றர் அல்லது ‘5 X 5’ மீற்றர் நடுகை இடைவெளியில் நடுகை செய்யவும். இவ்வாறாக ஏக்கர் ஒன்றுக்கு 110 தொடக்கம் 160 வரையான நாற்றுக்களை நடுகைசெய்துகொள்ள முடியும்.

## தொடர்ச்சிகள்....

### பெரும்பான்மையை...

தைத் தொடர்ந்து ஆட்சியை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான பெரும்பான்மைப் பலத்தைத் திரட்டும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் நேற்றுப் பல சுற்றுப் பேச்சுக்களை அந்தக் கட்சித் தலைவர்கள் நடத்தினர்.

மகிந்த மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகியன ஆதரவளித்திருந்தன. இதனால் 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அந்தத் தீர்மானத்திற்குக் கிடைத்திருந்தது. ஆனால், அந்த தீர்மானத்தைத் தாம் ஏற்கப் போவதில்லை என்று அரச தலைவரும் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட புதிய ஆட்சியாளர்களும் தெரிவித்துள்ளனர். இதனால், தனது பெரும்பான்மையை நிரூபித்தால் மட்டுமே ஆட்சியைத் தொடர முடியும் என்கிற நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

மக்களாட்சியைப் பாதுகாக்கும் வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளித்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஜே.வி.பி. ஏற்கனவே அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மகிந்தவிற்கான எதிர்ப்பென்பது ரணிலுக்கான ஆதரவல்ல என்று ஏற்கனவே கூறியிருக்கிறது. இந்த இரு கட்சிகளினதும் ஆதரவு இன்றி ஐ.தே.கவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. குறைந்தபட்சம் கூட்டமைப்பின் ஆதரவாவது இருந்தால் மட்டுமே ரணிலால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

இதையடுத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதில் அந்தக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. நேற்றிரவு முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் முஸ்லிம் கட்சிகளுடனும் அது பேச்சுக்களை நடத்தியது. இந்தப் பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகள் தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

தொடர்ந்து ஐ.தே.க. ஆட்சிக்கு ஆதரவளிப்பதற்குப் பல நிபந்தனைகளை இந்தக் கட்சிகள் விதித்துள்ளன என்று தெரிகிறது. (உ)

### தலைமை...

தலைமை அமைச்சர் ஆசனம் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது. எதிர்க்கட்சி வரிசையில் ரணில் அமர்ந்திருந்தார். நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனையடுத்து சபாநாயகர் கரு ஜயசூரிய, மகிந்த அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்து விட்டதாக அறிவித்தார்.

ஆனாலும் இதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று மகிந்த அணியினர் நேற்று அறிவித்துள்ளனர். நாடாளுமன்றம் இன்று காலை கூடும் போது, தலைமை அமைச்சர் ஆசனம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது. ஆளும் கட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியினரே அமர்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மகிந்த தரப்போ தாமே ஆளும் கட்சி என்று நேற்று மாலையும் தெரிவித்திருந்தது. இதனால் நாடாளுமன்றத்தில் இன்று குழப்பங்கள் வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

### கூட்டமைப்புக்கு...

முன்னதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஊடாக, கூட்டமைப்பில் இணைவதற்கு வியாழேந்திரன் முயற்சிகளை மேற்கொண்டார். கூட்டமைப்பில் இணைவதற்கு வியாழேந்திரன் விரும்புகிறார். இணைத்துக் கொள்வீர்களா? என்று ரவி கருணாநாயக்க கூட்டமைப்பினரிடம் வினவியுள்ளார். அதற்கு கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது. அப்படியானால் அவரை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்ளட்டுமா என்று ரவி கருணாநாயக்க கேட்டுள்ளார். அவரை இணைத்துக் கொண்டால், கூட்டமைப்பின் 14 வாக்குளையும் இழக்க வேண்டி வரும் என்று கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு, வியாழேந்திரன் அலைபேசி ஊடாக அழைப்பு ஏற்படுத்தியுள்ளார். கட்சித் தலைவர் சம்பந்தனுடன் பேசுமாறு கோரியுள்ளார். இரா.சம்பந்தன் ஏற்கனவே திட்டவட்டமாக மறுத்துள்ளமையை, சார்ள்ஸ் நிர்மலநாதன் வியாழேந்திரனுக்கு தெரியப்படுத்தி அலைபேசி அழைப்பைத் துண்டித்துள்ளார். (5,10)

## சிவசக்தி...

தலை முன்னணியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கையெழுத்திடவில்லை. அதேபோன்று கூட்டமைப் பிலிருந்து கட்சி தாவிப் பிரதி அமைச்சுப் பதவியை ஏற்ற வியாழேந்திரனும் கையெழுத்திடவில்லை. கூட்டமைப்பின் ஏனைய 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டனர். (5,10)

## ரணில்...

மகிந்த அணி தெரிவித்துள்ள நிலையிலும், நாடாளுமன்றம் இன்று கூட்டப்படவுள்ள நிலையிலும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த கட்சித் தலைவர்களை இன்று காலை 8.30 மணிக்குச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பில் பங்கேற்பார் என்று கூறப்படுகின்றது. ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்களும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

நாட்டில் மேலும் மேலும் வலுவடைந்து வரும் அரசியல் குழப்ப நிலை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

## மகிந்த...

நாடாளுமன்றத்தில் மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றதையடுத்து, மகிந்த நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்திருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் சந்திப்பு நடத்தியிருந்தார். அதன் பின்னரே, நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றும் முடிவை மகிந்த எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (5)

## மகிந்த பதவி...

யாது. இவ்வாறு மைத்திரி மகிந்த அணியினர் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்திருந்தார். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தியது. இந்தச் சந்திப்பில் சபை முதல்வர் தினேஸ் குணவர்த்தன, அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தயாசிறி ஜயசேகர, சுசில் பிரேமஜெயந்த, பந்துல குணவர்த்தன, பைசர் முஸ்தபா, கெஹெலிய ரம்புக்வெல உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**தினேஸ் குணவர்த்தன**

நாடாளுமன்ற வரலாற்றில் இன்று மிகவும் சோகமான நாளாகும். இதற்கு முன்னர் எந்தவொரு சபாநாயகரும் நடந்து கொண்டிராத விதத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய நடந்து கொண்டுள்ளார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றில் வழக்கொன்று விசாரணையில் உள்ள நிலையில் நாடாளுமன்றத்தைக் கூட்டி நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறியும் நிலையியற் கட்டளைகளை காலால் உதைத்தும் பக்கச் சார்பாக நடந்து கொண்டுள்ளார். இன்று நடைபெற்றது உத்தியோகப்பூர்வமற்ற கட்சித் தலைவர்கள் கூட்டமே. அரச தலைவரின் கொள்கை விளக்க உரையை தொடர்ந்து நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்படுவதே சம்பிரதாயமாகும். அவ்வாறே நிகழ்ச்சி நிரலிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. மகிந்தவுக்கு சபையில் தலைமை அமைச்சரின் கதிரை ஒதுக்கப்பட்டிருந்தது. அமைச்சர்களுக்கான கதிரையும் ஒதுக்கப்பட்டிருந்தது. புதிய அரசு சட்டப்பூர்வமானதென சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், நிலையியற் கட்டளைகளை பின்பற்றாது நடந்து கொண்டுள்ளார். பெரும்பான்மை இல்லாது அரசொன்றை கொண்டுசெல்ல முடியும்.

நாடாளுமன்றத்தில் இன்று (நேற்று) நடந்த வாக்கெடுப்பும் செல்லுபடியற்றதாகும். நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு கோரப்படுவதற்கு இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமையுள்ளது. ஆனால் குரல் மூலம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுவதாக சபாநாயகர் அறிவித்து எவர் ஆதரவு? எவர் எதிர்ப்பு? எனக் கேட்கிறார். எத்தனை பேர் வாக்களித்தனர் என்றும் அறிவிக்கப்படவில்லை.

**விமல் வீரவன்ச**

நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்றே (நேற்று) இடம்பெறுகிறது. வழமையாக இதனை உள்நாட்டில் உள்ள சில ஊடகங்கள் மாத்திரமே சேகரிக்கும். ஆனால் இன்று பன்னாட்டு ஊடகங்களும் மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகளும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களும் பார்வை அறையில் நிரம்பியிருந்தனர். இதற்கு காரணம் என்ன? அவர்களின் நிகழ்ச்சி நிரல்தான் இது. என்னதான் நடந்தாலும் நாங்களே அரசு. மகிந்தவே நாட்டின் தலைமை அமைச்சர் எனக் குறிப்பிட்டார்.

**நிமல் சிறிபாலடி சில்வா**

மகிந்த தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட அரசிதழ் அறிவித்தல் இன்று சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் கதிரையிலும், ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியிலும் அமர்ந்திருந்தனர். இதில் தெளிவாகுவது என்னவெனில் புதிய அரசு சட்டப்பூர்வமானது. நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்திலும் அரச தலைவரின் கொள்கை விளக்க உரைக்கு பின்னர் சபை ஒத்திவைப்பது தொடர்பிலேயே கூறப்பட்டுள்ளது. இவையனைத்தையும் சபாநாயகர் காலால் எட்டியுதைத்து அவருக்கு இல்லாத அதிகாரத்தை நிலையியற் கட்டளையை மீறி எடுத்துக்கொண்டுள்ளார். இந்த வாக்கெடுப்புச் செல்லாது - என்றார். (5,61,31,10)

## சபாநாயகரின்...

சபாநாயகர் கரு, அரசமைப்புக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார். சபாநாயகரின் கடிதத்தை அரச தலைவர் ஏற்க மறுத்துள்ளார்.

அரச தலைவருக்கு சபாநாயகர் அனுப்பியுள்ள கடிதத்தில், இந்த மாதம் 4ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசிதழுக்கு அமைவாக நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. நாடாளுமன்றத்தில் வழமையாக இடம்பெறும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிலையியற் கட்டளைகளை நீக்குமாறு முன்வைத்த கோரிக்கை பெரும்பான்மையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்தார்கள். தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலே சபையின் கருத்துக்களை கோர வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

எதிர்தரப்பினரும் இவர்களது கோரிக்கையை வரவேற்றதைத் தொடர்ந்து சபாநாயகரால் வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றமையைத் தொடர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இன்று காலை 10 மணி வரை நாடாளுமன்றத்தை ஒத்திவைக்குமாறு முன்வைத்த முன்மொழிவிற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இந்தக் கடிதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சபாநாயகருக்கு நேற்று மாலையே கடிதம் அனுப்பியுள்ளார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட முறை நாடாளுமன்ற, சம்பிரதாயங்களுக்கு முரணானது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முதலாவது பந்தி தனது நடவடிக்கை தவறானது என்று கூறியுள்ளது. இதனை ஏற்க முடியாது என்று சபாநாயகருக்கு அனுப்பிய பதிலில் கூறியுள்ளார். (5,10,71)

## ஐந்து...

பினர் பௌசி நேற்றுமுன்தினமே ரணிலைச் சந்தித்து ஆதரவு தெரிவித்திருந்தார். நாடாளுமன்றம் நேற்று ஆரம்பமாகும் போதே ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் அமர்ந்திருந்தார். சபை நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும்போது ஆளும் கட்சியிலிருந்து பியசேன கமகே மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி வசம் வந்து அமர்ந்தனர்.

நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் வசந்த சேனநாயக்க, வடிவேல் சுரேஷ்; ஆகியோர் ஐ.தே.கவுடன் வந்து அமர்ந்தனர். (5,61)

## பழைய...

தார்.

அரச தகவல் திணைக்களத் தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக தற்பொழுது நடைமுறைபடுத்தப்படும் 2017ஆம் ஆண்டு இல 17 கீழான மாகாண சபைத் தேர்தல் (திருத்தம்) சட்டத்தில் திருத்தப்பட்ட 1988 இலக்க 2 இன் கீழான மாகாணசபை சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ நடைமுறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு தேவையான வாக்காளர் தொகுதி நிர்ணய பணிகள் இதுவரை நிறைவடையவில்லை.

மாகாணசபைத் தேர்தல் துரிதமாக நடத்தப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு இந்த முறை மாத்திரம் விகிதாரச முறையில் தேர்தல் நடத்துவதற்குரிய சட்டத் திருத்தங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஆனால் 25 சதவீதம் பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்தத்தை அதில் உள்ளடக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (5)

## எந்த...

யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார். (5)

## இன்று...

ணத்தால் இலங்கையின் வடக்கில் பலத்த காற்று வீசக்கூடும் என்று பேரிடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவாகியுள்ள கஜா புயல் நேற்றிரவு சென்னைக்கு கிழக்கே 490 கி.மீ. தூரத்திலும் நாகப்பட்டினத்துக்கு வடகிழக்கே சுமார் 580 கி.மீ. தூரத்திலும் நிலை கொண்டிருந்தது என இடர்முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கஜா புயல் இன்று மாலை 4.30 மணிக்கும் இரவு 9.00 மணிக்கும் இடையில் கடலூர் மற்றும் பாம்பன் இடையே கரையைக் கடக்கும். கஜா புயல் கரையைக் கடக்கும் போது இலங்கையின் வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 70 கி.மீ. முதல் 80 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். உட்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 50 கி.மீ முதல் 60 கி.மீ. வ்ரை வீசக்கூடும். சில நேரங்களில் காற்று 90 கி.மீ. வேகத்தில் கூட வீச வாய்ப்புண்டு.

இன்று காலை முதல் மழை பொழிவு இருக்கும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## ரூபாவின்...

ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூபா 177.62 ஆகப் பதிவாகியுள்ளது. (5)

## ரணிலுக்கு...

பேரும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். அலரி மாளிகையில் நேற்றிரவு 6.30 மணியிலிருந்து இரவு 8 மணி வரை பேச்சு இடம்பெற்றது.

இந்தப் பேச்சுக்களில் அரசமைப்பு விவகாரம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் என்பன முதன்மை இடம்பிடித்தன.

கூட்டு அரசின் காலத்தில், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முழுமையான அரசமைப்பு வரைவு ஒன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது. அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்திற்கு அந்த வரைவு முன்வைக்கப்படவிருந்த நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்தார். எனவே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடரவேண்டும் என்று கூட்டமைப்பு ஐ.தே.கவிடம் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் முறைமை தொடர்பில் இணக்கம் காணப்படாவிட்டால், அதனைத் தவிர்த்து அதிகாரப் பகிர்வு மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு ஆகியவற்றைக் கொண்டு புதிய அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வனஜுவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அதிகார சபை ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புத் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பில் இதனை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியும் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய உடனடி மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில், கடந்த காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதும் கூட்டமைப்பால் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தாம் ஆட்சிக்கு வந்ததும் பகுதி பகுதியாக தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று அப்போது ஐ.தே.கவால் உறுதிகூறப்பட்டுள்ளது.

போர்க் குற்றவிசாரணைக்கு ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளவாறு கலப்பு நீதிமன்றப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் கூட்டமைப்பினால் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஐ.தே.க. தரப்பிலிருந்து அதற்குப் பதில் வழங்கப்படவில்லை.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளையே நிறைவேற்றாதபோது இப்போது மட்டும் எப்படி அவரை நம்புவது என்கிற கேள்வி கூட்டமைப்பினரால் முன்வைக்கப்பட்டது. அதற்குத் தமது கட்சி ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இணக்கம் ஒன்று ஏற்பட்டால் அது எழுத்து மூலமானதாக இருக்கவேண்டும் என்றும் அது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

“உங்களின் ஆட்சிக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படும்போது தான் எங்களை அழைத்துப் பேசுகின்றீர்கள். அதன் பின்னர் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து போகின்றீர்கள். சின்ன விடயங்களைக்கூட நடைமுறைப்படுத்துகின்றீர்கள் இல்லை. இப்படியான நிலையில் நாங்கள் உங்களுக்கு எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது?" இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரசாரமாக ரணிலிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் இருதரப்பினருக்கும் இடையில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை. மீண்டும் கூடிப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-5,105)



# றேஞ் லயன்ஸ் அணி வென்றது

யாழ்ப்பாணம், நவ. 15

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் பீறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ் லயன்ஸ் அணி வெற்றிபெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றேஞ் லயன்ஸ் அணியை எதிர்த்து றேஞ் ரைகர்ஸ் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் றேஞ் லயன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சிறைச்சாலை கால்பந்து அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், நவ. 15

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சிறைச்சாலை கால்பந்தாட்ட அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறைச்சாலை கால்பந்தாட்ட அணி மோதியது.

முதல் பாதியில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது சிறைச்சாலை கால்பந்தாட்ட அணி. இரண்டாவது பாதியில் சென். நீக்கிலஸ் அணி பதிலடி கொடுத்தது. அடுத்த சில் நிமிடங்களில் சிறைச்சாலை கால்பந்தாட்ட அணியால் மற்றொரு கோல் பதிவானது. இதையடுத்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சிறைச்சாலை கால்பந்தாட்ட அணி. (ம-23)



# றேஞ் கிங்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 15

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் தீபாவளியை முன்னிட்டு நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றேஞ் பையிற்ரஸ் அணியை எதிர்த்து றேஞ் கிங்ஸ் அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் றேஞ் கிங்ஸ் அணி வெற்றிபெற் றது. (ம-23)



# தொடரை இழந்தது மிக மோசமானது!


## பிரீத்வைட் வருத்தம்

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரை முழுமையாக இழந்தது படுமோசமானது என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் பிரீத்வைட்.

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தோல்வி தொடர்பில் பிரீத்வைட் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெறாமல் தொடரை முழுமையாக இழந்தமை மிகமிக மோசமானது. ரி-20 ஆட்டங்களில் உலகச் சம்பியனாக உள்ள நிலையில் ஒரு தொடரில் வழித்துத் துடைக்கப்படுவது கேவலமானது - என்றார். (ம)





# போராடி வெற்றி பெற்றது போக்குவரத்துச் சபை அணி

யாழ்ப்பாணம், நவ. 15


இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபை அணி போராடி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்துச் சபை கால்பந்தாட்ட அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந் தது.


சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இலங்கை போக்குவரத்துச் சபை அணி. (ம-23)

# பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் 2019ஆம் ஆண்டுக்கான தென்மராட்சி பிரதேச விளையாட்டு விழாவை சிறப்புற நடத்துவதற்கான முன்னா யத்த கலந்துரையாடல் நாளை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபுவின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டுக் கழகம் சார்பாக தலைவர், செயலாளருடன் மகளிர் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-288)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட குத்துச் சண்டையில் கலந்துகொண்டு 9 பதக்கங்களை வென்ற வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலத்தின் பெண்கள் அணியினர் கடந்த 12ஆம் திகதி கல்லூரிச் சமூகத்தால் மதிப்புறுத்தப்பட்டனர். (ம-222)



## கார்ல்சன் – பபியோனா ஆட்டம் சமநிலையில்!

உலக சம்பியன்ஷிப் சதுரங்கத் தொடரில் கார்ல்சன் - பபியோனா இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

உலக சம்பியன்ஷிப் சதுரங்கத் தொடர் நோர்வே வீரர் கார்ல்சன் அமெரிக்க வீரர் பபியோனா இடையில் லண்டனில் நடைபெற்று வருகிறது. 12 சுற்றுக்களைக் கொண்டதாக போட்டி நடத்தப்படுகிறது. 12 சுற்றுக்களின் முடிவில் அதிக புள்ளிகளைப் பெறும் வீரர் உலக சம்பியனாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். முதல் இரண்டு சுற்றுக்கள் சமநிலையில் முடிந்த நிலையில் மூன்றாவது சுற்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


4 மணித்தியாலம் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டம் சமநிலையில் முடிவு கண்டது. (ம)

## ஏ அணியிலிருந்து ரோகித் விடுவிப்பு!




தொடர்ச்சியாக பல்வேறு பன்னாட்டுத் தொடர்களில் பங்குபற்றி வருவதால் பணிச் சுமையைக் கருத்தில் கொண்டு இந்திய ஏ அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார் ரோகித் சர்மா.

இந்திய அணியில் தொடர்ச்சியாக விளையாடி வரும் வீரர்களின் பணிச் சுமைகளைச் சமாளிப்பதற்காக ஏ அணியில் இருந்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவ்வப்போது விடுவிக்கும். இந்திய அணியின் தலைவர் கோக்லி அவ்வாறு இந்திய ஏ அணியில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் இந்திய அணியின் உபதலைவர் ரோகித் சர்மாவும் பணிச்சுமைக்கு அதிகளவில் உள்ளாகின்றார் என்றும் அவரையும் ஏ அணியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மருத்துவக் குழு அண்மையில் கோரியிருந்தது. இதையடுத்து இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ரோகித்தை ஏ அணியில் இருந்து விடுவித்தது. (ம)



# றோயர் பெடரர் அதிரடி வெற்றி

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் பெடரர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் 8 இடங்களில் உள்ள வீரர்களுக்கு இடையில் ஆண்டின் இறுதியில் தொடரொன்று நடத்தப்படும். இந்தத் தொடர் உலக சம்பியன்ஷிப் என்று அழைக்கப்படுகிறது. இந்த வருடத்துக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பெடரர் மற்றும் தியம் இருவரும் மோதினார்கள்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவில் கைப்பற்றினார் பெடரர். அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)




## அன்டர்சன் அதிரடி விளையாட்டு

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் தென்னாபிரிக்க வீரர் கெவின் அன்டர்சன்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அன்டர்சனை எதிர்த்து நிசிகோரி மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் அன்டர்சன்.

அவர் இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றையும் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

## ஐ.பி.எல்லை எதிர்பார்த்து காத்துள்ளேன்

### ஏ.பி. அறிவிப்பு

''அடுத்த வருட ஐ.பி.எல். தொடரை எதிர்பார்த்துக் காத்துள்ளேன்'' என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவரும் ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடி வருபவருமான வில்லி யர்ஸ்.

அடுத்த வருட ஐ.பி.எல். தொடர் தொடர்பில் வில்லியர்ஸ் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து ரி-20 லீக்குகளையும் விட ஐபிஎல் உலகின் மிகப் பெரிய ரி-20 லீக். விராட் கோக்லி மற்றும் என் அணியான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூ ரின் சக வீரர்களுடன் மீண்டும் இணைய என்னால் நீண்ட நாள்கள் காத்திருக்க முடியாது.

விரைவில் இணைய ஆவலாக இருக்கிறேன். இம்முறை 2018ஆம் ஆண்டுத் தொடரின் ஏமாற்றங்களையெல்லாம் நாங்கள் அணியாகத் திரண்டு துடைத்தெறிவோம். பெங்களூர் அணியிடம் கிண்ணம் வெல்லக் கூடிய ஆற்றல் உள்ளதுதான். ஆனால் இதுவரை ஏன் வெல்ல முடியவில்லை என்பது ஒருவருக்கும் தெரியாத புதிராக உள்ளது. 2019ஆம் ஆண்டு விடவேமாட்டோம்.

இந்தியாவில் தேர்தல் நேரம் என்பதால் ஐ.பி.எல். இந்தியாவில் நடக்குமா என்பது தெரியவில்லை. இந்தியாவில் ஐபிஎல் நடைபெறுவதுதான் சிறந்தது. காரணம் இந்திய ரசிகர்கள் அற்புதமானவர்கள். அவர்களை கேளிக்கைப்படுத்துவதுதான் முக்கியம். எங்கு நடந்தாலும் ஐபிஎல் கிரிக்கெட் 7 வாரங்களுக்கு பெரிய கேளிக்கை விருந்து படைக்கும் ஒரு தொடராகும் - என்றார். (ம)





## ஊழல் குற்றச்சாட்டில் தில்காரா நீக்கம் பன்னாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை

ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை அணியின் வீரர் தில்காரா லொகுதிகேவை பன்னாட்டுக் கிரிக்கெட் சபை தடைசெய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி சூதாட்டப் பிரச்சினைகளில் தொடர்ந்து சிக்கித்தவித்துவருகிறது. இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் தெரிவுக் குழுவின் தலைவருமான சனத் ஜெயசூரியா மீது அண்மையில் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டை முன்வைத்த பன்னாட்டுக் கிரிக்கெட் சபை, அது குறித்து விளக்கம் வழங்குமாறு அவருக்கு உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து இலங்கை அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் சொய்சாவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தில்காரா லொகுதிகேவுக்கு எதிராக தற்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த வருடம் 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் தில்காராவும் கலந்து கொண்டார். இந்தத் தொடரிலயே தில்காரா ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (ம)

# இங்கிலாந்து அணி சுமாரான ஆரம்பம்



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று இங்கிலாந்து அணி சுமாரான ஆரம்பம் கண்டது. அந்த அணி முதல் இன்னிங்ஸுக்காக 285 ஓட்டங்களைக் குவித்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக பேர்ண்ஸ் மற்றும் ஜெனிங்ஸ். ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் ஜெனிங்ஸ். எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று மூன்றாம் நிலை வீரராகக் களமிறக்கப்பட்டார் ஸ்ரோக்ஸ். அவர் 19 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணித் தலைவர் ரூட்டால் முடிந்தது வெறும் 14 ஓட்டங்கள். ஆரம்ப வீரர் பேர்ண்ஸை 43 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் தனஞ்சய. மத்திய வரிசையில் பட்லர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் அடித்தாடிக் கொண்டிருந்தார். குறிப்பாக தனஞ்சயவின் பந்துவீச்சு சிறப்பான முறையில் இங்கிலாந்தின் வீரர்களால் கவனிக்கப்பட்டது. மொயின் அலி 10 ஓட்டங்களுடனும், போக்ஸ் 19 ஓட்டங்களுடனும் ஏமாற்றினர். 63 ஓட்டங்களுடன் பட்லரை வீழ்த்தினார் கேரத்துக்குப் பதிலாகத் தெரிவுசெய்யப்பட்டவரான புஸ்பகுமார. 225 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்தது இங்கிலாந்து. எனினும் இறுதி இலக்குக்காக 50 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன். அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தார் கரன். இணைப்பாட்டமாக 60 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 64 ஓட்டங்களுடன் கரன் ஆட்டமிழக்க 285 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 4 இலக்குகளையும், புஸ்பகுமார 3 இலக்குகளையும், தனஞ்சய 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி ஓர் இலக்கை இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நாள் முடிவு கண்டது. (ம)

## தரப்படுத்தலில் பாக். முதலிடம்

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ரி-20 தரப்படுத்தலில் பாகிஸ்தான் முதலிடத்தில் தொடர்கிறது. 138 புள்ளிக ளுடன் பாகிஸ்தான் முதலிடத்திலும், 127 புள்ளிகளுடன் இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. தீவுகளுக்கு எதிரான ரி-20 தொடரை 3:0 என்று முழுமையாகக் கைப்பற்றியதை அடுத்து இந்திய அணியின் புள்ளிகள் கணிசமான உயர்வைக் கண்டுள்ளன. (ம)

## சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷின் பக்கம் காற்று!



சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றிபெறக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே வெற்றிபெற்ற காரணத்தால் தற்போது நடைபெற்றுவரும் ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி பங்களாதேஷுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 7 இலக்குகளை இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக ரகிம் ஆட்டமிழக்காமல் 219 ஓட்டங்களையும், ஹக்கியூ 161 ஓட்டங்களையும், மிராஸ் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாவிஸ் 5 இலக்குகளையும், சாரற, திரிபானோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே 304 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரெய்லர் 110 ஓட்டங்களையும், மூர் 83 ஓட்டங்களையும், சாரி 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இஸ்லாம் 5 இலக்குகளையும், மிராஸ் 3 இலக்குகளையும், ஹக்கியூ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக மகமதுல்லா 101 ஓட்டங்களையும், மிதுன் 67 ஓட்டங்களையும், மிராஸ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாவிஸ், திரிபானோ இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
443 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 2 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் முடிவுக்கு வந்து. (ம)

## பெடிசிடம் தோற்றது பார்சிலோனா

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் பெடிஸ் அணி வெற்றிபெற்றது.
ரியல் பெடிஸ் - பார்சிலோனா அணிகள் இந்த ஆட்டத்தில் மோதின. ஆட்டத்தின் ஆரம்பமே ரியல் பெடிஸ் அணிக்குச் சாதகமாக அமைந்தது. 20ஆவது நிமிடத்தில் பிப்ரோ பெடிஸின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 34ஆவது நிமிடத்தில் ஜெக்லின் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரியல் பெடிஸ்.
இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணி பதிலடி கொடுப்பதற்காக பலமுறை முயற்சி செய்தது. பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி ரியல் பெடிஸின் வீரர்களால் முறையற்ற விதமாக சில தடைவைகள் கட்டுப்படுத்தப்பட்டார். 71ஆவது நிமிடத்தில் செல்சோ ரியல் பெடிஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய அந்த அணி வலுவான ஆதிக்கம் செலுத்தியது. 68ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். விடால் 79ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 83ஆவது நிமிடத்தில்சேர்ஜியோ பெடிஸின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார். ரியல் பெடிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றுக்கொண்டிருந்தது. மெஸ்ஸி 90ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவு செய்தார். எனினும் முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பெடிஸ். (ம)

விருந்தினர் விடுதிக்கு
வேலை ஆள்கள் தேவை
யாழ். நகரில் உள்ள விருந்தினர் விடுதிக்கு வேலையாள்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
T. P : 077 9592 628

ஷாம்சன் மொழியாய்வு மையத்தின் 3 மாத
சிங்களம்
10 சிங்கள புத்தகங்கள் இலவசம்
உடன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!
சிங்களம் எழுதுதல், வாசித்தல் பயிற்சிகளுடன் நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் எவராலுமே 3 மாதங்களில் சரளமாக சிங்களத்தில் உரையாடமுடியும்.
இப் பயிற்சியில் இணையவிரும்புவோர் எமது அலுவலகத்தில் தாம் விரும்பிய பயிற்சிநேரம், நாள் என்பவற்றை தெரிவு செய்யமுடியும்.
ஒவ்வொரு பிரிவுகளிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி!
இவ்வாரம்வரை பதிவுசெய்வோருக்கு மட்டுமே பயிற்சிக்கட்டணம் ரூபா 3000.
சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் வகுப்புகளில் பங்குபற்றமுடியும்.
SAAMSON Experts in Language Training
279, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.